கல்கி

KALKI 20-4-80 90 காசு




வாரீர் புதுமை தவழ்ந்திட.
Liril
THE FRESHNESS SOAP
Liril
பார்த்தறியாப் புதுமை. பரவசக் கிளுகிளுப்பு.
லிரில். அலையெறியும் தாதள பச்சை. அதன்
நயமோ குளுகுளு எலுமிச்சை...புதுக்
குமரியாய் உங்களைப் பூரித்தெழ வைக்கும்.
லிரில்
புத்துணர்வு சோப்
மனம்குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி வெள்ளம்.
லின்டாஸ்-LR.27-203 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

கல்கி

சந்தா விவரம்

★

	ஓராண்டு	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 46	ரூ. 23
இலங்கை (இந்திய நாணயப்படி)	ரூ. 64	ரூ. 32
இதர வெளிநாடுகள்	ரூ. 100	ரூ. 50

மானேஜர்
கல்கி, சென்னை-600 032

● சிவசங்கரியின் 'அம்மா' வித்யாவை மட்டும் விசும்ப வைக்கவில்லை. என் போன்றவர் அனைவரையும் விசும்ப வைத்தது. தாயின் அன்பு எந்நாட்டவர்க்கும் ஒன்றே என்பதை எவ்வளவு தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்.

காதங்குப்பம் — வித்யாசாகர்

● கடைசி அத்தியாயத்தைப் படித்து முடித்தவுடன் கண்ணீர் வந்து விட்டது. தாய்ப் பாசம் உள்ளத்தில் இருக்க வேண்டும். வெறும் வேஷத்தாலும் நடிப்பினாலும் காட்ட முடியாத ஒன்று என்பதை வெகு அழகாக எடுத்துக் காட்டிய சிவசங்கரி அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். கதையை இவ்வளவு சீக்கிரம் முடிப்பார் என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை!

சென்னை-33 — ஆர். முரளிகுமார்

● மனதிற்கு நிறைவான, என்றும் நினைவில் நிற்கும்படியான நாவல்களைச் சொல்லிவைத்தாற்போல் ஏழு அல்லது எட்டு வாரங்களில் முடித்துவிடுவதைப் பார்த்தால் இந்தக் 'கவலி' மேல் வரும் கோபத்தில்....!

பெங்களூர்-5 — அ. குமார்

● கதையை 'எலாஸ்டிக்' போல் இழுப்பாரோ என்று பயந்தேன். நல்லவேளை சிவசங்கரி எங்களைக் காப்பாற்றிவிட்டார்.

சென்னை — மதுரை மணியன்

● இந்த இதழில் வெளியாகியிருக்கும் நான்கு சிறுகதைகளுமே 'மணி மணி'யானவைதாம்! என் நெஞ்சம் மிகவும் ரசித்தது, பிரேம்சந்த் எழுதிய ''பெரிய இடத்துப் பெண்'' சிறுகதையே. மணிகளில் இது ''வைர மணி!''

விரபாண்டி. — வடிவேல அன்புச்செல்வன்

● செம்பியனுக்குப் பதில் அளிக்கும் அவசரத்தில் எங்க அப்பன் குதிருக்குள் இல்லை என்று கூறுவது போல் வழக்கமாகத் தவறுகள் செய்வோம், அன்றுதான் ஒரு தவறும் செய்யவில்லை என ஜெனரல் ஆஸ்பத்திரி டீன் கூறுவது ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருக்கிறது.

கோவை — கே. ராஜகோபால்

● என்னதான் சொல்லுங்க, சரித்திரக் கதை எழுதுவதில் சாண்டில்யன்தான் சக்கரவர்த்தி. அப்பப்பா! வாராவாரம் என்ன அழகான நடையுடன் 36 அத்தியாயங்களைத் தாண்டிவிட்டார். இனி என்ன நடக்குமோ என்ற ஆவல் தானாகவே எழுகிறது.

சென்னை-4 — மயிலை ரகு

● 'கம்பீரம் என்ற வார்த்தைக்கு விளக்கம் கிருஷ்ணனின் உரை என்றால் எளிமைக்கு எடுத்துக்காட்டு கோபாலனின் உரை!' என்ற வாசகத்தைக் கடுகு பதில்கள் பகுதியில் படித்து மெய் சிலிர்த்தேன்.

கிருஷ்ணனின் உரைதான் கீதை. அது எவ்வளவு கம்பீரமானது! மாடு மேய்க்கும் சிறுவர்களோடு சிறுவனாக எல்லாம் வல்ல இறைவன் கோபாலனாகக் காட்சியளித்தான் இது அவனது எளிமைக்கு எடுத்துக்காட்டு!

'ராஜகோபாலன்' என்ற பெயரை ராஜாஜிக்குத் தேர்ந்தெடுத்த அவரின் பெற்றோரும் உறவினரும் 'ராஜ' என்றதன் மூலம் அவர் கம்பீரத்துடன் திகழ வேண்டும்; 'கோபாலன்' என்றதன் மூலம் எளிமையுடன் காட்சி தரவேண்டும் என்ற எண்ணத்துடனேயே அப்படிப் பெயர் வைத்தார்களோ என்னவோ. ஆனால் அவர் அப்படித்தான் நடந்துகொண்டார்!

சென்னை-75 — வி. ச. வாசுதேவன்

● கல்லூரியில் குவிஸ் பகுதியில் புகாஸ் லாவிய செய்தி நிறுவனத்தின் பெயர் டான் ஜிங் என்று உள்ளது. இது தவறு. டான்ஜக் என்பதே சரி.


புதுதில்லி — கே. ஸ்ரீனிவாசன்

● ''உல்லாசப் பறவைகள்'' படத்தில் வெண்ணிற ஆடை மூர்த்தி கனவில் வெள்ளைக்காரியுடன் கொஞ்சுவது எங்கே சார் வந்தது? படம் பார்த்து ஏமாந்ததுதான் மிச்சம். அந்தக் காட்சியே படத்தில் இடம் பெறவில்லை! சார்!

சென்னை-28 — வா. ரா. சுந்தரராஜன்

தயாரிப்பாளர்களே வெட்கம் தாங்காமல் வெட்டி எறிந்து விட்டார்களோ என்னவோ? ரொம்ப நல்ல தாய்ப் போயிற்று போங்கள்! — ஆர்





சநாதன சமயம் சமுத்திரம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜயேந்திர ஸரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகள்

ஹிந்து சமய ஸித்தாந்தத்தை ஸமுத்திரத்துக்கு ஒப்பிடலாம். ஸமுத்திரத்தின் விஸ்தீர்ணத்தையும் நீளத்தையும் ஆழத்தையும் கரையையும் கண்டு பிடிக்க முடியாது. ஹிந்து ஸமயத்தின் தத்துவங்களையும் ஸித்தாந்தங்களையும், கலாசாரத்தையும் பரிபூர்ணமாக எவராலும் அறிய முடியாது.

ஸமுத்திரத்தில் பெரும் பெரும் அலைகள் வந்து போகும். ஹிந்து சமயத்தில் அவ்வப்போது பெரிய பெரிய மகாபுருஷர்கள் தோன்றிப் போவார்கள்.

ஸமுத்திர ஜலத்தை அப்படியே நம்மால் நேராக உபயோகிக்க முடியாவிடினும், அதிலிருந்து ஸாரமான உப்பெடுத்து, அதை எல்லா உணவு வகைகளிலும் சேர்த்துச் சாப்பிடுகிறோம். உப்பில்லாமல் உணவே இல்லை. ஹிந்து ஸமயக் கருத்து என்ன என்று நேரடியாகப் பார்க்கையில் விளங்குவதில்லை; உபயோகமற்றதாகத் தோன்றும். ஆனால் அதன் ஸாரத்தைத் திரட்டி வாழ்ந்து காட்டும் பெரியோர் மூலம் நமது கலாசாரம் வெளிப்படுகிறது: எந்த ஒரு காரியத்திலும் இந்தக் கலாசாரம் கலக்கா விட்டால் சிறப்பு இல்லை என்று காண்கிறோம்.

ஸமுத்திரத்தில் முத்து போன்ற நவரத்தினங்கள் கிடைக்கும். ஆனால் அவற்றை எவரும் எடுக்க முடியாமல் மூழ்கிக் குளிப்பவர்கள் மூலமே பெற முடிகிறது. ஹிந்து ஸமயத்தில் உள்ள அரும் பெரும் தத்துவ ரத்னங்களை எல்லோராலும் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஸமய அநுபவத்தில் முழுகிய ஞானிகளே அவற்றைக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள்.

ஆனால் இதே ஸமுத்திரத்தில் உள்ள ஏராளமான மீன்களை சாமான்யர்களும் சுலபமாகப் பிடித்துக் கொண்டு வர முடிகிறது. ஹிந்து ஸமயத்திலுள்ள ஸாமான்யப் பொதுக் கருத்துக்களை எவராலும் ரஸித்துக் கொள்ள முடியும்.

ஸமுத்திரத்தில் சிறு படகுகள் சிறிய தூரமுள்ள இடங்களுக்கும், பெரிய கப்பல்கள் தூரத்தில் உள்ள தேசங்களுக்கும் அழைத்துச் செல்கின்றன. மோக்ஷ மார்க்கத்தில் கொஞ்சம் கொஞ்சம் தூரம் அழைத்துச் செல்லும் சிறு கர்மாக்கள், கைலாஸ — வைகுண்டங்களுக்கே அழைத்துச் செல்லும் பெரிய ஸாதனைகள் யாவும் ஹிந்து ஸமயத்தில் உள்ளன.

ஸமுத்திர அலைகளை எத்தனை நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலும் அலுப்புத் தட்டாது போல, ஹிந்து ஸமயத்தில் பிறந்த ராமாயணம், பாரதம் முதலிய நூல்களை எத்தனை தடவை படித்தாலும் கேட்டாலும் அலுப்பதில்லை.

ஸமுத்திர ஜலம் ஆவியாகியே எல்லா நதிகளும் தோன்றி, முடிவிலும் அவை ஸமுத்திரத்திலேயே ஸங்கமமாவது போல் எல்லா ஸமயங்களுக்குமே மூலமாகவும் முடிவாகவும் உள்ள ஹிந்து ஸமயம் பேரின்பமான மோக்ஷத்தைத் தருவதால் ஆனந்த ஸமுத்திரமாக விளங்குகிறது.

(அமைப்பு: ரா. கணபதி)



வெள்ளாங்கோயிலில் வெள்ளோட்டம்

ஃபோன் மணி அடித்தது.

''வணக்கம் சார்'' — இனிமையான பெண் குரல். ''நடிகர் இயக்குனர் பாக்யராஜின் சொந்தப் படத்தின் படப்பிடிப்பு வெள்ளாங்கோயில் என்ற இடத்தில் நடக்கிறது. நீங்கள் இன்றிரவு ரயிலில் அங்கு போகிறீர்கள். கம்பெனி கார் வந்து உங்களை அழைத்துச் செல்லும். சரிதானே?''

''சரிதான், போகிறேன். ஆனால் உங்கள் பெயர்?''

''பிரவீணா'' — மறக்க முடியாத, மறக்கக் கூடாத பெயர்! காரணத்தைப் பிறகு சொல்கிறேன்!

விசில் ஊதி ரயில் நகர ஆரம்பித்தபோது ஒருவர் பரக்கப் பரக்க ஓடிவந்து நான் இருந்த கம்பார்ட்மெண்டில் ஏறி என் அருகில் வந்து உட்கார்ந்தார். ''சௌக்கியமா?'' என்று கேட்டுவிட்டு என்னிடம் பேச ஆரம்பித்தார். அவர்தான் நடிகர் சிங்காரம். இப்படத்தில் தமக்கு என்ன பாகம் என்று கூறுவதிலிருந்து பேச ஆரம்பித்த அவர் என்னைக் கோபிச் செட்டிபாளையத்தில் உள்ள திருமகள் லாட்ஜில் விட்டு விட்டுச் செல்லும்வரை சுவையான பல விஷயங்களைக் கூறினார்.



✕ பிரவீணா

காலை 8-30 மணிக்குக் குளித்துவிட்டு நான் தயாரானேன். பாக்யராஜும் நானும் காரில் ஏறிப் படப் பிடிப்பு நடக்கும் இடத்துக்குப் பயணமானோம். வெள்ளாங்கோயில். இந்த இடத்தில் பாக்யராஜ் சிறு வயதில் விளையாடியிருக்கிறார். ஆம். பள்ளிப் பருவத்தின் பல நாட்களைக் கழித்த இடம்தான் இது. அவர் தாயாரின் கை மிகவும் ராசியான கை. மகப்பேறு மருத்துவத் துறையில் நிபுணர். பாக்யராஜுக்கு இந்த ஊரில் தெரியாத தோட்டம் இல்லை.

''நான் இந்த இடத்தை ஏன் தேர்ந்தெடுத்தேன் என்று பல பேர் என்னைக் கேட்கிறார்கள். எந்த ஒரு கதாசிரியனுக்கும் ஒரு கதை வரை கற்பனை 50 சத விகிதம் என்றால் நான் பார்த்த இடங்களும், மக்களும், காட்சிகளும்தான் மீதி 50 சதவீதம். என் மனத்தில் பசுமையாக இருக்கும் நினைவுகள் பல என் கதையில் பதிந்து விடுகிறது. தெரியாத ஊரைக் கற்பனை செய்து எழுதுவதை விட நாம் பார்த்த கிராமங்களை, அதன் அழகுகளை வைத்து எழுதினால் வெளிப்புறப் படப் பிடிப்புக்கு அதே இடத்துக்கு வந்தாலே ஆக



✖ அல்லினியுடன் பாக்யராஜ் 'ஒரு கை ஓசை' படத்தில் தோன்றும் காட்சி
✖ இயக்குனராக பாக்யராஜ். ✖ பாக்யராஜ் தம் குழுவினருடன்: குமார், ஈரோடு முருகேசன், கோவிந்தராஜ், ஜான், ஒளிப்பதிவாளர் பசவராஜ், பாக்யராஜ், பாலகிருஷ்ணன்.

வேண்டும்? இவ்வாறு அமைந்ததுதான் நான் வாழ்ந்த இந்த ஊர்.''

பாக்யராஜ் படப் பிடிப்பை நடத்த ஆரம்பித்து விட்டார். முப்பது முப்பத்தைந்து வயதுள்ள ஓர் இளைஞர் காமிராவுக்கு முன்பு சில சமயங்கள் நின்று நடிப்பார். பிறகு விளக்கு ஒளி போதுமா என்று மீட்டர் வைத்துப் பார்ப்பார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ''இவர் ஒளிப் பதிவாளரா? இல்லை நடிகரா?''


''இரண்டும்தான்'' என்றார் பாக்யராஜ். ''குமார் நடிக்காதபோது ஒளிப் பதிவையும் கவனித்துக் கொள்வார். நடிக்கும்போது ஒளிப் பதிவைச் சிறிது நேரம் மறந்துவிடுவார். என் கண்களான ஒளிப் பதிவாளர் பசவராஜின் உதவியாளராக இருக்கிறார். இவருக்கு நடிப்பதை விட ஒளிப் பதிவில்தான் ஆர்வம் அதிகம் இருக்கிறது.''

''ஒரு கை ஓசை'' படத்தின் கதை ஓர் ஊமைப் பையனைச் சுற்றி அமைந்துள்ளது. ஆனால் அவனை விட அவன் சம்பந்தப்பட்ட பலர் அவனால் எப்படி உணர்ச்சிப் போராட்டங்களில் உந்தித் தள்ளப்படுகிறார்கள் என்று அது கூறுகிறது. கதை வெகுவாக மக்களைக் கவரும் என்றே நினைக்கிறேன்'' என்றார், பாக்யராஜ்.


இளம்பு முன்பே பலர் என்னிடம் 'நிச்சயம் கேட்க வேண்டும்' என்று சொல்லியனுப்பிய ஒரு கேள்வி 'நடிகை பிரவீணாவைப் பாக்யராஜ் மணந்து கொள்வாரா?' என்பதுதான். ''ஆறு மாதத்துக்குள் எனக்குத் திருமணம்'' என்று கூறுகிறாரே ஒழிய 'பிரவீணாவுடன் திருமணம்' என்று அவர் கூறவில்லையே! பாக்யராஜைத் தெளிவாகக் கேட்டுவிடுங்கள்'' என்று கூறி அனுப்பினார்கள். நானும் பாக்யராஜிடம் கேட்டுவிட்டேன். அப்போது நேரம் இரவு 12 மணி. படப்பிடிப்பின் இடைவேளை! ''பிரவீணாவின் கரம் பற்றப் போகிறீர்களா?''

அவர் அளித்த பதில் இலேசான ஒரு சிரிப்பு. மற்றபடி மௌனம். மௌனம் சம்மதத்துக்கு அறிகுறிதானே?

—சலன்


பணயக் கைதிகள்
ஆப்கானிஸ்தான்
தீவிரவாதி
சட்டம் ஒழுங்கு
மாநில தேர்தல்
அஸ்ஸாம்
ஆட்சி உட்பூசல்
என்ன வெய்யில் அடிச்சா என்ன... ஏ.ஸி. இருக்கிற வரைக்கும் என்ன கவலை?...
2/3 மெஜாரிட்டி
தகதிங்கின தோம்... தகதிங்கின தோம்.. ஜெகஜீவன்ராம் பெற்றோம்!....
அரசு

1980 ஏப்ரல் 20
ரௌத்திரி சித்திரை 8
மலர்: 38 இதழ்: 38



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

ஒரே நம்பிக்கை!

புங்கவனத்து ஆண்டியை நமக்கு நன்றாகத் தெரியும். அவன் நாலாறு மாதம் குயவனை வேண்டி வாங்கி வந்த தோண்டியைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைத்ததும் தெரியும். ஜனதாத் தலைவர்களும் இதையேதான் செய்தார்கள். நாநிலம் சிரிக்கக் கூத்தாடிக் கட்சியை உடைத்தார்கள். சில்லுகள் பல சிதறின.

ஆயினும் நம் அதிர்ஷ்டம், தோண்டியின் மேல் விளிம்புதான் பலவாக உடைந்தது. அதன் அடிப்பாகம் அப்படியே முழுசாக இன்னும் இருக்கிறது. அதில் நீர் நிரப்பி வைக்கலாம். பழையது பிசைந்து சாப்பிடலாம். கொஞ்சம் சாமர்த்தியமாகச் செயல்பட்டால் பாண்டத்தை அடுப்பில் ஏற்றி உணவு கூடச் சமைக்கலாம்.

அந்தப் பாண்டம்தான் ஜனசங்கம். இன்று அதன் பெயர் பாரதிய ஜனதா கட்சி.

ஜனதாவின் பல்வேறு தலைவர்களும் யோக்கியமற்றவர்களாக விளங்கி, சுயநலம் பிடித்து, தலைக்குத் தலை தாறுமாறாகப் பேசி, கட்சியை உடைப்பதிலேயே கருத்தாக இருந்த போது முன் நாள் ஜனசங்கத் தலைவர்கள் மட்டும் ஒரு வித குற்றச் சாட்டுக்கும் இடம் தராமல், நேர்மை காத்து, கௌரவம் பேணி, திறமை காட்டி, கடமையாற்றக் கண்டோம். இதனாலேயே மற்றவர்களுக்கு அவர்கள் மீது பொறாமை! இவர்கள் ஏதாவது நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்டு விடப் போகிறார்களே என்று கவலை! ஆர். எஸ். எஸ். என்ற பூச்சாண்டி கிளப்பினார்கள். இரட்டை அங்கத்தினர் பிரச்னை என்றார்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் ஜனசங்கப் பிரிவினர் நடந்து கொள்கிறார்கள் எனில் அதற்குக் காரணமே அவர்களுடைய இளமைக் கால ஆர். எஸ். எஸ். அஸ்திவாரம்தான். இதை உணர்ந்தும் உணராதது போல் நடித்து, ஆர்ப்பாட்டம் செய்து, கடைசியில் ஒரு வழியாக அவர்களை மூட்டை கட்டி அனுப்பி விட்டது ஜனதா.

தஞ்சையில் வெள்ளமா? நிவாரணப் பணியாற்ற ஆர். எஸ். எஸ். முன் வர வேண்டும். குஜராத்தில் அணை உடைந்து சேதமா; மக்கள் அவதிப்படுகிறார்களா? ஆர். எஸ். எஸ். உதவிக்கு விரைய வேண்டும். ஆந்திராவில் புயலா? போலீஸாரும் ராணுவமும் கூடத் தொடக் கூசிய பிரேதங்களுக்குக் கண்ணியமான ஈமச் சடங்கு நடத்த ஆர். எஸ். எஸ் ஸை விட்டால் வேறு கதி இல்லை. அப்போதெல்லாம் ஒரு நல்ல வார்த்தை கூற முன் வராதவர்கள், ஜனதாவிலிருந்து ஜனசங்கத்தை வெளியேற்ற மட்டும் ஆர். எஸ். எஸ் ஸை ஊருக்கு இளைத்தவனாக்கினார்கள்! இந்திரா அம்மையாரோ தமது ஆட்சியில் அஸ்ஸாம் போல எங்கே என்ன பிரச்னை ஏற்பட்டாலும் ஆர். எஸ். எஸ் ஸைப் பிள்ளையார் கோவில் ஆண்டியாக்குவார். அதை விட்டால் இருக்கவே இருக்கிறது ஸி. ஐ. ஏ.!

கட்சி மாறிகளும் பதவிப்பித்தர்களுமான திமிங்கிலங்கள், சுயநலச் சுறா மீன்கள், லஞ்ச லாவண்ய மோசடிக்காரர்களான ஆக்டோபஸ்கள் ஆகியன நிரம்பியுள்ள இன்றைய அரசியல் கடலின் மத்தியில் மனோரம்யமான தீவாகக் காட்சி தருகிறது புதிய பாரதீய ஜனதா கட்சி. பாரதக் குடிமகன் இளைப்பாற ஏற்ற இடமாக அது என்றும் திகழட்டும். அவனுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை அதுதான்!



செய்திகள் வாசிப்பது 'செம்பியன்'

குதிரையை வெட்ட யானை!

அவசரப் பணி என்பது வேறு; முக்கியமான பணி என்பது வேறு. அவசரப் பணி எல்லாமே முக்கியமானதாகி விடாது.

அஸ்ஸாம் கிளர்ச்சிக்கு உடனடியாக நிவாரணம் கண்டு சமாதானப்படுத்துவது அவசரப் பணி. ஆனால் முக்கியமான பணி என்னவெனில், அந்த எல்லைப்புற மாநிலத்தில் நிறையத் தொழிலகங்களை உருவாக்கி வேலை வாய்ப்புக்களைப் பெருக்கி, உள்ளூர்க்காரர்கள் வெளி மாநிலக்காரர்கள், அயல் நாட்டிலிருந்து அகதிகளாக வந்தவர்கள் ஆகிய அனைவருக்கும் வேலை வாய்ப்புண்டு; எல்லாருமே சுபிட்சமாக வாழலாம் என்ற நிலைமையை ஏற்படுத்துவதுதான். அனைவருக்கும் வேலை வாய்ப்பு இருக்கிறதென்றால் 'மண்ணின் மைந்தர்கள்' கோஷம் ஏன் எழப் போகிறது? கர்நாடகத்தில் குண்டு ராவ் அதை வெளியிடவும் நேர்ந்திருக்காது; இந்திராவின் மோதிரக் கரத்தால் குட்டப்பட்டபின் அவரே தம் வார்த்தைகளை மென்று விழுங்கவும் நேர்ந்திராது!

தேசம் முழுவதுமே உற்பத்தி உயரவும் அதன் விளைவாக விலைவாசி குறையவும் வழி வகுக்க வேண்டுமெனில் எல்லைப்புற மாநிலங்களில் இது இரட்டிப்பு முக்கியத்வம் பெறும். கம்யூனிஸ்டுகளின் தலைமையில் அமைந்த மேற்கு வங்க அரசின் நிதி அமைச்சர் அசோக் மித்ரா சென்னை வந்தபோது இதனைத் தெளிவாகவே எடுத்துக் காட்டி, 'பொருளாதாரத்தை நிர்வகிப்பதிலும், தொழிலகங்களைத் தோற்றுவிப்பதிலும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அதிக சுதந்திரம் தரவேண்டும்' என்று கூறினார்.

'மாநில அரசு' என்பதற்குப் பதில் 'தனி நபர்கள்' என்று அவர் கூறியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் கம்யூனிஸ்ட் அரசில் பதவி வகிக்கும் அவர் அவ்வளவு பெரிய 'பாபம்' புரிய முன்வர மாட்டார்!

இதற்கிடையில் இந்திரா அம்மையார் அஸ்ஸாம் பிரச்னையை அவசரப் பணியாகவும் கருதவில்லை; முக்கிய பணியாகவும் நினைக்கவில்லை. அரசியல் சதுரங்கத்தில் மேற்கு வங்கக் குதிரையை வெட்ட அஸ்ஸாம் யானையைப் பயன்படுத்த யோசித்து வருகிறார்!



மனமேனோ மிதக்கிறது!

கனகாம்பரச் சுமை கண்டும்
மனமேனோ மிதக்கிறது:

கண்பார்வை வேல் பாய்ந்தும்
தண்ணென்றே இருக்கிறது!

அனலாதவன் ஒளிர் முகமோ
நிலவெனவே ரசிக்கிறது:

அபாயமாம் அதரச் சிவப்பு
உபாயமாய்ச் சிரிக்கிறது!

மேஸ்டையில் மம்தாவின் எழில் தோற்றத்தை வண்ணப்படமாக எடுத்து அளிப்பவர்:
எம். கே. ராமமூர்த்தி

எண்பதாண்டு இளமை!

எண்பது ஆண்டின் அனுபவ அறிவுடனும் எட்டு வயது இளமைச் சுறுசுறுப்புடனும் இயங்கி வருகிறது பார்த்தசாரதி சாமி சபா. சதாபிஷேகம் நடத்திக் கொள்ளத் தயாராயிருக்கும் இந்தச் சென்னை சபா, அவ்வப்போது சில்லறைச் சண்டை பூசல்கள் எட்டிப் பார்த்தாலும் சமாளித்துக் கொண்டு வெற்றி நடை போட்டு வருவதற்கு முதற் காரணம் உயர்திருவாளர் பார்த்தசாரதிதான். அல்லிக்கேணி வாழ் இந்தப் பிரமுகர் சபாவின் அங்கத்தினராக இருந்து அவருக்குள்ள எத்தனையோ பல அலுவல்களுக்கிடையிலும் ஆண்டுக்கொரு முறையேனும் வீதி உலாவின்போது சபாவுக்கு விஜயம் செய்கிறார். அவ்வளவுதான்! சபாவை எதிர்நோக்கியுள்ள எல்லாப் பிரச்னைகளும் மாயமாய் மறைந்துவிடுகின்றன! டி.வி. போட்டியையும் சமாளித்துக் கொண்டு சபா வெகு வேகமாக முன்னேறுகிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

கர்நாடக இசை, ஹரிகதை, நாடகம், பரத நாட்டியம் போன்ற கலைகளின் வளர்ச்சிக்குச் சபா ஆற்றியுள்ள பணி மகத்தானது. அதைவிட ரொம்ப மகத்தானது தனது வளர்ச்சிக்கே அது ஆற்றிக் கொண்டுள்ள பணி! சபா உருவாகிறது — நன்கொடை; வாடகைக்கு ஒரு நிலப்பரப்பு பெறல் — நன்கொடை; கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டல் — நன்கொடை; திறந்த வெளி அரங்கின் தோற்றம் — நன்கொடை; மேல் கூரையுடன் கட்டிடம் — உதவி நிதிக் கச்சேரிகள்; அரங்கத்துக்கு அபிவிருத்தி — அரசு உதவிப் பணம்; நாற்காலிகள் அமைப்பு — நன்கொடை; மேல் கூரையில் அபிவிருத்தி — அரசு உதவிப் பணம் என்று சபா தனக்குத் தானேயும் நன்கு உதவிக்கொண்டிருக்கிறது. இன்னமும் உதவிக் கொள்ளப் போகிறது! வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ள நிலப் பரப்பை விலைக்கே வாங்கி விடவும் அரங்கை ஏஸி பண்ணிவிடவும் திட்டம் இருக்கிறது. பார்த்தசாரதி அருளால் எல்லாத் திட்டங்களும் இனிதே நிறைவேறட்டும். சபாவின் வளர்ச்சிதானே அங்கத்தினர்களுக்கு வசதி! கலைஞருக்கு மகிழ்ச்சி!

கோவையின் சேவை

மலை ஏறும் போட்டி பற்றிய அறிவிப்பை கல்கியில் பார்த்த தினத்திலிருந்தே கோவை லயன்ஸ் கிளப் அதில் மிகவும் உற்சாகம் காண்பித்து வெற்றி பெறுகிறவருக்குத் தன் பங்குக்கு ரூ. 251 பரிசு வழங்குவதாக அறிவித்தது.

போட்டி முடிவு பற்றி கோவை லயன்ஸ் கிளப்புக்கு எழுதியதும் செயலாளர் லயன் பி. சீனிவாசன், லயன்ஸ் கிளப் பரிசான ரூ. 251க்கு டிராஃப்ட் அனுப்பி வைத்து விட்டார். அதனைச் சம பாகமாகப் பிரித்து சம மதிப்பெண் பெற்று வென்ற திரு என். அய்யம்பெருமாளுக்கும் திரு ஆர். ரங்கநாதனுக்கும் அனுப்பி வைத்து விட்டோம். இளம் சிங்கங்களுக்கு லயன்ஸ் கிளப்பின் வாழ்த்துக்கள்.

• • •

குமாரி சுவர்ணலதாவுக்கென கோவை திருமதி சித்ராபானு ரூ. 350 அனுப்பினார். இதற்கிடையில் குமாரி சுவர்ணலதா தமக்குத் தேவையான அளவு பணம் சேர்ந்து விட்டது, இனி யாரும் தொகை அனுப்ப வேண்டாம் என நமக்கு எழுத அது கல்கி மார்ச் 30ந் தேதி இதழில் பிரசுரமாகியது. அதே நேரத்தில் தஞ்சை ஸ்ரீதரன் தமது மகள் இதய நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாயும் வேலூர் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் பண உதவி தேவை என்றும் எழுதியிருந்தார். டாக்டரின் சான்றிதழையும் அனுப்பி யிருந்தார். எனவே, குமாரி சுவர்ணலதா, திருமதி சித்ராபானு ஆகியோர் அனுமதிபெற்று மேற்படி 350 ரூபாயை தஞ்சை ஸ்ரீதரனுக்கு அனுப்பி விட்டோம். அவர் மகள் சுமதி விரைவில் பூரண குணமடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

விந்து பாங்க்!

அமெரிக்கச் செல்வந்தர் ராபர்ட் கிராஹாம் சமுதாயத்துக்குப் பெருந் தொண்டு ஆற்ற முன்வந்திருக்கிறார்! ரத்த பாங்க் போல விந்து பாங்க் உருவாக்கியுள்ளார்! சாமானியர் விந்து அல்ல; அவர் சேகரிப்பதெல்லாம் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகளின் விந்து! அதை விரும்பி ஏற்று கருவுற முன்வரும் வசதி மிக்க ஆரோக்கியமான பெண்களுக்கு அளிக்கிறார். அவர் கருத்துப்படி இந்தப் பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் மாமேதைகளாக வளர்வார்கள்!

ராபர்ட் மறந்துவிட்ட ஒரு விஷயம் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் பெரும்பாலோர் கிழடுதட்டிப் போனவர்கள். 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் தலை பருத்து மந்த புத்தியுடையவர்களாக விளங்க வாய்ப்புக்கள் அதிகம். இவ்வாறின்றி மேதையாகவே பிறப்பதாக வைத்துக் கொள்வோம், எத்தகைய மேதை? ஹிட்லர் கூட மேதைதான்!

விஞ்ஞானம் ஆக்க பூர்வமானது. ஆனால் அதுவே வக்ர புத்தியாளர்களிடம் அகப்பட்டால் அசுரத்தனமானதாகிறது. இல்லாமலா அணு குண்டும் மனிதனை மனிதன் கொல்வதற்கு உரிய இதர பல ஆயுதங்களும் கச்சிதப்படுத்தப்பட்டுள்ளன!

ராபர்ட் கிராஹாம் தமது சமுதாயத் தொண்டை இதைவிடச் சிறப்பாக நடத்த ஓர் உபாயம்: தம்முடைய விந்தை அந்த விந்து பாங்கில் சேமித்து வைக்காமல் இருந்தாலே போதும்!

இரக்கமற்ற இரவுகள்

ஹேமா ஆனந்ததீர்த்தன்

2

பானு பிறந்தபோது ராகவனும் ஜானகியும் எல்லையற்ற சந்தோஷத்தை அனுபவித்தனர். தவமிருந்து பெற்ற பிள்ளை என்றுதான் பானுவைச் சொல்ல வேண்டும். கல்யாணமாகி மூன்று வருடங்களாகியும் ஜானகி கர்ப்பம் தரிக்காமல் இருக்கவே வீட்டில் உள்ள பெரியவர்களுக்குக் கவலை ஏற்படத் தொடங்கிற்று. பெரியவர்களின் கவலையைப் போக்க முடியவில்லையே என்ற வருத்தம் ராகவன் — ஜானகி தம்பதியையும் வாட்டத் தொடங்கியது.

வைத்தியப் பரிசோதனைகள் செய்து கொண்டார்கள் இருவரும். ஒரு கோளாறும் உடம்பில் இல்லை என்பது உறுதியாயிற்று. அதன் பிறகு? பிரார்த்தனைகளும், வேண்டுதலைகளும், வழிபாடுகளும் தொடங்கின. இரண்டு வருடங்களாக இடைவிடாது நோற்ற நோன்புகளின் பலனாகத்தானோ என்னவோ ஜானகி உண்டானாள். மணமான ஆறாவது வருடத்தில் பானு பிறந்தான்.

முதல் குழந்தை ஆண் குழந்தையாகப் பிறந்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்பட்டது. குழந்தை மூக்கும் முழியுமாக அழகாகவும் இருந்தான். ஜானகி தன் அன்பை வாரிச் சொரிந்தாள் குழந்தையின் மீது.

பானுவுக்கு மூன்று வயதானபோது ரவி பிறந்தான். பிறகு இரண்டிரண்டு வருட இடைவெளிகள் விட்டு உமாவும் உஷாவும் பிறந்தார்கள்.

உஷா பிறந்த வருடமே ராகவனின் தாயார் ஜயலட்சுமி காலமானார். பலராமன் மனைவியின் மறைவால் இடிந்து போய் உட்கார்ந்து விட்டார்.

ராகவனுக்கு மயிலாப்பூர் பி.எஸ். உயர்தரப் பள்ளியில் ஆசிரியர் வேலை. சொற்ப சம்பளம்தான். நல்ல வேளையாகச் சொந்த வீடு ஒன்று மயிலாப்பூரிலேயே இருந்ததால் வீட்டு வாடகை கொடுக்க வேண்டிய தேவை இல்லை. இருந்தாலும், நான்கு குழந்தைகள், தகப்பனார், கணவன், மனைவி இருவர் ஆக ஏழுபேர் அடங்கிய குடும்பம் அவருடைய வருவாயில் சௌகரியமாக வாழ்வதென்பது சிரம தசையாகத்தான் இருந்து வந்தது.

ஐந்து வயது நடந்து கொண்டிருக்கும் போது பானுவுக்குத் திடீரென்று கடுமையான ஜுரம் வந்து விட்டது. என்ன காய்ச்சல் ஏது என்று டாக்டர்களுக்கே ஒன்றும் சரியாகப் பிடிபடவில்லை. மெனிஞ்சைடிஸ் என்றார் ஒரு டாக்டர். இல்லை என்றார் இன்னொருவர்.



பத்து நாட்களுக்கும் மேலாகவே அவன் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியதாயிற்று. அதில் நான்கு நாட்கள் நினைவே இல்லாமல் கிடந்தான். பிழைப்பதே கஷ்டம் என்ற நிலை தோன்றிவிட்டது. ராகவனும் ஜானகியும் புழுப் போலத் துடித்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். எப்படியோ அவன் ஆயுள் கெட்டியாக இருந்தது. பாலு பிழைத்துக்கொண்டான்.

அவன் உயிரை விட்டு விட்டுச் சென்ற அந்தக் கொடிய காய்ச்சல் அவன் மூளையைப் பாதித்து விட்டதோ என்னவோ? காய்ச்சலிலிருந்து பிழைத்தெழுந்த பாலு அதன் பிறகு பழைய பாலுவாக இருக்கவில்லை. சுறுசுறுப்பாகச் சிட்டுக் குருவி போல வீடெங்கும் வளைய வந்து கொண்டிருந்த பையன் ஒரு மூலையில் முடங்கிக்கொள்ள ஆரம்பித்தான். மூன்றுவது வருடத்திலேயே அவனுக்கு அட்சராப்பியாசம் செய்வித்துப் பள்ளிக்கூடத்தில் சேர்த்திருந்தார்கள். வெகு கெட்டிக்காரப் பையன் என்று பள்ளிக்கூடத்தில் பெயர் எடுத்திருந்தான். எதையும் ஒருமுறை சொன்னால் போதும். கிரகித்துக்கொண்டு விடுவான்.

அப்படியிருந்தவன் இப்போது படிப்பதில் ஊக்கமோ உற்சாகமோ காட்டாமலும் சாதாரண விஷயங்களைக் கூட புரிந்து கொள்ளாமலும் இருந்தான். கொஞ்ச நாள் போனால் சரியாகிவிடும் என்று எதிர்பார்த்தது வீண்போயிற்று. காய்ச்சல் வந்து பிழைத்துக்கொண்ட பிறகு அவனுக்குப் படிப்பே ஏறவில்லை என்று ஒரே வார்த்தையில் சொல்லி விடலாம்.

படிப்பு மாத்திரம் ஏறாமல் போயிருந்தால் பெற்றோர்களுக்கு அவ்வளவாகக் கவலை ஏற்பட்டிருக்காது. அவன் சுபாவமே அந்தக் குடும்ப இயற்கைக்கு முற்றிலும் எதிராக மாறிக் கொண்டு வந்தது.


அப்போது அவனுக்கு எட்டு வயது. ஒரு நாள் தெருவில் கிடந்த யாரோ புகைத்து விட்டு அணைக்காமல் போட்டிருந்த ஒரு பீடித் துண்டை எடுத்து வாயில் வைத்துக் கொண்டு புகைத்துக் கொண்டிருந்ததை ராகவன் பார்த்து விட்டார். கூப்பிட்டுக் கண்டித்தார். அவன் சொன்ன பதில் அவர் மண்டையில் சம்மட்டி கொண்டு யாரோ அடித்தது போல இருந்தது அவருக்கு.

''நான் பீடி குடிச்சா உனக்கு என்ன? நீயா காக குடுத்தே? வேணும்னா நீயும் குடி. இல்லாட்டா எனக்குக் காசு குடு. சிகரெட் வாங்கிக் குடிக்கிறேன்.''

அன்றுதான் ராகவன் தன்னையே மறந்து பெற்ற பாசத்தையும் மறந்து முதல் முதலாகப் பாலுவை நையப் புடைத்துவிட்டார். ஜானகி கண்ணீர் பெருக்கினாள்.

ஆனால் பிறகு இது சகஜமாகப் போய் விட்டது. பாலுவின் சுபாவம் பெற்றோர்களுக்குத் தீராத வேதனையாக அமைந்து விட்டது. ஒவ்வொரு முறையும் அவன் ராகவனிடம் அடி வாங்கிய பிறகு திருந்துவதற்குப் பட்டதில் இன்னும் மோசமானான். அவன் நண்பர்களெல்லாம் விரும்பத் தகாத சோம்பேறிக் கூட்டமாக அமைந்திருந்தார்கள். வீட்டிலே எப்போதும் சண்டை வசவு, கெட்ட வார்த்தைகள். பாலுவின் வாழ்க்கை ஒரு பெரிய பிரச்னையாக நின்று ராகவனைக் கலங்க வைத்தது.

ரவி ஐந்தாவது வகுப்புக்கு வந்துவிட்ட போதும் பாலு இன்னும் மேலே போகாமல் அதே வகுப்பில் உட்கார்ந்து கொண்டிருந்தான். ரவி எஸ். எல். ஸி. தேறியபோது பாலு எட்டாவது வகுப்பில் மூன்றாவது வருட



மாக உட்கார்ந்து கொண்டிருந்தான். கடைசியாக ரவி பி. ஏ. இறுதி ஆண்டில் வாசித்துக்கொண்டிருந்தபோது பாலு எப்படியோ எஸ். எஸ். எல். சி. வகுப்புக்கு வந்து சேர்ந்து விட்டான். அப்போது அவனுக்கு வயது இருபத்து மூன்று.

''நீ படிச்சது போதும். உனக்குப் படிப்பு ஏறாது. ஏதாவது ஒரு வேலையைத் தேடிண்டு நாலு காசு சம்பாதிச்சிற வழியைப் பாரு'' என்றார் ராகவன் ஒரு நாள்.

''ஏன், உங்கள் செல்லப் பிள்ளை ரவி மட்டும் ஐ. ஏ. எஸ். வரைக்கும் படிக்கணுமாக்கும்? நான் படிக்கக் கூடாதா? நான் படிக்கத்தான் படிப்பேன்'' என்று தகப்பனாரின் நெஞ்சில் வேலைப் பாய்ச்சினான்.

அவ்வப்போது வீட்டில் செலவுக்கென்று வைத்திருக்கும் பணத்தில் காணாமல் போகும். பாலுதான் எடுத்திருக்க வேண்டும் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அவனும் மறுக்க மாட்டான்.

''எனக்கு வேண்டியிருந்தது. கேட்டாக் கொடுக்க மாட்டீங்க. நானே எடுத்துக் கிட்டேன்'' என்பான்.

வயது வந்த பின்னே, இனிமேல் அடிக்கக் கூடாது என்று ராகவன் அவனை அடிப்பதை எப்போதோ நிறுத்தி விட்டிருந்தார். ஒழுங்காக அவன் இருந்திருந்தால் இதற்குள் நானெக்குக் கல்யாணம் ஆகியிருக்க வேண்டுமே!

ஒரு நாள் வீட்டில் யாரும் இருக்கவில்லை, பெரியவர் பலராமனையும் ஜானகியையும் தவிர. திடுதிப்பென்று பாலு வீட்டிற்குள் நுழைந்தான்.

''அம்மா, எனக்கு அவசரமா பத்து ரூபாய் வேணும்'' என்று பரபரத்தான்.

''எங்கிட்ட ஏதுடாப்பா இப்ப பத்து ரூபாய்?''

''எல்லாம் வச்சிருப்பே. குடு.''

''எதுக்கு இப்பத் திடீர்னு பத்து ரூபாய்?''

''இதெல்லாம் என்னம்மா அனாவசியமான கேள்வி? எதுக்கோ வேணும். குடுக்கறியா, இல்லியா?''

''எங்கிட்ட இல்லே.''

''பொய். ரவி கேட்டா எடுத்துக் கொடுப்பே. குடும்மா'' என்று சிடுசிடுத்தான்.

''எங்கிட்ட இல்லே. என்ன வேணு பண்ணிக்கோ'' என்று கூறிவிட்டு ஜானகி தன் வேலையில் முனைந்தாள்.

''பெட்ரோல் விலை ஏறினதைப் பார்த்தா பேசாமல் வித்துடலாம் போலிருக்கு!''

''உங்ககிட்டே இருப்பது காரா, ஸ்கூட்டரா?''

''ரெண்டுமில்லே. சிகரெட் லைட்டர் வச்சிருக்கேன்!''

— அ. ராமதாஸ்



''குடுக்க மாட்டியா? ஊம்? குடுக்க மாட்டே?'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு கேட்டபடியே தாயின் கைகளைப் பிடித்துக் கொண்டு முறுக்கத் தொடங்கினான். இரண்டு கைகளிலும் உள்ள கண்ணாடி வளையல்கள் நொறுங்கின. உடைந்த துண்டுகள் கைகளில் கீறி ரத்தம் கசியத் தொடங்கியது.

''அடப் பாவி! என்னை அடிச்சே புடுவே போலிருக்கே நீ?'' என்றாள் வேதனையோடு.

''அடிக்கத்தான் அடிப்பேன்'' என்று பாலு கையை ஓங்கி விட்டான்.

''டேய், ராஸ்கல்!'' என்று கர்ஜித்தபடியே ராகவன் உள்ளே நுழைந்தார். லேசாகத் தலைவலி என்பதனால் தலைமையாசிரியரிடம் அனுமதி வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தவர் இந்தக் காட்சியைக் கண்டு பதறிப் போனார். ஜானகியின் கையில் கசிந்திருந்த ரத்தத்தைக் கண்டதும் அவர் தம் நிலை மறந்தார். வெறி கொண்டார்.

''டேய், அயோக்கிய நாயே அம்மாவைக் கை தொட்டு அடிக்கிற வரைக்கும் வந்தாச்சா? உன் அக்கிரமத்துக்கு அளவே கிடையாதாடா, படவாப் பயலே, போடா வெளியே. இனிமே இந்த வீட்ல உனக்கு இடம் கிடையாது. ஊம்.'' என்று கூறியவர் மூலையில் சாத்தி வைக்கப் பட்டிருந்த தகப்பனாரின் கைத்தடியை எடுத்துப் பாலுவின் உடலெங்கும் விளாசிவிட்டார்.

''போடா, இனிமே இந்த வீட்டுக்குள்ளே காலை எடுத்து வைச்சே, காலை ஒடிச்சுடுவேன்'' என்று எட்டி உதைத்தார்.

பாலு அவரை முறைத்துப் பார்த்தபடியே வெளியேறினான்.

இதயம் வெடித்துவிடும் போன்ற வேதனை ஜானகியின் நெஞ்சைப் பிசைந்தது. பையனுக்கும் பரிந்து பேச முடியவில்லை. கணவனின் கண்மூடித்தனமான ஆவேச வெறியையும் ஆதரிக்க முடியவில்லை. பெற்ற வயிற்றின் பெரும் துக்கத்தை அங்கிருந்த யாராலும் அறிந்து கொள்ள முடியவில்லை.

அன்று வீட்டை விட்டுப் போன பாலு பல நாட்கள் திரும்பி வராமலே இருந்தான். பிறகு எப்போதாவது தகப்பனார் வீட்டில் இல்லாத நேரத்தில் வந்து தாயார் அளிக்கும் சோற்றையோ, காப்பியையோ, தின்பண்டங்களையோ தின்றுவிட்டுப் போவான். எந்தக் கைகளை முறுக்கி அவை அணிந்திருந்த வளையல்களை உடைத்தானோ அதே கைகள் வாரித் தந்த உணவை எந்த வித உணர்ச்சியுமின்றித் தின்றுவிட்டுப் போவான்.

எங்கோ வேலையில் இருப்பதாகச் சொல்லுவான் ஒரு முறை வரும்போது. இன்னொரு முறை வரும்போது, ''அந்த வேலையை விட்டுட்டேன். இப்போ வேற ஒரு வேலையிலே இருக்கேன்'' என்பான். அவன் கூறுவதில் எவ்வளவு உண்மையோ எவ்வளவு பொய்யோ!

ஆனால் ராகவன் வீட்டில் இருக்கும்போது மட்டும் அவன் தலை காட்டியதே இல்லை. ராகவனுக்கும் மனசில் பாசம் இருந்ததோ இல்லையோ வெளியில் அவர் ஒன்றும் ஒரு போதும் காட்டிக் கொள்ளவில்லை. யாராவது எப்போதாவது அவன் பேச்சை எடுத்தாலும் காதிலே விழாதது போல இருந்துவிடுவார்.

இல்லாவிட்டால் அந்த இடத்தை விட்டே எழுந்து சென்று விடுவார்.

விளையாட்டைப் போல மூன்று வருடங்கள் ஓடிவிட்டன. பாலு வீட்டை விட்டு வெளியேறி.

"சம்பளம் வாங்கிட்டியாடா?" என்று கேட்ட படி தன் எதிரே நிற்கும் பாலு அண்ணனைக் கண்டதும் ரவிக்கு மனம் குழம்பியது.

"இன்னும் இல்லே அண்ணா."

"எப்பக் கிடைக்கும்?"

"மூணு மணியாகும்."

"கொஞ்சம் வெளியே வா. உன்னோடே பேசணும்."

"கௌண்டரை விட்டுட்டு வர முடியாதே அண்ணா? என்ன சமாசாரம்? இப்படியே சொல்லேன்."

"என்னடா பெரிய கௌண்டர்? பக்கத்துலே யாரையாவது கொஞ்சம் பார்த்துக்கச் சொல்லிட்டு வாடா."

ரவி யோசித்தான். முடியாது என்று சொன்னால் பாலு அங்கேயே கூச்சல் போட்டு ரசாபாசம் உண்டாக்கத் தயங்க மாட்டான். ஆனால் வெளியே போய்ப் பாலுவுடன் பேசுவதற்கும் அவனுக்கு இஷ்டம் இருக்கவில்லை. பாலு எதற்காக வந்திருப்பான் என்பதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. வரும்போதே "சம்பளம் வாங்கிட்டியாடா" என்று கேட்டுக்கொண்டு வருபவன் வேறு எதற்கு வந்திருக்கப் போகிறான்? பணம் கேட்பதற்குத்தான். தெரிந்து கொள்ள வேண்டியதெல்லாம் அவன் எவ்வளவு கேட்கப் போகிறான் என்பதுதான்.

"இல்லேண்ணா. இன்னிக்கு நானே இங்கே சப்ஸ்டிட்யூட்டாத்தான் வேலை செஞ்சுகிட்டிருக்கேன். வேறே யாரும் வரமாட்டா, இந்தச் சீட்டைப் பார்த்துக்க" என்று தட்டிக் கழிக்கப் பார்த்தான்.

பாலுவின் முகத்தில் கடுகடுப்புத் தோன்றியது. சுற்று முற்றும் பார்த்துவிட்டு அருகில் ஒருவரும் இல்லை என்று தெரிந்துகொண்டு, "டேய், உத்தியோகம் பார்க்கறதுனாலே ரொம்பப் பெரிய மனுஷனாயிட்டதாக நினைப்போ?" என்று கேட்டான்.

"ஏன் அண்ணா, இங்கே வந்து இப்படியெல்லாம் பேசறே? எனக்கு இப்போ வேலை இருக்கு. மத்தியானம் ரெண்டு மணிக்கு வாயேன். லஞ்ச் டயம். சாவகாசமாய்ப் பேசலாம்" என்று கெஞ்சுவது போல அடக்கமாகச் சொன்னான் ரவி.

"எட்டு தரம் என்னாலே வர முடியாதுடா. மூணு மணிக்குச் சம்பளம் வந்துடும் இல்லியா? நான் மூன்றரை இல்லே நாலு மணிக்கு வரேன். எனக்கு ஒரு நூறு ரூபாய் வேணும். ரொம்ப அர்ஜண்ட். இல்லேன்னு சொன்னியானா எனக்குக் கெட்ட கோபம் வரும், ஆமாம். நான் வரேன்" என்று கூறிவிட்டு ரவியின் பதிலுக்காகக் காத்திராமல் விடுவிடுவென்று வெளியேறிச் சென்றுவிட்டான்.

ரவி கலங்கிப் போய் உட்கார்ந்து விட்டான். தர்ம சங்கடமான நிலை. கொடுக்காவிட்டால் பாலு சும்மா இருக்க மாட்டான். அங்கேயே கூச்சல் போட்டுக் கூட்டத்தைக்

கூட்டி மானத்தை வாங்கி விடுவான். மேலும், அவனுக்கு ரூபாய் எதற்குத் தேவைப்படுகிறது என்றும் தெரியவில்லை. ஏதாவது இக்கட்டில் மாட்டிக் கொண்டிருந்தானானால்? உதவாமல் இருப்பது சரியல்ல.... ஆனால் நூறு ரூபாய் கேட்கிறானே! கொடுத்தால் அது திரும்பி வராது. அதைப் பற்றிச் சந்தேகமே வேண்டியதில்லை. கொடுத்தது தெரிந்தால் அப்பா என்ன சொல்லுவாரோ! கோபித்துக் கொள்வாரா? அல்லது பேசாமல் இருந்து விடுவாரா? அவர் வீட்டில் இல்லாதபோது பாலு அம்மாவிடம் கேட்டு வீட்டில் உள்ளதைச் சாப்பிட்டுவிட்டுப் போகிறான் என்பது அவருக்குத் தெரியும்.' அவருக்கு அது தெரியும் என்பது வீட்டில் உள்ளவர்களுக்கும் தெரியும். ஆனால் ஒருவருக்கொருவர் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. அப்பாவும் 'ஏன் அவனை வீட்டுக்குள்ளே விட்டாய்?' என்று கோபித்துக் கொள்ளவில்லை. அது போல இந்த விஷயத்திலும் இருப்பார் என்று சொல்ல முடியுமா?


எது எப்படியானாலும் நூறு ரூபாய் தர முடியுமா அவனால்? அவன் கையில் கிடைக்கப் போவது ஐந்நூற்றிச் சொச்சம் ரூபாய். அதற்குத்தான் ஏற்கனவே எவ்வளவு செலவுகள் காத்துக் கொண்டிருக்கின்றன!

திருவேங்கடத்துக்கு ஐம்பது ரூபாய் கொடுப்பதாக வாக்குக் கொடுத்தாயிற்று. அதைக் கொடுக்காமலிருக்க முடியாது.

உமாவுக்குச் சிங்கப்பூர் குடை (மடித்துப் பைக்குள் வைத்துக் கொள்ள வசதியானது) வாங்கிக் கொண்டு வருவதாக அவன் 'பிராமிஸ்' செய்திருக்கிறான். 'அவளுக்கு என்ன வாங்கினாலும் அதேதான் தனக்கும் வேண்டும்' என்று உஷாவும் கேட்டிருக்கிறாள். அவர்கள் இருவரும் எப்போதுமே அப்படித்தான். இரண்டு வயது வித்தியாசம் இருந்தாலும் இரட்டைப் பிள்ளைகளைப் போல

ஆசைக் கடல் நீந்தி
பரிசுக் கரை சேர்ந்திட

தமிழ்நாடு அரசு
பரிசுச் சீட்டு




தமிழ்ப் புத்தாண்டு சிறப்புக் குலுக்கல்!

சிறப்பு முதல் பரிசுகள் இரண்டு ஒவ்வொன்றும் ரூ.

5 லட்சம்

குலுக்கல் நாள்: 30-4-1980

சிறப்பு இரண்டாவது
பரிசுகள் மூன்று
ஒவ்வொன்றும் ரூ. 1,00,000
மற்றும் ஆயிரக்கணக்கான
பரிசுகள்



பரிசுச் சீட்டின்
விலை:
ரூ. 2 மட்டுமே.

இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்,
அரசினர் தோட்டம், சென்னை-600 002

இருவரும் ஒரே உயரம், ஒரே பருமன், ஜாடை, சுபாவம், ஆனால் உமா சிறிது மாநிறம். உஷா நல்ல சிவப்பு. இருவருக்கும் எல்லாவற்றிலும் போட்டி. சிறு குழந்தைகளாக இருந்தபோது தோன்றிய போட்டி இன்னும் போகவில்லை. வீட்டில் உள்ளவர்களும் அதற்குத் தகுந்தாற்போல், 'குழந்தைகளுக்குள் பேதம் பாராட்டக் கூடாது' என்று சொல்லி ஒருத்திக்கு வாங்குவது போலவே மற்றவளுக்கும் துணி மணிகள் நகை நட்டுக்கள், அலங்காரம் இத்தியாதிகள் செய்வார்கள். சாப்பிடும்போது கூட வறுவல் அப்பளாம் முதலியவை இருவருக்கும் சரி சமமாக இருக்க வேண்டும். வறுவல் எவ்வளவு இருக்கிறது என்று எண்ணிப் பார்ப்பார்கள் இருவரும். யாருக்காவது ஒன்றோ இரண்டோ கூடக் குறையாக இருந்து விட்டால் ரகளைதான்!


எனவே உஷாவுக்கும் ஒரு குடை வாங்கியாக வேண்டும். முப்பத்தைந்தோ, நாற்பதோ இருக்கும். முப்பத்தைந்துக்கே கிடைக்கிறது என்று வைத்துக் கொண்டாலும் இரண்டு குடைகளுக்கு எழுபது ரூபாய் ஆயிற்று.

ஐம்பதும் எழுபதும் நூற்றி இருபது ரூபாய் ஆயிற்று. அம்மாவுக்கு ஏதாவது வாங்க வேண்டும். என்ன வாங்கலாம்? மதுரைச் சுங்குடிப் புடவை உடுத்திக் கொண்டால் அம்மாவைப் பார்ப்பதற்கு மகா லட்சுமியைப் பார்ப்பதைப் போல இருக்கும். அப்படி ஒரு தெய்வீகக் களை. காலில் விழுந்து நமஸ்காரம் செய்ய வேண்டும் என்று தோன்றியதுண்டு ரவிக்குப் பல தடவைகளில். ஆனால் மற்றவர்கள் கேலி செய்வார்களே! அதனால் மானசீகமாகவே அவள் பாதங்களில் தலை வைத்து வணங்குவான். அம்மாவிடம் பிரௌன் கலரில் ஒரு சுங்குடிப் புடவைதான் இருக்கிறது. அதற்கு ஜோடியாக நீலத்திலோ கறுப்பிலோ ஒன்று வாங்க வேண்டும் என்று அவள் அவ்வப்போது பேச்சு வாக்கில் சொல்லிக் கொண்டிருப்பாள். எனவே அம்மாவுக்கு ஒரு சுங்குடிப் புடவை. எழுபத்தைந்தோ எண்பதோ வரும்.

அப்பாவுக்கு?

அப்பாவுக்கு ஒன்றும் வாங்கிக் கொண்டு போகாவிட்டால் கூட அவருக்கு ஒரு ஏமாற்றமும் இருக்காது. ஆனால் அம்மா வருத்தப் படுவாள். காலையிலேயே அவள் எவ்வளவு நாசூக்காக அதைத் தெரியப்படுத்தினாள்?

அப்பாவுக்குப் புத்தகங்கள்தான் உயிர். எப்போதும் படித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆங்கிலமும் தமிழும் அல்லாமல் அவருக்கு ஹிந்தி, மராத்தி, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளும் நன்றாகப் படிக்கவும் பேசவும் வரும். சனிக் கிழமை ஸ்கூல் விடுமுறை. அன்று அப்பா தவறாமல் ஹிக்கிம் பாதம்ஸ், புக் ஸெண்டர், லை அண் கோ முதலிய புத்தகக் கடைகளுக்



ரேஷனுக்கு நிற்குங்கால் நகை!

"ரேஷனுக்கு நின்னுக்கிட்டிருந்த போது என் மனைவிக்குப் பிரசவ வலி எடுத்தது!"

"அடடா! அப்புறம்?"

"ஆண் குழந்தை பிறந்தது. சுந்தரரேஷன்னு பேர் வச்சிருக்கோம்!"



"குடும்பக் கட்டுப்பாடு அதிகாரி: உங்களுக்கு இரண்டு பிள்ளைகள் என்கிறீர்கள், இப்போதைக்கு இத்துடன் நிறுத்திக்கக் கூடாதா?"

"ரேஷனில் மண்ணெண்ணெய், சர்க்கரை நீர் வாங்கித் தருவதாக உறுதி கூறினால் நிறுத்திக் கிறேன்!"

✖

"உங்க பையன் என் பெண்கிட்டே சினிக் கியூவில் வச்சே காதல் கடிதம் எழுதிக் குடுத்திருக் கான் ஓய், தெரியுமா?"

"அப்படியா? என்ன எழுதியிருக்கான்?"

"'மண்ணெண்ணெய் க்யூவும் சினி க்யூவும் போல நம் காதல் வளர்வதாக'ன்னு எழுதி யிருக்கான்!"

—ஜி. நடராஜன்

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

கெல்வாம் போய்விட்டு வந்துவிடுவார். மாதத் தின் முதல் வாரமானால் பத்துப் பதி னைந்து ரூபாய்களுக்குக் குறையாமல் ஏதா வது புத்தகங்களை வாங்கிக் கொண்டு வரு வார். மற்ற வாரங்களிலும் வெறுங் கையு டன் திரும்ப மாட்டார். இரண்டு மூன்று ரூபாய்க்காவது ஒன்றோ இரண்டோ புத்த கங்கள் வாங்கிக் கொண்டுதான் வருவார்.

அம்மா சொல்வதுண்டு: "ரவி, உங்கப்பா வுக்கு லாட்டரியில் ஒரு லட்சம் விழுந்துட்டா ஹிக்கிம்பாதம்ஸ்காரனுக்குத்தான் லாபம்! குறைஞ்சது ஐம்பதினாயிரத்துக்குப் புஸ்த கங்கள் வாங்கிக் குமிச்சுடுவார்."

ஆகவே ஹிக்கின்பாதம்ஸுக்குப் போய்ப் பார்த்து நல்ல புத்தகங்களாக ஏதாவது இரண்டு வாங்கிக் கொண்டால் ஆயிற்று. பத்து ரூபாய்க்கு மேல் வேண்டாம்.

'தாத்தாவுக்கு ஒரு எவர்சில்வர் பொடி டப்பியோ, கைத்தடியோ, மஃப்ளரோ வாங் கலாம்.

எல்லாமாக இருநூறு ரூபாய்க்கு மேல் ஆகிவிடுமே. பாக்கி இருக்கும் மூந்நூறு ரூபாயில் பாலுவுக்கு நூறு ரூபாய் கொடுத்து விட்டால் தான் மாதம் முழுவதும் செலவுக்கு என்ன செய்வது? வீட்டுச் செலவுக்கு அப்பா வுக்கு ஏதாவது கொடுக்க வேண்டாமா?

ராதாவுக்குத் தன் அன்பளிப்பாக ஒரு கூலிங் கிளாஸ் வாங்கிக் கொடுக்க வேண்டு மென்று அவனுக்கு ஆசை. ஆனால் அவள் வாங்கிக் கொள்வாளோ என்னவோ தெரி யாது. ரூபாய் கொடுத்து வாங்கிவிட்டு அவள் வேண்டாம் என்று சொல்லி விட்டால் என்ன செய்வது?

மணி இரண்டடித்தது. கௌண்டரில் யாரும் இருக்கவில்லை. ரவி டிஃபன் சாப் பிடச் செல்வதற்காக இருக்கையை விட்டு எழுந்தான். ஹோட்டலை நோக்கிப் போகும் போது அவன் மனம் காலையில் தான் எவ் வளவு உற்சாகமாக இருந்தோம் என்பதை யும் இப்போது எப்படிக் குழம்பிக் கிடக் கிறோம் என்பதையும் நினைத்துப் பார்த்தது. இந்த நிலைக்கு முக்கிய காரணமாக அமைந் தது பாலு அண்ணாதான்.

பாலு அண்ணா திருந்தவே மாட்டானோ? வீட்டுக்கு மூத்த பிள்ளை இவ்வாறு தத்தாரி யாக அலைந்து கொண்டிருப்பதில் அவன் பெற்றோருக்கு எவ்வளவு மன வேதனை இருக்கும் என்பதை எண்ணி அவன் வருந் தினான்.

ரவி டிஃபன் சாப்பிட்டுவிட்டு பாங்குக்குத் திரும்பியபோது சம்பள பட்டுவாடா நடந்து கொண்டிருந்தது.

"ரவி சார், போய்ச் சம்பளம் வாங் கிக்குங்க" என்று யாரோ ஒரு பியூன் சொன்னான்.

ரவி சம்பளம் கொடுக்கும் மேஜையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது. "ரவி, டெலிபோன்" என்று அவன் சகா ஒருவன் அழைத்தான்.

"ரவி ஹியர்" என்று கூறி டெலிஃபோன் ரிஸீவரைக் காதில் வைத்துக் கொண்ட ரவியின் முகம் அடுத்த நிமிடம் வெளிறி விபர்த்து விட்டது.


ரவியின் அப்பா ஸ்கூலில் பாடம் நடத்திக் கொண்டிருந்தபோது திடீரென்று மயக்க மாக விழுந்து விட்டார். வீட்டுக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். டாக்டர் வந்து பரி சோதித்துக் கொண்டிருக்கிறார். ரவி உடனே வரவேண்டும். இதுதான் டெலிஃபோனில் வந்த செய்தி.

(தொடரும்)

உயிர் கொடுக்கும் உத்தமர்கள்

"என் பேரு சகாராம ராவ். இருபது வருஷமாகக் கோயமுத்தூர்லே வக்கீலாக இருக்கேன். எனக்கு ரத்த அழுத்த நோய். எனது இரு சிறுநீரகங்களும் பழுதாகிவிட்டன. 1976ம் வருஷம் சென்னைக்கு என்னைச் சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார்கள். இரண்டு வருஷம் மருந்து சாப்பிட்டுக் காலத்தை ஓட்டினேன். 1978ம் வருஷம் செப்டம்பர் மாதம் எனது சிறுநீரகங்கள் இரண்டுமே முழுதும் பழுதுபட்டு, Blood Urea 90 சதவிகிதம் உயர்ந்துடுத்து. ரத்த அழுத்த நோய்தான் எனது இந்தச் சிறுநீரகக் கோளாறுக்குக் காரணம். 120 டயாலிஸிஸ் செய்து கொண்டேன். ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேல் செலவாயிற்று!"

"ஸார்! என் பேரு விட்டல் ராவ். நான் சகாராம ராவின் மூத்த சகோதரர். சட்டப் புத்தக விற்பனைப் பிரதிநிதி. என் சகோதரன் சிறுநீரக கோளாறிலே உயிரை இழந்து விடுவானோன்னு எனக்குப் பயம். நான் அவனுக்கு எனது ஒரு சிறுநீரகத்தை வழங்க ஆசையோடு முன்வந்தேன். ரத்த பாசம் அவனுக்கு உயிர் கொடுக்கத் துணிவைத் தந்தது! டாக்டர் கந்தசாமியும் டாக்டர் ராமலிங்கமும் என் சகோதரன் சகாராமராவுக்கு 'உயிர்' கொடுத்தார்கள்! என் சிறுநீரகம் என் சகோதரன் வாழ்வுக்குப் பெருந் துணையாக இருக்குன்னு பார்த்துச் சந்தோஷப்படறேன்!"







✖ விட்டல் ராவ்

✖ வக்கீல் சகாராம ராவ்

"ஸார்! என் சகோதரன் எனக்கு உயிர் கொடுத்தான்னு எனக்கு டாக்டர் கந்தசாமியும் டாக்டர் ராமலிங்கமும் வாழ்வு கொடுத்திருக்காங்க. நான் 'நார்மல் லைப்'புக்கு வந்துட்டேன். கோர்ட்டுக்கு கேஸ் வழக்காடச் சென்று வருகிறேன். எனக்கு ஆறு சகோதரர்கள். என் மூத்த சகோதரர் விட்டல் ராவ் செய்த தியாகம்தான் நான் உயிரோடு வளைய வர முடிகிறது" என்று நெக்குருகச் சொல்கிறார் வக்கீல் சகாராம ராவ்.

இதய மாற்று ஆபரேஷன், சிறுநீரக மாற்று ஆபரேஷன் போன்றவற்றில் பெரிய பிரச்னை நன்கொடையாளரின் உறுப்பைப் பெறுகிறவருடைய உடல் ஏற்க மறுத்து ஒதுக்கித் தள்ளிவிடுவதுதான். சிறுநீரகம் பொருத்தப்பட்ட சில நிமிஷங்களுக்குள்ளேயே நிராகரிப்பும் ஆரம்பித்துவிடும்! ரத்தக் குழாய்களில் ரத்தம் கட்டிப் போகுதல், சிறுநீரக இயக்கத் தடை போன்ற கோளாறுகள் தோன்றிவிடும்! எனவே மிகவும் எச்சரிக்கையாக முன்கூட்டியே பல பரிசோதனைகளைச் செய்து உடல், நன்கொடையாகத் தரப்படும் உறுப்பினை ஏற்குமா என்று ஆராய வேண்டியதாகிறது. சகோதரர்கள் போல் ரொம்ப நெருங்கிய உறவினர்கள் தரும் சிறுநீரகத்தை உடல் ஏற்க நல்ல வாய்ப்புண்டு. கோயமுத்தூரில் ராமகிருஷ்ணா வைத்தியசாலையில் சிறுநீரக மாற்றுப் பொருத்தல் ரண சிகிச்சையில் வெற்றி பெற்ற டாக்டர் கந்தசாமியையும் அவரது துணையாளர் ராமலிங்கத்தையும் இப்பொழுது சந்திக்கச் செல்கிறோம்.

டாக்டர் கந்தசாமியும் Nephrologist டாக்டர் ராமலிங்கமும் ஒரு டீமாக இருந்து பல வெற்றிகரமான ஆபரேஷன்களைச் செய்து புகழ் குவித்திருக்கிறார்கள்.

சிறுநீரக சஸ்திர சிகிச்சைநிபுணர் திரு கந்தசாமியுடன் நம் பேட்டி தொடங்குகிறது.

"டாக்டர்! நன்கொடையாளர் தம் இரு சிறுநீரகங்களில் ஒன்றைக் கொடுத்தால் பின்னர் அவர் ஆபத்தின்றி உயிர் வாழ முடியுமா?"

"ஒருவர் உயிர் வாழ்வதற்கு ஒரு சிறுநீரகம் ஒழுங்காகச் செயலாற்றினாலே

போதும். ஒருவருக்கு இரு சிறுநீரகங்களும் பழுதுபட்டால்தான் பல பிரச்னைகள் எழுகின்றன. சிலர் பிறக்கும்போதே பழுதான சிறுநீரகங்களுடன் பிறப்பதற்குச் சாத்தியக் கூறுகள் உண்டு. தாயின் கர்ப்பப் பையினுள் இருக்கும்போது பல கோளாறுகள் ஏற்படலாம். இப்படிப்பட்ட பழுதுபட்ட சிறுநீரகங்களுக்குத்தான் சிறுநீரக மாற்றுப் பொருத்தல், டையலிஸஸ் போன்ற சிகிச்சைகள் தேவைப்படுகின்றன.''

''சிறுநீரகத்தில் Stone formation ஏற்பட்டால் கூடச் சிறுநீரகங்கள் சீர்கெட்டுப் போகுமா?''

''மூத்திரத்தில் கால்சியம், பாஸ்பரஸ் போன்றவை திரவ ரூபத்தில் காட்சியளிக்கும். சில சமயங்களில் இவை திரவ வடிவத்திலிருந்து திடப் பொருளாக, ஸ்டோன் ஆக மாறிவிடும். இந்த ஸ்டோன்களினால் சிறுநீரகங்கள் பழுதுபட்டுவிட்டால் உடனே வைத்திய சிகிச்சை செய்ய வேண்டியது அவசியம்.''

''டாக்டர் கந்தசாமி! சிறுநீரக மாற்றுப் பொருத்தல் ஆபரேஷனைப் பற்றி விளக்கமாகச் சொல்கிறீர்களா?''

''சிறுநீரக நன்கொடையாளரிடமிருந்து முதலில் ஒரு சிறுநீரகத்தை எடுத்து வைத்துக்கொள்வோம். அந்தச் சிறுநீரகத்தை Nephrologist ஐஸில் பத்து நிமிஷம் குளிர வைத்துத் தருவார். இதற்குள் நோயாளியின் பழுதுபட்ட சிறுநீரகத்தை நான் எடுத்துவிட்டு, இந்தப் புதிய சிறுநீரகத்தை நோயாளியிடம் பொருத்திவிடுவேன். இந்த ஆபரேஷனுக்கு ஆறு மணி நேரம் ஆகலாம். ஆபரேஷன் தியேட்டர் கிருமிகள் இன்றி ஸ்டிரைல் ஆக இருப்பதுடன் டாக்டர்களும் நர்ஸ்களும் கிருமிகள் அற்ற உடைகளையே அங்கு அணிந்து செல்ல வேண்டும். ஆபரேஷனுக்குப்பிறகு சிறுநீரகம் பெற்ற நோயாளி விசேஷ பாதுகாப்பான அறையில் தீவிர வைத்தியக் கண்காணிப்பில் வைக்கப்படுவார்! வேளா வேளைக்கு மருந்துகள் கவனித்துத் தரப்படும். புதிய சிறுநீரகத்தை அவரது உடல் சரிவர ஏற்றுக் கொள்கிறதா என்று பரிசோதித்துப் பார்ப்போம். நன்கொடையாளரும் தீவிர வைத்தியக் கண்காணிப்பில் சில நாட்கள் இருப்பார்.''

''டாக்டர்! ரத்த பாங்க், கண் பாங்க் போன்று சிறுநீரக பாங்க் ஒன்றும் ஏற்படுத்திவிட முடியாதா?''

''வளர்ச்சியுற்ற நாடுகளில் நன்கொடையாளரிடமிருந்து பெற்ற சிறுநீரகங்களை 36 மணி நேரம் விசேஷ சாதனங்களின் துணை கொண்டு பாதுகாக்க முடியும். இங்கே அந்த வசதி இல்லை. ஆகவேதான் நன்கொடையாளரிடமிருந்து பெற்ற சிறுநீரகத்தை நோயாளியிடம் ஆறு மணி நேரத்துக்குள் ஒரு டீம் வொர்க்காகச் செயல்பட்டுப் பொருத்திவிடுகிறோம். இதுவரை நான்கு ஆபரேஷன்களை வெற்றிகரமாகச் செய்திருக்கிறோம். எல்லாம் கோவை ராமகிருஷ்ணா வைத்திய சாலையிலேயே நிகழ்ந்திருக்கின்றன.''

''பாசமிருக்கலாம், அன்பு இருக்கலாம். இருந்தாலும் தன் உடலில் ஓர் அவசியமான உறுப்பை இழக்க முன்வந்த தியாகம் ரொம்ப நெகிழ வைக்கிறது, டாக்டர்!''

''உயிர் வாழச் சிறுநீரகத்தில் ஒன்று திறம்பட இயங்கினால் போதும். மற்றொன்றைத் தன் குடும்பத்தினரில் சிறுநீரகம் பழுதுபட்ட ஒருவருக்கு வழங்கத் தைரியமாக முன் வரலாம். தேவைப்படுவது டாக்டரிடம் நம்பிக்கையும் நல்ல மனமும் துணிச்சலும் தான்.''

''இந்த மாதிரி சிறுநீரக மாற்றுப் பொருத்தல் ஆபரேஷனுக்கு என்ன செலவாகும்?'' என்று டாக்டர் கந்தசாமியைக் கேட்டேன்.

வக்கீல் சகாராம ராவ் பதில் கூறினார்: 15,000 லிருந்து 20,000 ரூபாய் வரை ஆகலாம். இது நோயின் ஆரம்ப கட்டத்தில் நடக்கும் ஆபரேஷனுக்கு. முற்றிப்போன எனது ஆபரேஷனுக்கு அதிக நாள் கண்காணிப்பும் வைத்திய வசதியும் தேவைப்பட்டதால் 50,000 ரூபாய் ஆயிற்று.''

உயிர் கொடுத்த உத்தமர் டாக்டரா அல்லது தம் உடல் உறுப்பு ஒன்றைத் தானம் செய்தவரா என்று யோசித்தபடியே விடை பெற்றுப் புறப்பட்டேன்.

பி. எஸ். எம்.



மாஸ்கோ நகரில் நடைபெற இருக்கும் 22வது ஒலிம்பிக் பந்தயங்களைப் பார்வையிட உலகெங்கிலிருந்தும் மூன்று லட்சம் மக்கள் வருவார்கள் என்றும் ருஷ்ய நாட்டு மக்கள் மூன்று லட்சம் பேர் கூடுவார்கள் என்றும் எதிர்பார்க்கின்றனர். இவர்களை நன்கு கவனித்து உதவி புரிவதற்காக 40,000 பேருக்குக் கடந்த நான்கு மாதங்களாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. வெளி நாட்டுப் பார்வையாளர்களுக்கும், கலந்து கொள்ளும் பந்தய வீரர்களுக்கும் உணவு தயாரிக்க 18,000 சமையற்காரர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இதில் 6000 சமையல்காரர்கள் சோவியத் யூனியனிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒலிம்பிக் பந்தயங்கள் முடிந்த பிறகு 18000 சமையற்காரர்களில், மிகச் சிறந்த சமையற்காரர் யார் என்றும் தேர்ந்தெடுத்துப் பரிசு கொடுக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

பி. நாராயணன்

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

—ராஜ்மோகன் காந்தி—

சென்னை ராஜதானியில் மட்டுமின்றி அதற்கு வெளியேயும் ஸி. ஆரின் இந்த ''வீழ்ச்சி'' வரவேற்கப்பட்டது. பூனாவிலிருந்து பிரசுரமான ''மராத்தா'' நாளிதழ், ''அர்ஜுனன் மீண்டும் வில்லேந்தினான்'' என்று செய்தித் தலைப்புக் கொடுத்தது.

19ம் தேதி வேட்பு மனு தாக்கல் செய்தார் ஸி. ஆர். அவரை எதிர்க்க இருவர் முன் வந்தனர். ஒருவர் பி. நாராயண குருப்; மற்றவர் எஸ். ராஜகோபாலன். பின்னவர், ஸி. ஆர். ஆதரவு அளித்து வந்தது போன்ற ஹரிஜன சீர்திருத்தத்தைத் தடுத்து நிறுத்துவதாக வாக்களித்தார். அந்த ஸ்தானத்துக்கு 8,109 வோட்டுக்கள் இருந்தன. ''ஒவ்வொருவருக்கும் ஒரு கடிதம் எழுதுவதென்றாலும் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் செலவாகும்'' என்ற ஸி. ஆர்., பத்திரிகையில் விடுத்த அறிக்கையில், வோட்டுக் கோரி தனித் தனியே கடிதம் எழுதாததற்காக வாக்காளரிடம் மன்னிப்பு வேண்டினார். ஏழை ஒருவன் தேர்தலுக்கு நிற்கும் இந்தப் பரீட்சார்த்தமான முயற்சிக்கு ஆசி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

காந்தி வடக்கே திரும்பிச் சென்று கொண்டிருந்தார். வழியில், சென்னையில் மறுபடியும் மகாத்மாவும் ஸி. ஆரும் 22ம் தேதி சந்தித்தனர். ''வற்புறுத்தலுக்கு ஆளாகி வருகிறேன்' என்று நீங்கள் சொன்னதன் பொருள் இப்போதுதான் எனக்கு விளங்குகிறது'' என்றார் காந்தி. ''என் முடிவு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டார் ஸி. ஆர். ''உங்களிஷ்டம் போல் செய்ய உங்களுக்குச் சுதந்திரம் உண்டு'' என்று பதிலளித்தார் மகாத்மா.

சத்தியமூர்த்தியும் பிரகாசமும் நிறம்பட ஒத்துழைப்புத் தர, ஸி. ஆர்., தி. நகரில் மகன் கிருஷ்ணசாமி கட்டியிருந்த புதிய, அடக்கமான வீட்டில் இருந்தபடியே காங்கிரஸின் தேர்தல் அலுவல்களை நிர்வகித்தார். ஆட்சி அதிகாரத்தில் பல ஆண்டுகளாக இருந்து வந்த ஜஸ்டிஸ் கட்சிதான் பிரதான எதிராளி. வாக்காளர்களின் எண்ணிக்கையும் தொகுதிகளின் பரப்பளவும் முன்னைப் போதையும்விட அதிகமாயிருந்தது. ஜஸ்டிஸ் கட்சிக்குச் சிவப்புப் பெட்டிகள்; காங்கிரஸுக்கு மஞ்சள்.

ஐம்பத்தெட்டு வயதான ஸி. ஆர்., வெற்றி என்ற ஒரே நோக்கத்துடன் சுறுசுறுப்பாகப் பணிகளைக் கவனித்தார். பயணம் செய்தார், பேசினார், ஒழுங்கு செய்தார், நிர்வகித்தார். ''காங்கிரஸுக்கு எதிரான வோட்டு ஒவ்வொன்றும் தேசியத்துக்கே அவமானம் தேடித்தரும் வோட்டாகும்'' என்று அவர் செல்லுமிடமெல்லாம் கூறினார்.

மத்தியில் இல்லாவிடினும் ராஜதானிகளில் பிரதிநிதித்துவ அரசு அமைவதற்கான சாத்தியக்கூறுகள் நோக்கி இந்தியா நகர்ந்து கொண்டிருக்கையில் ஐரோப்பாவில் ஜனநாயகத்தை அழிக்கவும், ஸ்தம்பிக்கவும் சதி நடந்து கொண்டிருந்தது. ''அமைதியே எங்களது ஆத்மார்த்தமான ஆசை'' என்று ஹிட்லர் கூறியதாக 1937 ஜனவரி 31ம் தேதிய ஹிந்துவின் செய்தித் தலைப்பு ஒன்று அறிவித்தது!

பிப்ரவரி கடைசி வாரத்தில் சென்னையில் தேர்தல் முடிவுகள் தெரிய வந்தன. காங்கிரஸுக்கு 159 ஸ்தானங்கள் கிடைத்தன. ஜஸ்டிஸ் கட்சிக்கு 16. முஸ்லிம் லீகுக்கு 10. ஸி. ஆர். 5326 வோட்டுக்கள் பெற்றிருந்தார். குருப் 372 ராஜகோபாலன் 270. முந்தைய அரசாங்கத்தில் முதல் அமைச்சராக விளங்கிய பொப்பிலி ராஜா காங்கிரஸின் வி. வி. கிரியிடம் 5000 வோட்டு வித்தியாசத்தில் தோற்றார்.

காங்கிரஸ் மாபெரும் வெற்றி பெற்றிருந்தது. சென்னை கவர்னர் எர்ஸ்கைன், ''காங்கிரஸ் இந்த அளவில் மகத்தான வெற்றி பெறும் என்று நானோ அல்லது வேறு யாரேனுமோ எதிர்பார்க்கவேயில்லை'' என்று அரசுக்கு அறிக்கை அனுப்பினார். ''நேர்மையான, நியாயமான காரணங்களுக்கு ஆதரவு தருவதை மக்களால் தவிர்க்க முடியவில்லை'' என்றார் ஸி. ஆர். உடனே எதிர்காலத்தைப் பற்றியும் நினைத்துப் பார்த்து அவர் சேர்த்துக்கொண்டார்:

''இவ்வளவு பிரும்மாண்டமான நம்பிக்கைக்குப் பாத்திரமாகியுள்ள காங்கிரஸ், அதனை எப்படி நியாயப்படுத்தப் போகிறது என்பதே நமது தற்போதைய கவலை. நமக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு பெரிய வாய்ப்பை நாம் ஒற்றுமையின்மை காரணமாகவும் தனிநபர்களின் அபிலாஷைகள் காரணமாகவும் இழந்துவிடாதிருக்க நமக்கு நல்லறிவைத் தருமாறு ஆண்டவனை வேண்டுவோம்.''

✕ ராஜாஜியும் பிரகாசமும்



மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உள்பட காங்கிரஸின் புதிய சட்டசபை அங்கத்தினர்கள், தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்க மார்ச் 10ம் தேதி கூடினர். பிரகாசம் இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்க வேண்டும் என்று வி. ஆர். முன்மொழிந்தார். அக்கிராசனர் ஸ்தானத்தில் இருந்தவாறு பிரகாசம் சட்டசபைத் தலைவர் பதவிக்கு வி. ஆரின் பெயரைப் பிரேரேபித்தார். நீண்ட பலத்த கரவொலி எழுந்தது.

''ராஜகோபாலாச்சாரியை ஏகமனதாக நீங்கள் தேர்ந்தெடுக்க விரும்புவதாக நான் அர்த்தம் பண்ணிக் கொள்ளலாமா?'' என்றார் பிரகாசம். ''ஆமாம்; அப்படித்தான்'' என்று எல்லாப் பக்கங்களிலிருந்தும் குரலொலிகள் எழுந்தன. பிரகாசம் சம்பிரதாயத்துக்காகப் பிரேரணையை வோட்டுக்கு விட்டார். ''எல்லோருக்கும் சம்மதம்'' என்ற குரலொலிகள் வானளாவின.

''பிரேரணைக்கு எதிராக யாராவது இருக்கிறீர்களா?'' என்று பிரகாசம் கேட்டார். ''இல்லை; இல்லை'' என்று எல்லாப் பக்கங்களிலிருந்தும் பதில் வந்தது. அவையின் முடிவைச் சந்தேகத்துக்குச் சிறிதும் இடமின்றி நிச்சயப்படுத்திக் கொள்ளப் பிரகாசம் பிரேரணைக்குச் சாதகமான அனைவரையும் கைதூக்கச் சொன்னார். எல்லாக் கரங்களும் உயர்ந்தன. எதிரானவர்களைக் கரம் உயர்த்தச் சொன்னபோது ஒரு கரமும் உயரவில்லை.

இப்போது வி. ஆர். சட்ட சபை அங்கத்தினர்களை நோக்கி உரையாற்றினார். பிரகாசமும் தாமும் மகாத்மா காந்தி உருவாக்கியுள்ள மாபெரும் அற்புதமான திட்டம் பற்றி முதன் முதலாகப் பேசிக் கொண்ட அந்த வீர சாகசம் மிக்க நாட்களைப் பின்னோக்கிப் பார்த்தால் தாம் நிலைகுலைந்து போய்விட நேருமென்றார்.

''எனவே நான் ஒரு காரியவாதியாகவே பேசுகிறேன். இன்றைக்கே காரியங்கள் நடந்தாக வேண்டும். நமது கட்சி அமைப்பு வேலைகள் இன்றைக்கே முடிந்தாக வேண்டும். யாராவது எந்தப் பதவிக்காவது ஆசைப்பட்டால் அவர் அந்தப் பதவிக்குத் தாம் லாயக்கற்றவர் என நிரூபித்துக் கொண்டவராகிறார். ஒரு மலையில் உட்கார்ந்துகொண்டு ஏகாதசியன்று உண்ணாவிரதம் இருப்பது சுலபம். ஆனால் மாடர்ன் கடையில் உட்கார்ந்து கொண்டு உண்ணாவிரதம் இருப்பது கஷ்டம்.''

சட்ட சபை காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கீதையிலிருந்தும் உபநிஷத்திலிருந்தும் திரும்பி வந்து கீதை வாக்குப்படி செயலாற்ற வி. ஆர். முன்வந்ததற்குப் பொறுப்பாளர் பலரில் தாமும் ஒருவர் என்று சுப்பராயன் தமக்குப் பெருமை கோரினார். இதன் பிறகு இந்தக் கூட்டத்துக்கு விசேஷ அழைப்பின் பேரில் வந்திருந்த சத்தியமூர்த்தி பேசினார்.

53. ஆட்சிப் பொறுப்பு

சத்தியமூர்த்தி சொன்னார்:

'' 'இந்தியாவின் முடி சூடா மன்னராக விளங்குங்கள்; இந்திய தேசிய காங்கிரஸின் அக்கிராசனராகுங்கள்' என்று நான் வி. ஆரிடம் மன்றாடியிருக்கிறேன். ஆனால் வி. ஆர். என் கருத்தை ஒதுக்கித் தள்ளிக் கொண்டே வந்திருக்கிறார். இப்போது ஓர் அற்புதம் நிகழ்ந்திருக்கிறது. காங்கிரஸ் ஊழியர் ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய மிகப் பெரிய கௌரவத்தை ஏற்க மறுத்த ஒருவர், கட்சிக்குச் சட்ட சபையில் தலைமை வகிக்கும் சுமையை, நன்றிகூட எதிர்பார்க்க முடியாத காரியத்தை ஏற்குமாறு வற்புறுத்தப்பட்டிருக்கிறார்!''

சென்னையில் மட்டுமின்றி காங்கிரஸ், இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளில் வென்றிருந்தது. ஆனால் அது புதிய அரசியல் சட்டம் நிர்ணயித்த வரையறைகளுக்கு உட்பட்டுப் பதவி ஏற்குமா? ''ஏற்கவும் செய்யலாம்; ஏற்காமலும் இருக்கலாம்'' என்று வி. ஆர். சட்டசபையாளருக்குச் சொன்னார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானத்துக்கு — அது என்னவாக இருந்தாலும் — அவர்கள் கீழ்ப்படிய வேண்டும் என்று சேர்த்துக்கொண்டார்.

சட்ட சபை காங்கிரஸ் கட்சி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் கமிட்டி ஆகியன இந்த வினாவை யொட்டி வாக்கெடுப்பு நடத்தின. ஒவ்வொரு அமைப்பும் பதவி ஏற்பதையே ஆமோதித்தது. தெற்கே, தாலுக்கா, ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகளிலும் மிகப் பெரும்பாலானவை இதே சிபாரிசைத்தான் செய்திருந்தன.

ஆயினும் காங்கிரஸ் அக்கிராசனர் நேரு இதனை எதிர்த்திருந்தார். ஃபைஸ்பூர் காங்கிரஸ் மகாநாட்டின்போது அவர், ''காங்கிரஸ் கொள்கையின் தர்க்க ரீதியான விளைவைக் கணிப்போமாயின் பதவி ஏற்பதிலோ அல்லது அமைச்சரவை அமைப்பதிலோ நமக்குச் சம்பந்தமே இருக்க முடியாது'' என்று கூறியிருந்தார்.

(தொடரும்)

தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்

அவன்: ''அழுகல் தக்காளி கால் கிலோ, முற்றின வெண்டைக்காய் அரைக்கிலோ கொடப்பா!''
காய்கறி விற்பவன்: ''ஏன் ஸார்...?''
அவன்: ''அப்பதான் என்னை இனிமே மார்க்கெட்டுக்குத் துரத்துவதை என் மனைவி நிறுத்துவா!''
—க. ராஜாஜி





லக்மே வதன ரேகா

மினுக்காத மென்வண்ண இயற்கைப் பொலிவுக்கு லக்மே முகப் பவுடர்—இழைக்கிறள் ரேகா. பட்டுச் சல்லாத் துணிவழியே சலித்தெடுத்த பனி மகரந்தம்: லக்மே முகப் பவுடர்... உறைக்கும் ஸ்டுடியோ விளக்கொளியிலும் மலர்ச்சியோடு கிளக்குது. வெளிப்புற ஷூட்டிங்கா—விரலசைவில் விருக்கென ரேகாவுக்குக் களைகட்டுவது லக்மே காம்பேக்ட். சிங்காரச் சிற்றடக்கச் சிமிழ். நங்கையர் கைப் பைக்குள் கைலாகப் பொருந்தும். ரேகா முக ராசி வாகாய் உமக்கும் வாய்த்திட, வரவேற்பீர் லக்மே.

லக்மே அல்ட்ரா-சில்க் முகப் பவுடர் மற்றும் லக்மே காம்பேக்ட்



எழிலைப் படைப்போர்—லக்மே

Lakmé

daCunha L-53 TM

ஒற்றன் 4X-1 சித்திரக்கதை: புஞ்ஜாய் 14



இயேசுவின் அளவு!

ஒருமுறை இயேசுநாதர் பன்னிரண்டு சீடர்களுடன் ஒரு வயல்காடு வழியாகச் சென்று கொண்டிருந்தார். சீடர்கள் பசியால் வாடிப் போயிருந்தார்கள்.


வழியில் ஒரு வயலில், பெரிய, பெரிய கற்கள் போடப்பட்டு, பயிர் நாசமாக்கப் பட்டிருந்ததைக் கண்ட இயேசுநாதர் மனம் வருந்தி, "இவன் கஷ்டப் பட்டுச் செய்த பயிரை இவன் எதிராளி கற்களைப் போட்டு நாசமாக்கியிருக்கிறான். நாம் இந்தக் கற்களை எடுத்து அப்புறப் படுத்தி விடுவோம்" என்றார்.

சீடர்கள் மகிழ்ச்சியோடு கற்களை எடுத்துப் போடத் தொடங்கினார்கள்.

ஆனால் துடுக்குத்தனம் மிகுந்த ஒருவன் முணுமுணுத்ததோடு மட்டுமல்லாமல், சிறிய கற்களாகப் பார்த்து எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தான்!

இதைக் கவனித்த இயேசுநாதர், அவரவர் கைகளில் இருந்த கற்களை ரொட்டிகளாக மாற்றி விட்டார்! எல்லாருக்கும் வயிறு நிறைய, அந்த ஒருவனுக்கு மட்டும் அவன் கையில் இருந்த கல்லின் அளவு ஒரு சிறிய ரொட்டி!

"நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்க



(தொடரும்)

ளுக்கும் அளக்கப்படும்'' என்று இகேக கூறினர்!

—என். எஸ். நாதன்

×

கண்டிப்புத் தேவையா?

கேரளாவில் கோட்டயத்தை அடுத்துள்ள ஒரு பள்ளியில் பரீக்ஷைகள் நடந்து கொண்டிருந்த சமயம் பள்ளி விதிகளின் படி முழுச் சீருடை அணியாமல் அவசரமாகப் பள்ளிக்குள் நுழைந்த ஒரு மாணவியை ஆசிரியை, "சீருடை அணிந்து வந்தால்தான் பரீட்சை எழுத அனுமதி கிடைக்கும்" என்று கண்டிப்புடன் கூறினர். மன்றாடியும் பலன் இல்லாமல் சிநேகிதி ஒருத்தியின் சைக்கிளை இரவல் வாங்கிக் கொண்டு உடனே வீட்டை நோக்கி விரைந்தாள் அந்த மாணவி. அவளுடைய அவசரம் எதிரே வரும் லாரிக்குத் தெரியவில்லையே? லாரியும் சைக்கிளும் மோத, அந்த இடத்திலேயே அச்சிறுமியின் சரித்திரம் முடிந்து விட்டது. அவளைச் சீருடையின்றி அனுமதிக்காத அப்பள்ளியில் அன்று பரீக்ஷைகளே நடைபெறவில்லை. சிறுமியின் அகால மரணத்துக்காகப் பள்ளிக்கு விடுமுறை!

(ஆதாரம்: மலையாள மனோரமா)

• ராஜலக்ஷ்மி கிருஷ்ணன்



திரைக் கதை உருவாகிறது

விமலா ரமணி

[பழைய எழுத்தாளர் பராமுகத்துக்குத் திரைக் கதை வசனம் எழுத ஒரு சந்தர்ப்பம் திடீரென்று கிடைத்தது. தமக்குத் தெரிந்த ஏதோ ஒரு கதையை எழுதிக் கொண்டு தம் தயாரிப்பாள நண்பரிடம் போனார் பரா முகம். ஒரு சின்ன விஷயம்... பராமுகம் பாவம். ரொம்பக் காலமாக 'பராக்குப்' பார்த்துக் கொண்டிருந்து விட்டார். எனவே தற்கால நியூவேவ், சினிடெக்னிக் இவை இவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.]

பராமுகம்: வணக்கம் அண்ணே... நீங்க சொன்னபடி சினிமாக் கதை எழுதிட்டு வந்திருக்கேன்.

தயாரிப்பாளர்: அடே... எழுத்தாளர் அண்ணாச்சியா? வாங்க... வாங்க... உட்காருங்க.... புதுசா எழுதி இருக்கீங்களா?

பரா: இப்பத்தாங்க புதுசா எழுதிட்டு வந்திருக்கேன்.

தயா: அதில்லீங்க... தற்காலத்துக்கு ஏத்த மாதிரி புது தினுசா...

பரா: ஏதோ ஒரு தினுசா எழுதிட்டு வந்திருக்கேன்... கேளுங்களேன் கதையை...

தயா: 'ட்ரீட்மெண்ட்' எல்லாம் எழுதிட்டீங்களா?

பரா: நம்ம கதையிலே பேஷண்ட் எல்லாம் கிடையாதுங்க... இது நல்ல ஆரோக்கியமான கதை.

தயா (எரிச்சலுடன்): ஆரம்பமே ஆரோக்கியமா இல்லையே! சரி... சொல்லுங்க...

பரா: காலை நேரம் அதாவது வைகறைப் பொழுது. பூபாளம் பாடற நேரம். நம்ம கதாநாயகி எழுந்து வாசல் தெளிச்சு கோலம் போட்டு... குத்து விளக்கு ஏத்தி வைக்கறா....

தயா: செண்டிமெண்டலா நல்லாத்தான் இருக்கு. ஆனா புது தினுசா ஏதும் இல்லையே... இந்தக் காலத்துக் கதாநாயகி எவ ஆயா வாசல் தெளிக்கிறா? கதையை இப்படி மாத்துவோம்... காலை நேரம்... ரேடியோகிராமிலே 'மச்சானைப் பார்த்தீங்களா?' பாட்டுக் கேட்குது! கதாநாயகி அப்பத்தான் தூக்கத்திலிருந்து எழுந்து...

பரா: மச்சானைப் பார்க்கப் போறாளா?

தயா: சீ....சீ.... அந்தப் பாட்டு சும்மா ஒரு இதுக்காக.... மேற்கொண்டு கதையைச் சொல்லுங்கன்னு சொன்னேன்.

பரா: நம்ம கதாநாயகியோட புடவை...

தயா: ஸ்டாப்... ஸ்டாப்... நம்ம கதாநாயகி புடவையே கட்டக் கூடாது!

பரா: அண்ணே!

தயா: பயப்படாதீங்க.... பெல்பாட்டம், மேக்ஸி, ஜீன்ஸ்... இப்படித்தான் ஏதாவது போடணும்....இல்லாட்டி நைட் டிரஸ்லே இருக்கிறதாக் காட்டுவோம்.

பரா: கதை பகல்லேயும் நடக்குதுங்க!

தயா: அப்ப டிரஸ்ஸை மாத்துவோம்.

பரா: நல்ல வேளை, பகலுக்கு ஒரு கதாநாயகி ராத்திரிக்கு ஒரு கதாநாயகின்னு மாத்தாம இருந்தாச் சரி.

தயாரி: சரி, சரி. கதையைச் சொல்லுங்க... கதாநாயகி என்ன பண்றா?

பரா: இன்னும் அவள் படுக்கையிலேதான் கிடக்கா! எழுந்திருக்கல்லியே!

தயா (யோசித்து): ஆ! ஒரு ஐடியா. கதாநாயகி செக்ஸியா நைட் டிரஸ் போட்டிருக்கா... காமிரா அவள் காலிலே இருந்து மேலே போகுது...கால்...இடை... மேலே... மேலே... ஐயோ... ஐயோ...

பரா: காமிரா மேலே போகட்டுங்க. நீங்க இங்கேயே இருங்க.

தயா: அண்ணே... இந்த இடத்துலே ஒரு செண்டிமெண்டோட படத்தை ஆரம்பிப்போம். நல்ல சகுனமா போன் பெல் ரிங் ஆகுது. கதாநாயகி அப்படியே ஒயிலா படுத்தபடியே 'போன்' பேசறா! பஸ்ட் ஷாட்டே இந்தச் சீனுடன் ஆரம்பிப்போம்! எப்படி?

பரா: நீங்க எப்படிச் சொல்றீங்களோ அப்படி

தயா: அடிக்கடி அவ பேச்சிலே 'டார்லிங்... டியர், உ ...ஆ...!' அப்படீன்னு செக்ஸியா டயலாக் வரணும்... அப்பத்தான் ஆடியன்ஸுக்கு ஒரு கிளுகிளுப்பு இருக்கும். குளுகுளுப்பாகவும் இருக்கும்.

பரா: ரொம்பக் குளுகுளுப்பா இருந்தா சளிப் புடிச்சுடுங்க.

தயா: நம்ம கதையிலே என்னென்ன வரணும்னு ஒரு லிஸ்ட் தரேன். குறிச்சு வைச்

க்குங்க. ரெண்டு டூயட் கதாநாயகிக்கு. கதாநாயகனோட ஒரு டூயட். வில்லனோட ஒரு டூயட்....

பரா: என்னங்க கதாநாயகி வில்லனோட டூயட் பாடுவாளா? கேரட்டரே போகு துங்களே!

தயா: ஒண்ணும் ஆகாது. வில்லன் ஆசைப் படறான். டூயட் பாடறு. இதுலே என்ன தப்பு?

பரா: அண்ணே கதையே போயிடுங்க!

தயா: அட, கனவு சீனுங்க. வில்லனோட ஆசையை அப்படிக் காட்டுவோம். டூயட் டுக்கு டூயட்... ரெண்டு ஹீரோவோடவும் கதாநாயகி ஆடிப் பாட ஒரு சான்ஸ்! எப்படி?

பரா(மெதுவாக) உங்க ஆசை எப்படியோ அப்படி! (இரைந்து) சரிங்க... அப்பறம்?

தயா: அப்பறம் ஒரு பைட் சீன் கதாநாய கியை வில்லன் துரத்தணும். வில்லனைக் கதாநாயகன் துரத்தணும்... இவங்க ரெண்டு பேரும் ஓடி ஓடி ஒரு பெரிய கட்டடத்தோட சாரத்துக்கு மேலே சண்டை போட ணும்.

பரா: சாரத்துலே ஏங்க சண்டை? ஏதாவது ஒரு ஓரத்திலே சண்டை போடக் கூடாதா?

தயா: என்ன ஆளுய்யா? 'பியர் ஓவர் த சிட்டி' பார்த்திங்களா? அந்த டாப்புலே போடற சண்டைதான் டாப்! அதுக்கே ஓடின படம் அது! அந்த மாதிரி ஒரு 'பைட்' இருந்தாத்தான் ஒரு 'த்ரில்' இருக் கும். ஒரு 'கிக்' இருக்கும்.

பரா: எனக்கு 'பக்'குன்னு இருக்குங்க!

தயா: ஆரம்பத்திலே அப்படித்தான் இருக் கும். அப்பறம் சரியாயிடும். (உற்சாக மாக): கதாநாயகனும் வில்லனும் சண்டை போடும்போது கதாநாயகி அந்த உயர மான கட்டடத்தோட ஒரு நுனியிலே தொங்கணும்.

பரா: அய்யய்யோ...!

தயா: பார்த்திங்களா... இதைக் கேட்கும் போதே இவ்வளவு திகிலா இருக்குதே உங்களுக்கு... பாக்கறவங்களுக்கு எப்படி இருக்கும்?

பரா: நீங்க என் காலை அழுத்தி மிதிச்சுட் டீங்க... அதுதான் வலி தாங்காம ஐயய் யோன்னு சொன்னேன்.


தயா: அப்படியா? சாரி... நான் உணர்ச்சி வசப்பட்டுட்டேன். காமி ராவிலே கதாநாயகனைக் காட்ட றோம். வில்லனைக் காட்டறோம். கதாநாயகியோட கை கொஞ் சம் கொஞ்சமா நழுவிட்டு வருவதைக் காட்டறோம். கதா நாயகன்... வில்லன்... கதா நாயகி கை... இப்படி மாத்தி மா த் தி க் . காட்டிட்டே இருந்தா....

பரா: ஆடியன்ஸ் எழுந்து போயிடுவாங்க.

தயா: போக மாட்டாங்க. என்ன ஆகு மோன்னு சீட் லோட உட்கார்ந்திருப் பாங்க. அப்போ திடீர்னு கதாநாயகியோட கை நழுவிக் கீழே விழறா... ஐம் பது மாடிக் கட்டிடம். கதா நாயகி கீழே விழறா....

பரா: ஐயய்யோ! கதா நாயகி கீழே விழுந்தா...

தயா: பார்த்திங்களா? அவ கீழே விழுந்தா என்ன ஆகும்?



பரா: ஒண்ணும் ஆகாது. அஞ்சடிப் பள்ளம் ஆகும்.

தயா: ஆகாது. நான் கதாநாயகியைக் காப்பாத்திடுவேன்.

பரா: நீங்க தயாரிப்பாளர். நீங்க நினைச்சா என்னவேணு செய்யலாம்.

தயா: கதாநாயகி கீழே விழுறாளா? கதாநாயகன் வில்லனைக் கொன்னுட்டு ஒரு கயிறு வழியா 'சர்'னு கீழே இறங்கறான். கதாநாயகி கீழே விழுறதுக்கும் இவன் போய் அவளைத் தாங்கிக்கறதுக்கும் சரியா இருக்கணும்.

பரா: அதெப்படிங்க? இவங்க சண்டை போட்டு முடியறவரை கதாநாயகி அந்தரத்துலே தொங்குவாளா?

தயா: நான் ப்ரட்யூசர்... நான் சொல்றேன். அவ கொஞ்சம் லேட்டாக் கீழே விழுவா. நடுவுலே நீங்க என்ன?

பரா: கரெக்ட். நீங்க சொன்னாச் சரி. சரிங்க நான் வரேன்.

தயா: என்னங்க கதை சொல்றேன்னு சொன்னீங்க....?

பரா: அதான் நீங்களே முழுக்க முழுக்கச் சொல்லிட்டீங்களே... மூலக் கதைன்னு கூட என் பேர் போட முடியாத அளவுக்கு இதுலே உங்க மூளைதான் முழுக்க முழுக்க வேலை செஞ்சிருக்கு. நான் வரேங்க... (போகிறார்)

தயா: சினிமான்னு என்னன்னே தெரியாதவன் எல்லாம் பீல்டுக்குக் கதை எழுத வந்தா இப்படித்தான். ப்ரண்டுக்கு ஒரு 'சான்ஸ்' தரலாமான்னு பார்த்தா... (வெளியே இருந்து ''ஸார்... ஸார்...'' என்று குரல் கேட்கிறது.)

நேர் எதிரில் நின்று முகஸ்துதி செய்பவர்களின் பாராட்டுதல்களைச் சந்தோஷ பெருமையுடன் ஏற்றுக் கொள்கிற சுபாவம் எல்லாரிடத்தும் பொதிந்து கிடக்கிறது. ஆனால், நபியவர்கள் இந்தப் பலஹீனத்துக்கு இரையானதில்லை.


மரியா கிப்தியாவுக்கும் இவருக்கும் பிறந்த மகவு இப்ராஹீம் இரு வயது நிரம்பு முன்னே உயிர் நீத்தான். அப்போது மதினாவில் பகற்பொழுதில் பூரண சூரிய கிரகணம் நிகழ்ந்தது. அப்போது ஒருவர் நபியிடம் ''பாலகனைப் பிரிந்து தாங்கள் மட்டுமா துயர் உறுகிறீர்கள்? இறைவனும் கூட அன்றோ துக்கம் தெரிவிக்கிறான்? இதோ பாருங்கள்! கிரகணத்தை உண்டு பண்ணி, துக்கம் காக்கிறான்!'' என்றார்.

அக்கணமே நபிக்கு சினம் தோன்றிற்று.

''என்ன உளறுகிறீர்? உலகில் எந்த மனிதனின் துயரத்திலும் இறைவன் பங்கு ஏற்பதில்லை என்பது உமக்குத் தெரியாதா? இயற்கையின் விளைவுகளை இப்படி விபரீதமாக அர்த்தப் படுத்தி, தேவதூஷணம் செய்ய வேண்டாம்'' என்றார்.

எப்படிப்பட்ட வேதனை சூழ்ந்த வேளையிலும் நபிமணி நிதானத்தை இழந்ததில்லை.

ஆதாரம் - 'நபிபெருமானார் வரலாறு' நூல்
- ஸ்ரீ சைதன்யன்



தயா: யாரய்யா அது?

குரல்: சினிமாவுக்கு ஒரு புது மாதிரிக் கதை! சஸ்பென்ஸ், த்ரில், திருப்பத்தோட எழுதிட்டு வந்திருக்கேன். கேக்கறீங்களா?

தயா: பரவாயில்லையே... வாங்க... வாங்க இப்படி வாங்க...

(ஒரு வாலிபன் உள்ளே தயங்கியபடி வருகிறான். உள்ளே நுழைந்த இளைஞனுக்கு இருபத்தைந்து வயதுக்குள்தான் இருக்கும். இங்கும் அங்கும் பார்த்தபடி தயங்கி நிற்கிறான். தயாரிப்பாளர் அன்புடன் கூப்பிடுகிறார்.)

தயா: வா தம்பி... உன் பேர் என்ன?

இளைஞன்: என் பேர் சின்ன ராஜா.

தயா: அதென்ன தம்பி சின்ன ராஜா... பெரிய ராஜா யாரு?

இளை: என் பேர் ராஜாங்க. இந்தக் காலத்துலே ராஜாங்கிற பேருக்கு சினி பீல்டுலே ஒரு நல்ல மவுசா இருக்கு. அதனாலே சின்ன ராஜான்னு வைச்சுட்டேன்.

தயா (மகிழ்ச்சியுடன்): வெரி குட்... தம்பி விவரம் தெரிஞ்ச ஆளா இருக்கே. உக்காரு தம்பி.

ராஜா: உங்களுக்கு எந்த மாதிரி டைப் கதை வேணுங்க?

தயா: எந்த டைப்பா இருந்தாலும் பரவாயில்லே. ஹால்டா, ரெமிங்டன், காட்ரெஜ்... எந்த டைப்ரைட்டர் வைச்சிருக்கே?

ராஜா: நான் அதைச் சொல்லலீங்க. நம்ம கிட்டே அஞ்சாறு மிஷின் இருக்கு. நீங்க எந்த மிஷின்லே அடிக்கச் சொன்னாலும் செகரட்டரி கிட்டே சொல்லி 'டைப்' அடிச்சுத் தரச் சொல்றேன். நான் கேட்டது கதை எந்த மாதிரி 'டைப்'?

தயா (தனக்குள்): பய பெரிய ஆளா இருப்பான் போலிருக்கே? செகரட்டரி கூட வைச்சிருக்கானு? (இரைந்து) நீ எத்தனை 'டைப்' தயாரா வெச்சிருக்கே?

ராஜா: உங்களுக்குக் காமெடி வேணுமா? சீரியஸ் காமெடியா? மெலோ காமெடியா? சென்டிமெண்டல் டச்சஸ் ஹிலாரியஸ் சஸ்பென்ஸ் காமெடியா?

தயாரி: தம்பி நிறுத்து. நிறுத்து... தலை சுத்துது. அதென்ன சென்டிமெண்டல் டச்சஸ்... ஹிலாரியஸ் சஸ்பென்ஸ்... காமெடி? காமெடி கேட்டிருக்கேன்... ஹிலாரியஸ் கேட்டிருக்கேன். அதென்ன சஸ்பென்ஸ் ஹிலாரியஸ்?

ராஜா: பார்த்தீங்களா... உங்களுக்குப் புதுசாத் தெரியுது இல்லே...அதுதாங்க நம்ம ஸ்பெஷாலிடி.. எல்லாமே புதுமை. புதுசு! கேளுங்க.. சிரிப்பு வரும்... சிரிப்பு வரும்னு ஆடியன்ஸ் காத்துக்கிட்டே இருப்பாங்க... சிரிப்பே வராது. அதான் ஹிலாரியஸ் சஸ்பென்ஸ்! இதுலே அப்படி இப்படி. சென்டிமெண்டல் 'டச்சஸ்' புகுத்திட்டா சென்டிமெண்டல் டச்சஸ் ஹிலாரியஸ் காமெடி! எப்படிங்க?

தயா: ரொம்ப சுவாரஸ்யமா இருக்கு தம்பி. கதை சொல்லு... இதே டைப்புலே கதை சொல்லு!

ராஜா (பயங்கரமான குரலில்): இரவு மணி இரண்டு... டங் டங் டங் டங்...மணி

நான்கு முறை அடித்து ஓய்ந்தது.

தயா: என்னப்பா ரெண்டு மணின்னே... நாலு தரம் சொல்றே?

ராஜா: மணிக்கூண்டுலே ரெண்டு தரம் அடிச்சுதுங்க. பக்கத்துலே ஜெயில்ங்க...அங்கே ரெண்டு தரம்... அப்பதான் ஒரு உருவம் மெல்ல நடந்து போயிட்டு இருக்கு. அந்த உருவத்தை உற்றுப் பார்த்தா... ஒன்றுமே தெரியல்லே....

தயா: ஏன்?

ராஜா: டங்... டங்... ரெண்டு மணி இருட்டுங்க... அந்த உருவம் நொண்டி நொண்டிப் போகுதுங்க...

தயா (சிரிப்புடன்) என்னப்பா ராத்திரி ரெண்டு மணி இருட்டிலே நொண்டி விளையாட்டு? அதுதான் கதாநாயகனு?

ராஜா: இல்லிங்க. அதுதான் கதாநாயகன் வளர்க்கிற நாய்.

தயா: நாயா?

ராஜா: அது நாய்! அந்த நாயோட ஒரு கால்லதான் அடிபட்டிருக்கு. அது கதாநாயகனைத் தேடிட்டு வந்துட்டு இருக்கு.

தயா: ஆமா... கதாநாயகன் எங்கே?

ராஜா: அவனை வில்லன் கையைக் காலைக் கட்டித் தண்டவாளத்திலே போட்டிருக்கான்.

தயா: ஐய்யய்யோ!

ராஜா: அப்புறம் கேளுங்க... ரயில் வருது... கதாநாயகன் தண்டவாளத்துல இருக்கான். காமிராவிலேலே முதல்லே கதாநாயகனைக் காண்பிக்கிறீங்க... அப்பறம் தண்டவாளத்தைக் காண்பிக்கிறீங்க.... ரயில் வருது...நாய் வருது...

தயா: முதல்லே தண்டவாளத்திலே ரயில் வருதுன்னே. இப்போ நாய் வருதுங்கறியே?

ராஜா: ரோட்டிலே வர நாயைக் காண்பிக்கிறேங்க.... அப்பறம் பாருங்க இனி மாக்ஸ்.... இப்ப பாருங்க. காமிரா தண்டவாளத்திலே இருக்குங்க. நாய் இரைச்சிட்டு வருது.

தயா: நாய் குரைக்கும். இரைக்குமா?

ராஜா: இது ஆஸ்துமா நாய்.

தயா: காமிராவைச் சீக்கிரம் எடுத்துடப்பா. ரயில் வந்துடப் போகுது... காமிரா காஸ்ட்லி.

ராஜா: காமிரா — முதல்ல தண்டவாளம் — ரயில் — நாய் — நாய் — ரயில் — தண்டவாளம் (வேகமாக) தண்டவாளம் — ரயில் — ஜிகுஜிகு — நாய் (லொள் லொள்) தண்டவாளம் — ஜிகுஜிகு — லொள் லொள் — அங்கே ரயில் வந்தாச்சுங்க... ஜிகுஜிகுஜிகு ஜிகு — லொள் லொள் லொள் லொள்.

தயா (கண்களை மூடியபடி): என்னப்பா கதாநாயகன் மேலே ரயில் ஏறியாச்சா?

ராஜா: ஜிகு ஜிகு ஜிகு ஜிகு.... ஜிகு.... ஜிகு ஜிக்.... ஜி

தயா: என்னாச்சு?

ராஜா: ரயில் நின்னுடுச்சுங்க.

தயா: ஏன்?

ராஜா: ரயில்வே ஸ்டிரைக்!

தயா: தம்பி... அபாரம்... இந்த மாதிரி இதுவரை யாரும் கதை சொல்லி நான் கேட்டதில்லே... அப்படியே சினிமாவையே கண்ணால் பார்க்கற மாதிரி இருக்கு. இந்தா புடி அட்வான்ஸ் ஆயிரம் ரூபாய்....

ராஜா: நன்றிங்க... ஆனா நியூமராலஜி பிரகாரம் எனக்கு ஒன்னு நம்பர் ராசி இல்லீங்க... மூணு. அஞ்சுதான் ராசி... இதே கதையை நம்ப ராஜா தேசிங்கு தயாரிப்பாளர் கிட்டே சொன்னேன். அவருக்கு இந்த நாய் குலைக்கறதும், அதனோட சாகசங்களும் ரொம்பப் பிடிச்சுப்போச்சு! அடுத்த படத்துக்கு ஒரு நொண்டி நாயைத்தான் தேடிக்கிட்டு இருக்காராம். அதனால இந்தக் கதையை அவருக்கு 'ரிஸர்வ்' பண்ணச் சொல்லி....

தயா: இந்தா தம்பி புடி ஐயாயிரம்...இந்தக் கதை எனக்குத்தான். ஒரு பய பேசக் கூடாது. அக்ரிமெண்ட் போட்டுடுவோமா?

ராஜா: தாராளமாக. மொதல்லே ஒரு காப்பி எழுதிட்டு வாங்க... என் வக்கீல் கிட்டே கன்சல்ட் பண்ணிட்டு 'சைன்' பண்றேன்.

(தயாரிப்பாளர் உள்ளே போகிறார்... ராஜா தனக்குள் சிரிக்கிறான். மெல்ல தனக்குள் பேசிக் கொள்கிறான்.)

'அப்பா... பைத்தியக்கார அப்பா! அவருக்குச் சினிமாக் கதை பண்ணத் தெரியவில்லே! அப்பாவைக் கூப்பிட வந்த நான் இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுவிட்டு சஸ்பென்ஸ் த்ரில்லோட கதை பண்ணியதற்கு எனக்குப் பரிசு ஐயாயிரம் ரூபாய். பாவம் அப்பா! அப்பா ஒரு சாதாரண எழுத்தாளர்தான்! நான்தான் திரைக் கதை வசன கர்த்தா!'

[ராஜாவின் சிரிப்பு தொடருகிறது... நாடகம் முடிகிறது.]



எத்தை சொல்லி புரியவைப்பேன்..

"ஆத்தாடி செவலக் கன்னு
அன்னம் போல நடப்பவளே
காத்தாட போவ லாமா
காத்திருக் கேன்வாரீ யாடி..."
"பாத்தாக் காதெரி யலையா
போர டிக்க போவனுயா
காத்தாலப் போனுத் தானே
கஞ்சோறும் கெடைக் குமய்யா...."
"அத்தெ பெத்த ரத்தினமே
அலையா தேகஞ் சிக்கு
சித்தெ நேரம் வந்தாக்கா
சினமயா முழுகிப் போவும்..."
"எத்தெச் சொல்லி புரியவைப்பேன்
என்னரு மைமச் சானே
சித்தெ நேரம் பொறுத்துக்கோ
சீக்கிர மாவந் துடறேன்..."

—நாகை மகேந்திரன்



மனைவி அனுமதி அளித்தால் ஒரு ஹிந்து மறுமணம் செய்து கொள்ளலாமா?

கல்லூரியில் 'குவிஸ்'


[சென்னை கோடம்பாக்கம் மீனாட்சி பெண்கள் கல்லூரி. பல்கலைக் கழகத் தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருக்கும் சமயம். ஆனாலும் மாணவிகளிடையே இந்நிகழ்ச்சிக்கு உற்சாகமான வரவேற்பு. முதல்வர் கே. எஸ். லக்ஷ்மி தலைமைப் பொறுப்பேற்க, பொருளாதார உதவிப் பேராசிரியை திருமதி சுனிதா மாதவன் 'க்விஸ் மாஸ்டராக'ப் போட்டியை நடத்திக் கொடுக்க ஆறு மாணவியர்களைப் போட்டியாளர்களாகக் கொண்டு நிகழ்ச்சி தொடங்கியது.]

போட்டியில் பங்கேற்ற மாணவியர்:

1. குமாரி மனிந்தர் கௌர்
2. குமாரி கல்பனா அனந்தராம்
3. குமாரி கே. உஷா
4. குமாரி எஸ். பார்வதி
5. குமாரி ஆர். மைதிலி
6. குமாரி ரெபெக்கா ஜார்ஜ்

கேள்விகள்:

1. Dry Law என்றால் என்ன?
(உஷா சரியாகப் பதிலளித்தார்.)
2. அரவிந்த ஆசிரமம் எங்குள்ளது?
(மைதிலி சரியாக விடையளித்தார்.)
3. 'Nubile Women' என்று எவர் அழைக்கப்படுவர்?
(பார்வையாளர்களில் சுசீலா சரியாக விடையளித்தார்.)
4. 'R. A. W.' என்பதன் விரிவு என்ன?
(எவரும் விடையளிக்கவில்லை.)
5. ஆகஸ்ட் 15 நமது நாட்டின் சுதந்திர தினம். அதே நாளில் தனது தேசிய விடுதலை தினத்தைக் கொண்டாடும் இன்னொரு நாடு எது?
(ரெபெக்கா சரியான விடையைக் கூறினார்.)
6. Dr Zhivago, நாவலின் ஆசிரியர் யார்?
(ரெபெக்கா விடையளித்தார்.)
7. BARC எங்குள்ளது?
(மைதிலி விடையளித்தார்.)
8. Detenu என்றால் என்ன?
(ரெபெக்கா சரியாக விடையளித்தார்.)
9. சிலி நாட்டின் தலைநகரம் எது?
(ரெபெக்கா சரியான விடையளித்தார்.)
10. பாகிஸ்தானிய கரென்சியின் பெயர் என்ன?
(கல்பனா சரியான விடையைக் கூறினார்.)
11. சக ஆண்டுக் கணக்குப்படி (Saka Era) முதல் மாதம் எது, கடைசி மாதம் எது?
(பாதிக் கேள்விக்கு மைதிலி விடையளித்தார்.)
12. தமிழில் வெளியான முதல் - முழுநீள கலர்ப் படம் எது?
(பார்வையாளர்களில் அஞ்சலி சரியான விடையைக் கூறினார்.)
13. மாணவர்களுக்காக மாணவர்களால் நடத்தப்படும் ஒரு பத்திரிகையின் முதல் இதழ் சமீபத்தில் சென்னையிலிருந்து வெளியாகியுள்ளது. அப்பத்திரிகையின் பெயர் என்ன?
(சரியான விடையைக் கூறியவர் மைதிலி.
14. To be or not to be என்ற வரிகள் எந்த நூலில் வருகின்றன?
(ரெபெக்கா சரியான விடை கூறினார்.)
15. ஷேக்ஸ்பியரின் ஒதெல்லோ நாடகத்தின் வில்லன் யார்?
(கல்பனா சரியான விடையைக் கூறினார்.)
16. ஆனைடப் பிள்ளை என்ற பெயர் யாரைக் குறிக்கும்?
(பார்வையாளர்களில் எஸ். அருந்ததி சரியாக விடையளித்தார்.)
17. அஜீந்தர் கௌர் எத்துறையில் புகழ் பெற்றவர்?
(எவரும் விடையளிக்கவில்லை.)
18. Capstan என்ற வியாபாரப் பெயரில் எப்பொருள் விற்பனை செய்யப்படுகிறது?
(பார்வையாளரில் ஒருவர் விடையளித்தார்.)
19. உத்தர ராம சரித்திரத்தை எழுதியது யார்?
(எவரும் விடையளிக்கவில்லை.)
20. 1971ம் ஆண்டு இந்திய அரசியல் சாசனத்தின் 26வது திருத்தம் செய்யப்பட்டது. எதற்காக என்று கூற இயலுமா? (எவரும் விடையளிக்கவில்லை.)
21. Black Box என்றால் என்ன?





✖ எதிர்பக்கம்: போட்டிகளில் பங்கேற்ற மாணவிகளும், நிர்வாகிகளும்.

இந்தப்பக்கம் :

✖ பார்வையாளரில் ஒரு பகுதி.
✖ கல்லூரி முதல்வர் லக்ஷ்மியிடம் ரெபெக்கா ஜார்ஜ் பரிசு பெறுகிறார்.

(ரெபெக்கா விடையளித்தார்.)

22. பொருளாதாரத்தில் Buyer's Market என்று எந்தச் சூழ்நிலை அழைக்கப்படுகிறது?
(பார்வையாளரில் சாரதா விடையளித்தார்.)

23. 'முதல் மனைவி அனுமதி அளித்தால் ஒருவர் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளலாம்' — இக்கூற்று சரியா?
(பார்வதி சரியான விடையைக் கூறினார்)

24. ரூ. 9000 ஆண்டு வருமானம் பெறும் ஒருவர் சுமார் எவ்வளவு வருமான வரி செலுத்த வேண்டியிருக்கும்?
(மனிந்தர் கௌர் சரியான விடையைக் கூறினார்.)

25. Captain, Commander, Commodore, Rear Admiral ஆகிய நான்கும் இந்தியக் கப்பற்படையில் உள்ள பதவிகள். உயர் பதவியிலிருந்து ஆரம்பித்துவரிசைப் படுத்தவும் .
(உஷா சரியாக விடையளித்தார்.)

26. உலகத்திலேயே அகலமான ஜலசந்தி எது?
(எவரும் விடையளிக்கவில்லை.)

27. பதவியிலிருக்கும்போது உயிர் துறந்த முதல் இந்திய ஜனாதிபதி யார்?
(ரெபெக்கா சரியாக விடையளித்தார்.)

28. Myopia என்றால் என்ன?
(கல்பனா விடையளித்தார்.)

29. பூமிக்கு அப்பால் இதர உலகங்களில் உயிர் இயக்கம் சாத்தியமானதா என்பதை ஆராயும் விஞ்ஞானம் என்னவென்று அழைக்கப்படுகிறது?
(எவரும் விடையளிக்கவில்லை.)

30. நீட்டின போஸ்ட் கார்டின் விலை என்ன?
(40 பைசா, 50 பைசா என்றெல்லாம் விடைகள் வந்தன. சரியான விடையைக் கூறியவர் உஷா.)

(ஒவ்வொரு கேள்விக்கும் சரியான பதிலை மாணவி கூறிவிட்டால் பார்வையாளர்களிடையே அளவிட முடியாத மகிழ்ச்சி கரகோஷம். முடிவில் ரெபெக்கா அதிக மதிப்பெண்கள் பெற்று ரூ. 50 பரிசு



இந்தத் தந்திரக் காட்சியை எப்படி எடுத்திருக்க முடியும்?

1. இந்தப் பக்கத்திலிருந்து ஒருவரைக் கண்ணாடியில் பார்க்கச் சொல்லி விட்டுப் படமெடுப்பது, பிறகு இன்னொருவரை நிறுத்தி, கண்ணாடியில் அவருடைய பிம்பத்தை மட்டும் படமெடுப்பது. பிறகு இரண்டு நெகடிவ்களையும் இணைத்து 'மாஸ்க்' செய்து பிரதி எடுப்பது?

2. இந்தப் பக்கத்திலிருப்பவரை பீரோவுடன் படமெடுத்து விட்டு, அவர் பிம்பத்தில் வேறு சட்டை டிசைன் வரைவது?

3. இருவரையும் ஒரே பக்கத்தில் சற்று இடைவெளி விட்டு நிறுத்தி வைத்து, காமிரா கோணத்தில் இடது பக்கத்திலிருப்பவர், கண்ணாடி பிம்பத்தில் அவருக்குப் பின்னால் நின்று கொண்டிருப்பவர் உருவம் என்று தெரியும்படியான இடத்தில் நின்று படமெடுப்பது.

எந்த முறை சரி?

விடை: பீரோவில் கண்ணாடியே இல்லாமல் எடுக்கும் முறைதான் சரி.

பீரோ உதவி: ஆனந்தி வுட்வொர்க் ஷாப், அம்பத்தூர்.

— பிரபுசங்கர்

பெற்றார். முதல்வர் லக்ஷ்மி அவர்கள் பரிசளிக்கப் போட்டி சிறப்பாக நிறைவுற்றது. 'க்விஸ் மாஸ்டர்' கனிதாமாதவன் மிகச்சிறப்பாகப் போட்டியை நடத்திக் கொடுத்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.)

விடைகள்

(1) மதுவிலக்கை அமுல் செய்யும் அரசின் ஆணை. (2) பாண்டிச்சேரி. (3) வயதிலும் உடல் வளர்ச்சியில் திருமண நிலையில் இருக்கும் பெண்கள். (4) Research and Analyst wing (5) தென் கொரியா. (6) போரிஸ் பாஸ்டர் நாக். (7) பம்பாயில் ட்ராம்பேயில் பாபா அடாமிக் ரிசர்ச் சென்டர் உள்ளது. (8) கைதி (9) ஸாண்டியாகோ (10) ரூபாய். (11) 'சைத்ரா' முதல் மாதம் 'பகுணு' கடைசி மாதம். (12) அலிபாபாவும் நாற்பது திருடர்களும். (13) மாணவ இளம்புயல். (14) ஹாம்லெட். (15) இயாகோ. (16) திருஞான சம்பந்தர். (17) பிரபல பெண் ஹாக்கி வீரர். (18) சிகரெட் (19) பவபூதி. (20) மன்னர் மான்யத்தை ஒழிக்கும் திருத்தம். (21) விமானங்களில் flight data and voice recording செய்யும் கருவி. (22) தேவைக்கு அதிகமாகப் பொருள்கள் மார்க்கெட்டில் விற்பனைக்கு வரும் போது, அப்பொருள்களின் விலையை நிர்ணயிப்பதில் பொருள் வாங்குவோரின் கை ஓங்கியிருக்கும். இந்தச் சூழ்நிலை buyers Market எனப்படுகிறது. (23) இந்து திருமணச் சட்டப்படி முதல் மனைவியை விவாகரத்து செய்யாமல் இன்னொரு மனைவியை மணக்க முடியாது. இரட்டை தார முறை எச்சூழ்நிலையிலும் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும். (24) வருமான வரி கிடையாது. ரூ. 10,000க்கு மேல் ஆண்டு வருமானம் இருந்தால்தான் வருமான வரி உண்டு. (25) Rear Admiral, Commodore, Captain, Commander (26) மொஸாம்பிக் ஜலசந்தி. (27) டாக்டர் ஜாஹிர் ஹுசேன். (28) கிட்டப் பார்வை. இக்கோளாறு உள்ளவர்கள் தூரத்தில் உள்ளவற்றைச் சரியாகப் பார்க்க முடியாது. (29) Exbiology (30) 30 பைசா.

தொகுப்பு: —நாயகன்

புகைப்படம்: ராமன்

கணவனுக்குப் புற்று நோய். அது குழந்தைக்குத் தெரியக் கூடாது என்பதற்காக டில்லிக்கு வேலை மாற்றல் வாங்கிக் கொண்டு போய் அங்கே ஆஸ்பத்திரியில் இறந்து விடுகிறான். தன் மரணத்தைக் குழந்தைகளுக்குத் தெரிவிக்கக் கூடாது என்றும், அதற்காகத் தன் மறைவுக்குப் பின்னும் அவள் சுமங்கலியாகவே, பூவும் பொட்டுமாகவே வாழ வேண்டும் என்றும் வாக்குறுதி வாங்கிக் கொண்டு இறக்கிறான்.

ஸ்ரீகாந்தின் உருக்கமான நடிப்பு படம் பார்ப்பவர்களை உருக வைக்கிறது. குழந்தைகளிடம் அவர் காட்டும் அன்பு நம் நெஞ்சை நெகிழ வைக்கிறது. பிரிவுத் துயரின் கனத்தை அவர் நடிப்பில் நன்கு காண முடிகிறது.

கே. ஆர். விஜயா மகிழ்ச்சி, நெகிழ்ச்சி, சோகம் ஆகிய எல்லா உணர்ச்சிகளையும் தம் இணையற்ற நடிப்பின் மூலம் நம் நெஞ்சில் பொங்க வைத்து விடுகிறார். ஒவ்வொரு காட்சியிலும் அவர் நடிப்பு உயர்ந்து கொண்டே போகிறது.

கோபாலின் செல்வங்களாக வரும் புது முகங்களான ஸ்ரீகீதா, நிஷா, பேபி சோபனா மூவரும் படத்தில் கலையான பகுதிகளுக்கு உறுதுணையாயிருக்கின்றனர். அப்பாவின் செல்லக்குட்டி அம்முவாக வரும் சோபனா அதி அற்புதமாக நடித்திருக்கிறாள்.

''மங்கள நாயகி'' வெற்றிகரமாக ஓடிய ஒரு ஹிந்திப் படத்தின் தமிழாக்கம். பழம் பெரும் டைரக்டர்களான கிருஷ்ணன்-பஞ்சு தங்கள் அனுபவ முத்திரையை ஆங்காங்கு பதித்திருக்கின்றனர்.

இந்தச் சோகக் கதைக்கு இன் சுவையூட்ட ராதா (கே. ஆர். விஜயா)வின் இளம் பருவத்துக் காதல் நினைவுகள் இன்பக் கிளுகிளுப்பை ஊட்டுகின்றன. ராதாவின் காதலில் தோல்வியுற்ற காதலன், சரத் பாபு நன்றாய் நடித்திருக்கிறார்.

மனோரமா வட்டிக்குப் பணம் கொடுக்கும் பெண்மணி. வட்டியும் முதலுமாகச் சிரிக்க வைக்கிறார்.

சி. எஸ். ரவி பாபுவின் வண்ண ஒளிப்பதிவு ரம்மியமாய் இருக்கிறது.

விதவா விவாகம், பெண்ணுக்கு விவாகரத்து உரிமை போன்ற சீர்திருத்தங்கள் வந்த பிறகு கூட இம்மாதிரிப் படங்கள் வந்து கொண்டிருக்கின்றனவே என்றால் உணர்ச்சி மயமான நடிப்புக்குப் பழைய சமாசாரங்கள் தேவைப்படுகின்றனவே!

வேடனைத் தேடிய மான்

'எல்' போர்டு போட்டுக்கொண்ட கார், ரஸ்தாவில் எப்படி வேண்டுமானாலும் போகலாம் என்று பொருளா? 'ஏ' சர்ட்டிபிகேட் பெற்ற படம் என்றால் பச்சையாக உரையாடல்கள், தரக் குறைவான காட்சிகள் எல்லாம் இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக்கொள்ள வேண்டுமா?

மலருக்கு மலர் தாவும் வண்டாக, ஜெய்கணேஷ் வருகிறார். அது அவருக்குப் பழகிப் போன பாத்திரம் ஆதலால், திறமையாகவே நடிக்கிறார். 'இடைவேளை'க்குப் பிறகுதான் கதையில் சூடு பிடிக்கிறது. மர்மக் கொலைக் கதை என்பது அப்புறம் தான் வெளியாகிறது.

லதா, பிரமீளா, தீபா ஆகிய மூவரும் நடிப்பில் கிளுகிளுப்பு ஊட்டுகின்றனர். நடனமும் ஆடியிருக்கின்றனர்.

ரவிச்சந்திரன் தம் பாத்திரத்தை உணர்ந்து நன்றாக நடித்திருக்கிறார்.

வி. கே. ராமசாமி தமாஷாகவும் சீரியஸாகவும் நடித்துக் களிப்பூட்டுகிறார்.

டைரக்டர் அவினாசி மணி சதா 'அடல்ட்ஸ் ஒன்லி' ஞாபகமாகவே படத்தை இயக்கி இருக்கிறார். 'வேடனைத் தேடிய மான்' வேதனையைத் தேடித் தருகிறதே!





வேலி தாண்டிய வெள்ளா

இந்தப் படத்தில், இரண்டு கதாநாயகர்கள், விஜயன், விஜய் பாபு. கதாநாயகிகள் இருவர், ஷோபா, வசுமதி. விட்டுக் கொடுத்தவள், அநுசுயா (ஷோபா) தட்டிப் பறித்தவள், நளினி (வசுமதி).

விட்டுக் கொடுப்பதையும், தட்டிப் பறிப்பதையும் தவிரத் திரைக் கதையில் உருப்படியாக எதுவும் இல்லை. அநுசுயாவாக வரும் ஷோபா கவர்ச்சிக் கன்னி இல்லைதான். ஆனாலும் அவரிடம் பாவ பூர்வமான நடிப்பு இருக்கிறது. இனம் தெரியாத மகிழ்ச்சியையும், துயரத்தையும், ஏமாற்றத்தையும், உதடுகளின் சுழிப்பிலும், முக பாவங்களிலும் அவரால் சமத்காரமாக வெளிப்படுத்த முடிகிறது.



மங்கள நாயகி

நளினி (வசுமதி) பணக்காரியாகவும், சுக போக, சுதந்திர வாழ்வில் திமிர் பிடித்தலைவதையும் நன்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அத்தகைய வாழ்க்கையின் பலனை வியாதியாக வாங்கிக் கொண்ட பிச்சைக்காரியாகக் கடைசியில் வருகிறார். நன்றாக நடிக்கிறார் என்றாலும் அருவருப்பாயிருக்கிறதே! எப்படித்தான் நடிகை வசுமதி அம்மாதிரி மேக்கப்புக்கு இசைந்தாரோ!

'ஏ' படம் என்பதற்காக உரையாடல்கள் காட்சிகளில் எல்லாம் அதை அக்கறையாக நியாயப் படுத்தியிருக்கிறார்கள். அதுவும் நளினி நிர்மலை வலிந்து அநுபவிக்கும் காட்சி, அதாவது பெண் ஓர் ஆணைக் கற்பழிப்பது அசிங்கம். அது அவனை அநுசூயாவிடமிருந்து தட்டிப் பறிப்பதற்காக! என்னதான் 'ஏ' படம் என்றாலும் இப்படியா?

நிர்மல் (விஜயன்) படுக்கையறையில் வெறியோடு தழுவும் மனைவியை வெறுத்துத் திரும்பிப் படுப்பதைத் தவிர வேறு ஒன்றும் உருப்படியாய்ச் செய்யவில்லை!

ரகு (விஜய் பாபு) கல்யாணம் செய்து கொண்டு மனைவி மீது சந்தேகம் கொண்டு அறைந்து தள்ளி அவளை விவாகரத்துக்கு இணங்க வற்புறுத்துவதைத் தவிர வேறொன்றும் சிறப்பாகச் செய்யவில்லை. கடைசிக் காட்சி: நளினி ரஸ்தாவில் நேர்ந்த விபத்தில் இறக்கிறாள். அப்பொழுது திடீரென்று அங்கு தோன்றிய ரகு, நிர்மலுடன் தன் மனைவியைச் சேர்த்து வைக்கிறான்; அதாவது விட்டுக் கொடுக்கிறான்!

வேலி தாண்டிய வெள்ளாட்டைத் திரைப்பட ரசிகர்கள், தட்டிப் பறிப்பார்களா? அல்லது விட்டுக் கொடுப்பார்களா?

புதிய தோரணங்கள்

கிராமப்புறத்துக் கதைகளைப் படமாக்கும் பைத்தியக்காரத்தனம் படாதிபதிகளைப் பேயாகப் பிடித்துக் கொண்டு ஆட்டுகிறது. இந்தப் படம் முழுவதும் உடுக்கையடி, வேப்பிலையடி இவைதான்.

கிராமத்துச் சம்பிரதாயம் காரணமாகக் காதலர்கள் மணந்துகொள்ள முடியவில்லை. கன்னியம்மா தற்கொலை செய்து கொண்டு பேயாகி விடுகிறாள்.

கன்னியம்மாவாக மாதவி வருகிறார். பேயான பிறகுதான் அவருக்குச் 'சான்ஸ்'! ஒளிப்பதிவுக் கலைஞர் எம். கர்ணன் ஒளிப்பதிவில் வண்ண ஜாலமே படைத்து அளித்திருக்கிறார். படத்தின் டைரக்டரும் அவர்தான்.

படத்தில் அருமையாக நடித்திருப்பது ராணி என்னும் வெள்ளைக் குதிரைதான்.

கன்னியம்மாவைக் காதலிக்கும் சரத் பாபு அவளைக் கோட்டை விட்டு விட்டுத் தவிக்கிறார். குதிரையும் கன்னியம்மாளும், வில்லனும் ஓடு ஓடு என்று ஓடுகின்றனர். ஆனால் படம் ஓடுமென்று தோன்றவில்லை.

-காந்தன்





ஒரு காதல



மதுரை ரயில்வே பிளாட்பாரத்தில் மூச்சிரைக்க வேகமாக நடந்து வந்த விமலா சிவகுமாரின் முகம் எங்காவது தட்டுப்படுகிறதா என்ற ஆவலில் சுற்றும் முற்றும் பார்வையை ஓட விட்டாள். சாமான்களை டிராலியில் வைத்துத் தள்ளிக்கொண்டே தடதடவென்று ஒலியெழுப்பியவாறு போய்க்கொண்டிருந்தான் ஒருவன். ''முறுக்கு... பிஸ்கட்... பழம்... காப்பி... சாயா...!'' இனுக இனுசான குரலில் வியாபாரம் செய்வோர் அங்கு மிங்குமாகப் பறந்து கொண்டிருந்தார்கள்.

''என்ன இது... சிவாவைக் காணோம்! ஒருவேளை வராமல் ஏமாற்றி விடுவாரோ!''— ஏதோ இனம் தெரியாத பயத்தில் குறுக்கும் நெடுக்குமாகப் பிளாட்பாரத்தை அளந்து கொண்டிருந்தாள் விமலா.

''எங்கேடி விமலா! தனியாச் கிளம்பிட்டே; எந்த ஊருக்கு?'' தெரிந்த ஒரு மாமியின் பிடியிலிருந்து தப்புவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது அவளுக்கு.

அங்கு அவள் காத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு கணமும் யுகமாக நீடித்துக்கொண்டிருந்தது.

''ஹலோ விமல்... ரொம்ப நேரமாய்க் காக்க வச்சுட்டேனு... ஐயாம் ஸாரி!'' காதுக்கருகில் சிவகுமாரின் குரலைக் கேட்ட போதுதான் சுவாதீனத்துக்கு வந்தாள் அவள்.

''ரெண்டு பேருக்கும் ஒரே கம்பார்ட்மெண்டில் ரிசர்வேஷன் கிடைக்கலே..... கொடைக்கானலுக்குப் பிறகு உனக்கு என் பக்கத்து சீட்டிலேயே ரிசர்வ் செய்து தருவதாக டி.-டி. ஆர். சொல்லியிருக்கார்... அதுவரை லேடீஸ் கம்பார்ட்மெண்டில் வந்துடு... தெரிந்தவா கண்ணிலே படாமே கொடை ரோடுக்குப் பிறகு சேர்ந்து உட்கார்ந்தால் நல்லதுதானே!''

எடுத்த எடுப்பிலேயே அவனோடு சேர்ந்து ஒன்றாகப் பிரயாணம் செய்யாதது அவளுக்குச் சிறிது ஏமாற்றமாகத்தான் இருந்தது.

'துணிந்து கிளம்பி வந்தாச்சு... இனிமேல் அவன் சொல்படிதானே கேட்க வேண்டும்!'

சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்கள் போக வேண்டிய வண்டி பிளாட்பாரத்தில் வந்து நின்றது. இடம் பிடிப்பதற்காக ஜனக்கும்பல் அங்குமிங்கும் அலை பாய்ந்தது. லேடீஸ் கம்பார்ட் மெண்டில் இடம் தேடிக் கண்டு பிடித்து அவளை ஏற்றிவிட்டுத் தானும் போய் வேறு ஒரு கம்பார்ட்மெண்டில் ஏறிக் கொண்டான் அவன்.

இதுவரை அவன் துணை இருக்கிறது என்ற தெம்பில் கிளம்பி வந்தவள் தனியாக அந்த இடத்தில் உட்காருகையில் இனம் புரியாத பயம் மனத்தை அழுத்தியது.

'அப்பா... அம்மா... கூடப் பிறந்தவா எல்லாரும் திருப்பரங்குன்றத்தில் சொந்தக்கார வீட்டுக் கல்யாணம்னு கிளம்பிப் போனது நல்லதாப் போய்விட்டது. ராத்திரி ஒருத்தரும் தேடிண்டு வர முடியாது... கல்யாணம் முடிந்து அவா வந்து தன் கடுதாசியைப் பார்க்கறச்சே... நான் சிவகுமாரோடு சென்னைக்குப் போய்ச் சேர்ந்திருப்பேன்.... அப்பா கத்தப் போறார். வேறு என்ன செய்ய முடியும்!'

தற்காப்புக்காகத் தான் எடுத்து வந்த பர்ஸ் ஜாக்கெட்டுக்குள் பத்திரமாக இருக்கிறதா என்று நாலுக்காக ஒரு தரம் தொட்டுப் பார்த்துவிட்டு, சின்ன சூட் கேஸைக் காலுக்கடியில் தள்ளி வைத்துவிட்டு, அந்த கம்பார்ட்மெண்டில் தெரிந்த முகம் ஏதும் இருக்கிறதா என்று பார்வையைப் படர விட்டாள் அவள்.

அவளுக்கு நேர் எதிரில் சோடா புட்டி மூக்குக் கண்ணாடி, கழுகுப் பார்வை! அவ

னுடைய ஆசிரியை அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

பள்ளிக்கூட நாட்களிலேயே கண்டிப்புக்குப் பேர் போனவள் அந்த ஆசிரியை. அவளுடைய தீர்க்கமான பார்வையிலிருந்து எந்த மாணவியுமே தப்ப முடியாது. இவளிடம் தண்டனை பெறாத மாணவிகளே கிடையாது எனலாம். வகுப்பில் பாடம் எழுதாத காரணத்துக்காகவோ, அடுத்த பெண்ணிடம் கிசுகிசுக்கும்போதோ வகுப்புக்கு வெளியே நிறுத்தப்பட்ட நாட்கள் இன்னமும் அவள் நினைவில் அப்படியே நிலைத்திருக்கின்றன.

சிவாவின் இனிய சிரித்த முகம் கண்முன் வந்து நின்றது. சென்னைக்குச் சென்றதும் சிவாவின் நண்பன் வீட்டில் போய் அவர்கள் தங்குவார்கள். நாளை மறுநாள் திருநீர் மலையில் கல்யாணம்! அப்புறம்... சென்னையில் ஒவ்வொரு இடமாகச் சுற்றிப் பார்க்க வேண்டும்.

இடரென்று கய நினைவு பெற்றுத் திரும்பிய போது, இவளையே உற்றுப் பார்த்துக் கொண்டு அந்த ஆசிரியை உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் சங்கடத்துடன் நெளிந்தாள் விமலா.

''என்ன விமலா! எங்கே கிளம்பிட்டே... கூட யாரும் துணைக்கு வரலியா?''

'சனியன்... பள்ளிக்கூடம் படிச்சு முடிச்சுவிட்டு வந்தப்புறமும் இதன் கழுத்தறுப்பு விடாது போலிருக்கு!' மனதுக்குள் ஆசிரியையைக் கறுவிக் கொண்டாள்.

''எங்க சித்தி வீட்டிலே விசேஷம்... அம்மா, அப்பாவாலே போக முடியல்லே... அதனாலே என்னைப் போயிட்டு வரச் சொல்லி அனுப்பியிருக்காங்க!''

சமயத்திலே பொய்தான் எப்படி வேகமாக ஓடி வருகிறது!

''ஓஹோ... அப்படியா? எந்த இடத்திலே மெட்ராஸிலே குடியிருக்காங்க... ஸ்டேஷனுக்கு யாராவது கூட்டிப் போக வருவாங்களா?''


''மாம்பலம்.... யாராவது வருவாங்க! இல்லையானா நானே விசாரிச்சுண்டு போயிடுவேன்!''

''அப்போ... உனக்கு மெட்ராஸிலே எல்லா இடமும் நன்னாத் தெரியும்னு சொல்லு!''

'கழுகுப் பார்வை... சனியன்... எப்படியாவது இது வாயிலே விழாமே தப்பிச்சுப் போகணும். அப்பாவுக்கு இதை நன்னாவே தெரியும். வாயைப் பிடுங்கி வத்தி வைக்காம இருக்கணும்!' விமலாவின் மனம் பொருமியது.

''ஒரு நிமிடம்!.... டாய்லெட் வரைக்கும் போயிட்டு வந்துடறேன்...!'' 'கொஞ்ச நாழி டாய்லெட்டுக்குப் போய்விட்டு இதுங் கண்ணுல படாமெ வெளியே வந்து நின்னு வேடிக்கை பார்த்துட்டு நாழியைக் கழிச்சாகணும்!'

பயணம்



விஜயா வரதன்

''என்ன விமலா!... போனவள் ரொம்ப நாழியாத் திரும்பி வரலே காணமேன்னு பயந்துட்டேன். நீ இப்போ என்னுடை மாணவியா இல்லாட்டாலும் என்னுடை பழைய மாணவியோட நலத்திலே எனக்கு அக்கறை இருக்கு!'' என்றாள் ஆசிரியை. கொடைரோடில் சிவா வரவில்லை. இனி திண்டுக்கல் தான்.

''நிச்சயமா உங்க அன்பும் கண்டிப்பும் எங்களுக்கு மறந்து போகுமா மேடம்!'' கொஞ்சம் ஐஸ் வைத்துப் பேசுகிறாள் விமலா.

''இப்போ... நீ ஒங்க சித்தி வீட்டுக் கல்யாணத்துக்குப் போகப்போறதில்லே என்கிறேன். ஸ்டேஷனில் உன்னை வழியனுப்ப உன்னைப் பெத்தவா ஒருத்தரும் வரலியே!''

''அப்பா அம்மாவால் வந்து ஏற்றி விட முடியவில்லை.... என் தோழிதான் கூட வந்து ஏற்றி விட்டாள்!''

''என்னை ஏமாற்ற முடியாது விமலா... உன் பாய் ப்ரெண்டு கூட சென்னைக்குப் போகப் போறே...அவன்தான் உன் கூட வந்து ஏற்றிவிட்டு வேறு பெட்டியில் வருகிறான் என்ற விஷயம் எனக்குத் தெரியும்!''

'கழுகுப் பார்வை!... சரியாய்த் தன்னைக் கவனித்து விட்டதே....'

''என் பழைய மாணவி வழி தவறிப் போகக் கூடாது. அப்பா அம்மா கிட்டே உனக்கு இந்தப் பையனைப் பிடிச்சிருக்குன்னு சொன்னியா! அவங்க உன் மனசுக்கு மாறுதலா மறுப்பு எதுவும் சொன்னாங்களா?''

''அப்பா அம்மா கிட்டச் சொல்ல நேரம் கிடைக்கல்லே... அவங்களுக்கு இவரை நிச்சயமாப் பிடிக்காது. நான் அவரை முழு மனசோடு விரும்பறேன். அவர் நண்பர் வீட்டிலே போய் இறங்கிண்டு திருநீர்மலையிலே கல்யாணம் வச்சுக்கலாம்னு தீர்மானத்தோட கிளம்பி வந்திருக்கோம்!''

''ஓஹோ...'..ஹோ அப்படியா விஷயம். அவருக்கும் தாயார், தகப்பனார் ஒருத்தரும் கிடையாது போலிருக்கு... நீங்க ரெண்டு பேருமே முடிவு செஞ்சு வாழ்க்கையை அமைச்சுக்கலாம்னு தீர்மானிச்சுண்டேள். இல்லையா?''

''நேரான வழியிலேதானே போகப் போறோம்... இதிலென்ன தப்புங்க மேடம்!''

''நீ இப்போ எடுத்த முடிவை மாத்திண்டு உடனே திரும்பி ஊருக்குப் போயிடு!''

''ஏங்க டீச்சர், நான் திரும்பிப் போகணும்...? சிவகுமார் ரொம்ப நல்லவர்...!''

''உன்னை விட அந்தப் பையனை எனக்கு நன்னாவே தெரியும்! அவன் எப்படிப்பட்ட அயோக்கியன்கிறது புரிய நாளாகும்!''

''ஆனால்.... நான் எப்படிங்க திரும்பிப் போய் அப்பா... அம்மா முகத்திலே விழிக்கிறது!'' ஈன ஸ்வரத்தில் கேட்டாள் விமலா.

''நான் என் கைப்பட ஒரு கடுதாசு எழுதித் தரேன்! இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடல்லே. திண்டுக்கல்லில் திரும்பிப் போறதுக்கு ரயில் இருக்கும்... நானே பார்த்து ஏற்றி விடறேன். உன் நன்மைக்காக உன் வீட்டுக்குப் போறதுதான் நல்லது. நீச்சல் தெரியாதவனை நம்பித் தண்ணிலே இறங்க நான் அனுமதிக்க மாட்டேன்!''

அவள் காதல் நிறைவேறப் போவதில்லை என்று சொல்வதைப் போல் திண்டுக்கல் ஸ்டேஷன் வந்து நிற்கிறது!

வேகமாக அவள் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு பிளாட்பாரத்தில் இறங்கிச் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே ஏதோ ஒரு பாஸஞ்சர் வண்டி மதுரைக்குக் கிளம்பத் தயாராக நின்று கொண்டிருப்பதைக் கவனித்து விடுகிறாள் அந்த ஆசிரியை.

கைப்பிடியாக அவளையும் கூட அழைத்துக் கொண்டு போய் டிக்கட்டை வாங்கிக் கொண்டு அவள் கையில் கொடுத்து வண்டியில் ஏற்றிவிடுகிறாள் அவள்.

''டீச்சர்.... டீச்சர்....'' — என்று ஏதோ சொல்ல முற்படுகிறாள் விமலா.

''மூச்... எனக்கு நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம். ஊரைப் பார்க்கப் போய்ச் சேர். இந்தக் கடிதத்தை அப்பா கிட்டக் கொடு.'' நடுங்கும் கரங்களுடன் அதை வாங்கிக் கொள்கிறாள் விமலா.

அவசர அவசரமாகத் தன் வண்டிக்குத் திரும்பிச் செல்லும் ஆசிரியையைப் பார்த்துக் கொண்டு திக்பிரமையுடன் அமர்ந்திருக்கிறாள் அவள்.

ஏதோ டிபன் பொட்டலத்தை வாங்கிக் கொண்டு வந்து தன் பெட்டியருகில் நின்று கொண்டிருக்கும் சிவகுமாரைத் தீர்க்கமாகப் பார்க்கிறாள் ஆசிரியை.

தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் அவளது பார்வையைத் தவிர்த்து உட்கார்ந்திருக்கும் ஒவ்வொரு வரிசையாக விமலாவைத் தேடி ஏமாற்றத்தோடு திரும்பிச் செல்கிறான் அவன்.

எதிர் வண்டியில் கண்ணீரோடு தான் வந்த வழியே திரும்பிக் கொண்டிருக்கும் விமலாவைப் பார்த்ததும் ஏதோ ஒரு திருப்தியாக இருக்கிறது அந்த ஆசிரியைக்கு.

'எல்லா மாணவிகளிடமுமே கண்டிப்பாக இருந்த தான், பெற்ற பிள்ளையிடம் கண்டிப்புக் காட்டி வளர்க்கத் தெரியவில்லையே!'

வீட்டுக்கே வராமல் ரௌடித்தனமாக ஊர் சுற்றிக் கொண்டிருந்த தன் பிள்ளை இப்படிப் பெண்களை ஏமாற்றிக் கொண்டு திரிகிறான் என்று கேள்விப்பட்டபோதெல்லாம் குன்றிப் போயிருக்கிறாள் அவள். கடைசியில் இந்த அப்பாவிப் பெண் விமலாவையும் ஏமாற்றி அழைத்து வந்துவிட்டானே! — அந்தப் பெண்ணைக் காப்பாற்றி விட்டோம் என்று நினைக்கும்போது ஆசுவாசமாக இருக்கிறது அவளுக்கு.

உண்மையை அறியாமல் அநியாயமாகத் தன் கனவுக் கோட்டையைத் தகர்த்தெறிந்து விட்ட அந்த ஆசிரியையைச் சபித்துக் கொண்டே மதுரை நோக்கிச் செல்லும் பாசஞ்சரில் உட்கார்ந்திருக்கிறாள் விமலா.

தனக்கு மிகப் பெரிய நிலப்பரப்பு சொந்தம் என்பதை ஒருவர் இப்படிப் பறை சாற்றிக் கொண்டார்: ''அதிகாலை சூரியோதயத்தின் போது என் காரில் என் எஸ்டேட்டுக்குள் நுழைந்தேனானால், சூரிய அஸ்தமனமான பிறகும் கூட எஸ்டேட்டை விட்டு வெளியே வர முடியாது.''

கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் சொன்னார்: ''என்கிட்ட கூட அதே மாதிரி ஒரு ஓட்டைக் கார் இருந்தது.''

—பூத் மன்றில்

—எம். எஸ்.



மொத்தப் பரிசுத் தொகையை ரூ. 2000லிருந்து இந்த ஆண்டு ரூ. 2500 ஆக உயர்த்தியுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இதனை ஐந்தாகப் பிரித்து ஐந்து விதமான சிறு கதைகளுக்கு ஐந்து பரிசுகளை வழங்குகிறோம். ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த சிறுகதைக்கு ரூ. 500 பரிசு:

- சமூகச் சிறுகதை
- ஹாஸ்யச் சிறுகதை
- சரித்திரச் சிறுகதை
- விஞ்ஞானச் சிறுகதை
- மர்மச் சிறுகதை

என்று ஐந்து தலைப்புக்களில் சிறுகதைகளை வரவேற்கிறோம்.

பரிசு பெறும் கதைகள் தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூ. 100 சன்மானம் பெறும். இவற்றில் அறிமுக எழுத்தாளர்களுக்கு போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.

- அறிமுக எழுத்தாளர் எனில் இதுவரை எந்தப் பத்திரிகையிலும் எழுதியது இல்லை என்றும், போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதி மொழி தரவேண்டும்.

- நடுவர்கள் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

- முடிவு தேதி மே 31உ.

- உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பிப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். தபால் தலைகளை மட்டும் இணைப்பதிலோ அல்லது பின்னால் தனியே அனுப்புவதிலோ பயனில்லை.

- கதைகள் கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் இடையாது.


- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

- அமரர் கல்கி அவர்கள் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம்போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகமாகக் கலந்துகொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை–32

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1980





லவ்-ஆல்

ஏ.வி.எம்.கணேஷ்

"கும்பிடுறேன் எசமான்... கூப்பிட்டீங்களாமே!"

"ஆமாண்டா.... இப்பவெல்லாம் கூப்பிட்டு அனுப்பிச்சாத்தானே நீங்களெல்லாம் வர்றீங்க...."

"தப்பா நினைச்சுக்காதீங்க, எசமான்! நம்ம போத்தி கோவில் பக்கத்திலே ஒரு ஏக்கர் பொட்டல் இருக்குதில்லே.... அதுக்கு வேலி கட்டிக் கிணறு தோண்டியிருக்கேன்...அதுனுலே கொஞ்சம் வேலை அதிகமா இருக்கு... உங்களை வந்து பார்க்க முடியலே...."

"ஓ...முதலாளியா மாறப் பாக்கிறியா... அந்தப் பொட்டல் யாருக்குடா சொந்தம்?"

"யாருக்கும் சொந்தமில்லே முதலாளி... சர்க்கார் பொறம்போக்கு."

"நீயே ஒரு புறம்போக்கு. இதுலே கவர்ன்மென்ட் புறம்போக்கு உனக்கு ஒரு கேடா? ஏலே, சொல்றதைக் கேளு...இன்னைக்கு நீ அதுலே கொண்டு காசைக் கொட்டிக் கிணறு வெட்டி வேலி அடைச்சு வைச்ச பிறகு எவனுச்சும் பெட்டிஷன் போட்டு உங்கிட்டேயிருந்து நிலத்தைப் பிடுங்கிட்டா என்னடா செய்வே...."

"அப்படி வரும்னு நினைச்சுத்தான் போன வாரம் நம்ம ஊருக்கு மந்திரி வந்தப்போ 'பெட்டிஷன்' எழுதிக் கொடுத்திருக்கேன் முதலாளி."

"மந்திரி கிட்டே பெட்டிஷன் கொடுத்திட்டா எல்லாம் சரியாயிடுமா.... ஏலே... இனிமே அந்த நிலத்திலே கால் வைக்காதே. உன்னுடைய சின்ன முதலாளியும்—அதாண்டா—என் மகனும் மருமகன்களும் 'வாலிபால் கிரவுண்ட்' வேணுமுன்னு சொல்றாங்க. அதனுலே அந்த நிலத்தை விட்டுடு..."

"வாலி பால்னு என்ன முதலாளி?"

"அது ஒரு விளையாட்டுடா... உனக்குத் தெரியாது."

"ஏதோ ஒரு விளையாட்டு விளையாடுறதுக்கு என் வயித்ரோடு விளையாடணுமா முதலாளி...."

"ஏலே... என்னை எதிர்த்தா பேசறே... போடா வெளியே...."

•

அரசு செயலாளருக்கு,

அண்மையில் அமைச்சர் சுற்றுப்பயணத்தின்போது பெறப்பட்ட மனுக்கள் இத்துடன் தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகின்றன.

—அமைச்சரின் நே. மு. உதவியாளர்

•

"ஏங்க இப்பிடி இடிஞ்சு போயி உட்கார்ந்துட்டு இருக்கீங்க?"

"மருதாயி.... எனக்கு இப்போ என்ன செய்யறதுன்னே தெரியல்லே புள்ளே... நம்ம போத்தி கோவில் பொட்டல்லே காய் கறித் தோட்டம் போடறதுக்காக உன்னுடை தாலிச்சரட்டை வித்து, கிணறு தோண்டி, வேலி அடைச்ச பிறகு, நாட்டாண்மைக்காரர் அந்த நிலத்தைத் தமக்கு வேணுமின்னு சொல்ருரு...."

"அட ஆண்டவனே!... ஊரு நிலத்தையெல்லாம் வளைச்சுப் போட்டவனுக்கு இப்ப நம்ம மேலே கண்ணு விழுந்திருக்கு... இந்த நிலம் அவனுக்கு எதுக்காம்? குழி தோண்டிப் புதைக்கவா அவனை..."

"அவரு புள்ளையும் மருமகப் புள்ளைகளும் விளையாடறதுக்காக வேணுமாம்."

"ஏய்யா, நீதான் மந்திரியைப் பார்த்துப் பெட்டிஷன் குடுத்தியே என்னுச்சு அது?"

"என்னுச்சுன்னு தெரியலியே..."

"நம்ம ஊர்க் கர்ணத்துக்கிட்டே கேக்கிறதுதானே?"

"நல்ல யோசனைதாண்டி!"

பொருள் : நிலங்கள் — அரசு நிலங்கள் — ஒதுக்கீடு செய்வது பற்றி.

பார்வை : திரு முனியனின் நாளிடப்படா மனு.

பார்வையில் கண்ட மனுவின் நகல் ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவரின் குறிப்புரைக்காக அனுப்பப்படுகிறது. (ஒம்)..................

அரசு செயலருக்காக

●

''வாடா, முனியா... என்ன காலங்காத் தாலே வந்து நிக்கிறே?''

''ஐயா... உங்களாலே ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கு...''

''நான் என்னடா... 'ஆப்டர் ஆல்' ஒரு கர்ணம். என்னாலே உனக்கு என்ன உதவி செய்ய முடியும்?''

''நம்ம போத்தி கோவில் புறம்போக்குப் பொட்டலைச் சீர்ப்படுத்திக் காய்கறித் தோட்டம் போட்டேனுங்க. ''அந்தப் பொட்டல் நம்ம நாட்டாண்மைக்கு வேணுமாம்.''

''யார்லே சொன்னு?''


''நாட்டாண்மையேதான்.''

''அப்படியா சேதி? ஏலே முனியா நீ கவலைப்படாமெ போ. நாட்டாண்மையை நான் 'அட்ஜஸ்ட்' பண்ணிடுறேன். ஏலே. ஏலே... ஆத்தா அடுப்பெரிக்க விறவு இல் லேன்னு சொன்னு. இரண்டு வேலிக் கருவையை ஒடிச்சுப் போட்டுட்டுப் போ.''

●

மாவட்ட ஆட்சித் தலைவர் தம் பதிலை உடனடியாக அனுப்பி வைக்கும்படிகேட்டுக் கொள்ளப்படுகிறார். —அரசு செயலருக்காக

●



''வணக்கம் நாட்டாண்மைக்கார ஐயா!''

''ஓ, கர்ணமா? வாங்க என்ன விஷயம்?''

''இந்த முனியன் பயல் திருத்தி வைச்சிருக்கிற நிலம் வேணுமின்னு நீங்க அந்தப் பயலைப் போய்க் கேட்டீங்களாமே? இன்னைலேயிருந்து அந்த நிலத்தைப் பத்தின கவலையை விடுங்க. பட்டா வாங்கித் தர்றது என் பொறுப்பு....''

''ரொம்ப நன்றி கர்ணம்.''

''ஐயா தப்பா நினைச்சுக்கப்படாது. ஊர்லே யிருந்து கொழுந்தியா தன் புள்ளைகளோட வந்திருக்கா... பிரியாணி அரிசி வேணும்.''

''ஏலே யாருடா அங்கே கர்ணம் வீட்டிலே கொண்டு போய்ப் பத்துப் படி ஜீரகச் சம்பா அரிசி கொடுத்துட்டு வா.''

''அப்போ நான் வர்றேன்.''

●

அரசின் கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட புகார் மனு இவ்வலுவலகத்துக்கு வந்து சேரவில்லை. எனவே அதன் நகல் ஒன்றை எனக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக

●

நகல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

அரசு செயலருக்காக

●

''வாங்க கர்ணம் ஐயா... என்ன வீடு தேடி வந்திட்டீங்க....''

''வீடு தேடி வராம பின்னே காடு தேடியா வர முடியும்? ஏலே முனியா உனக்கு எதுக்குடா வம்பு. பேசாம கூலிக்கு ஏதோ வேலை செஞ்சு அரை வயித்துக் கஞ்சியானாலும் அதை நிம்மதியாக் குடிக்கிற வழியைப் பாரு...''

''எசமான்... என் பெண்டாட்டி உடம்பிலே இருந்த ஒரே தங்க நகை அந்தத் தாலிச் சரடுதான். அதையும் வித்து இன்னைக்கு தோணுறதுக்குச் செலவழிச்சுட்டேன்.... ஏதாவது வெள்ளாமை வந்தா இரண்டு வட்டத்திலே அவளுக்குத் தங்கச் சங்கிலி செஞ்சு போடறேன்னு சொல்லியிருக்கேன் எஜமான்...''

''ஏண்டா நகை போட்டிருந்தாத்தான் பெண்டாட்டி....இல்லேன்னு பெண்டாட்டி இல்லையா.... ஏதோ எனக்குத் தோணிச்சு சொன்னேன்... அப்புறம் உன் இஷ்டம்....''

●

மாவட்ட ஆட்சித் தலைவர் தமது பதிலை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

அரசு செயலாளருக்காக

●

''என்னங்க.... சோறு தண்ணி இல்லாம இப்படிக் கிடக்கிறீங்க....''

''என்னடி மருதாயி செய்யறது ஊர்லே நடமாட முடியலே... எங்கே போனாலும் நாட்டாண்மைக்கார ஆளுங்க என்னை ''முதலாளி... முதலாளி.... காய்கறித் தோட்ட முதலாளி''ன்னு கிண்டல் பண்ணுறானுங்க.....''



''என் கணவர் வாரப்பத்திரிகையில் ஆசிரியருக்குக் கடிதங்கள் பகுதிக்கு எழுதி, எழுதி, எழுதி.....''

''எழுதி?''

''இன்று சமையல் எப்படி?' என்று கேட்டால் 'நாளைக்குத் தபாலில் வரும்' என்கிறார்!''

—விஜய ரா. லிங்கன்

''அவனுக இடக்கிறானுக நீ சாப்பிட வாய்யா!''

●

நிலம் ஒதுக்குவது பற்றித் தாசில்தாரின் பதில் கேட்கப்பட்டுள்ளது. அவர் பதில் கிடைத்ததும் இறுதியான பதிலை அனுப்பி வைக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக

●

''கர்ணம் ஐயா... கர்ணம் ஐயா....''

''என்னடா விஷயம்?''

''நான் கஷ்டப்பட்டுத் தோண்டின கிணற்றிலே கல்லையும் மண்ணையும் போட்டு நிரப்பி மூடிட்டாங்க கர்ணம் ஐயா... வேலியைப் பிச்சு எறிஞ்சிட்டாங்க ஐயா....''

''யாருடா அவுங்க?''

''நம்ம நாட்டாண்மைக்கார ஆளுங்கதான் எசமான். அது மட்டுமில்லே...''ஏலே முனியா நாளை விடியறதுக்குள்ளே நீ ஊரை விட்டு ஓடலே உன் தலையை வெட்டிக் கழுகுக்குப் போட்டுடுவோம்ன்னு மிரட்டிட்டுப் போயிட்டாங்க எசமான்....''

''டேய் முனியா.... நாட்டாண்மை ஆளுங்க பொல்லாத குடிகாரப் பசங்க... சொன்னதைச் செஞ்சிடுவாங்க... நீ ஒண்ணு செய். உன்னோட அண்ணன் ஊருக்குப் போயிடேன்.''

''அப்படித்தான் செய்யணும் முதலாளி. வேறு வழி இல்லே...''

●

திரு முனியன் விண்ணப்பம் ஆராயப்பட்டது. அவர் கேட்டிருந்த நிலம் விளைச்சலுக்கு தகுதியற்றதென்று சம்பந்தப்பட்ட கர்ணம் கூறுகிறார். மேலும் அந்த நிலத்தை அவ்வூர் மக்களின் — குறிப்பாக இளைஞர்களின் வேண்டுகோளுக்கு இணங்க — விளையாட்டு மைதானமாக மாற்ற எண்ணப்பட்டு, இம்மாதம் 30ம் தேதி அந்த இடத்தில் விளையாட்டுக்களை முதன் முதலில் மாண்புமிக்க அமைச்சர் துவக்கி வைக்கிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக

●

''போதுமக்களே! உணவினால் மட்டுமே வாழும் உயிர்ப் பிண்டமல்ல மனிதன். அவனுக்கு உணவோடு உழைப்பும் தேவைப்படுகிறது. அத்தகைய உழைப்பின் ஒரு கூறே விளையாட்டு. விளையாட்டு கன்னித் தமிழகத்துக்குப் புதிதன்று. வளை அணி மகளிரே பந்து விளையாட்டில் சிறந்து விளங்கிய பாங்கினைத் தம் சீவக சிந்தாமணியில் திருத்தக்கதேவர் செவ்வனே விளக்குகிறார். இந்த விளையாட்டு அரங்கினைத் திறந்து வைப்பதில் பெருமை கொள்கிறேன். வல் பால் (Ball) வல் ஆல்....



அத்தியாயம் 38

கடல் நாயகியும் மலை நாயகியும்

விஜய துர்க்கத்தின் விருந்து மண்டபத்தில் நடந்த நாடகத்துக்குக் காரணத்தைக் கடல் ராணி கேட்டதும் பேஷ்வா பாஜிராவ் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. தமது நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டு சில விநாடிகள் சிந்தனையில் இறங்கினார். பிறகு பேச முற்பட்டபோது எந்தவிதமான உணர்ச்சிக்கும் இடம் கொடாமல் சர்வ சகஜமாகப் பேசத் தொடங்கினார். ''ரத்னா!'' என்று கடல் ராணியைப் பெயர் கொண்டு அழைத்த பாஜிராவ் ''அரசுகள் மோதும்போது நாம் ரகசியம் என்று நினைக்கும் எதுவும் ரகசியமாக இருப்பதில்லை. இப்பொழுது அரபிக் கடல் பகுதியில் மூன்று ராஜ்யங்கள், மகாராஷ்டிர சாம்ராஜ்யம், மொகலாய சாம்ராஜ்யம், வணிகர்கள் என்று சொல்லிக் கொண்டு பாரதத்தைக் கைப்பற்றப் பார்க்கும் பிரிட்டிஷ் அரசாங்கம் ஆகிய மூன்றும் மோதுகின்றன. அரபிக் கடல் யார் வசம் இருக்கிறதோ அவர்கள் வசம் பாரதமும் இருக்கும் என்று மூன்று அரசுகளும் நம்புகின்றன. ஆகவே மூன்று ராஜ்யங்களும் அரபிக் கடல் துறைமுகங்களில் என்ன நடக்கின்றன என்பதை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருக்கின்றன; கவனிப்பதோடு நிற்கவில்லை. அவற்றைக் கைப்பற்றவும் முயலுகின்றன. மொகலாய சாம்ராஜ்யம் ஜன்ஜீரா ஸித்திகள் மூலம் மேலைக் கடலோரத் துறைமுகங்களைக் கைப்பற்றவும் தனது கடலாதிக்கத்தை நிறைவேற்றவும் முயலுகின்றது. பிரிட்டிஷ் வணிகர்களுக்கு அவ்வப்போது போர்க் கப்பல்கள் வணிகக் கப்பல்களாக இங்கிலாந்திலிருந்து வந்துகொண்டிருக்கின்றன. சில கார்வார் துறைமுகத்திலும் சூரத்திலும் கட்டப்படுகின்றன. மகாராஷ்டிர சாம்ராஜ்யம் கனோஜி ஆங்கரேயை ஸார்கேல் ஆக்கியது. அவரது முக்கிய நோக்கம் கொள்ளை என்பதை அறிந்தும். அவரது கடல் போர்களை நாம் ஆதரித்தோம். ஸித்திகளின் கொள்ளைகளை மொகலாயர்களும் ஆதரித்தனர். ஆனால் பிரிட்டிஷ் கொள்ளைக்காரர்களின் கதை வேறு. தங்கள் சொந்த லாபத்துக்காகக் கொள்ளையடித்தார்கள். அவர்களை நசுக்கப் பிரிட்டிஷ் கவர்னர் மாக்ரேயைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். மாக்ரே முன்பே காஸண்ட்ரா கப்பலின் காப்டனாக இருந்தவர். அவரைக் கொள்ளைக்காரக் காப்டன்களான இங்க்லண்டும் டெய்லரும் முறியடித்து அவர் கப்பலையும் கைப்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் மாக்ரே அவர்களை முறியடிக்கவும் தனது தோல்விக்குப் பழி வாங்கவும் முனைந்து நிற்கிறார். அவரை நமக்குப் பயன்படுத்திக் கொள்ள கனோஜி முடிவு செய்திருக்கிறார்...என்று விவரித்துச் சிறிது பேச்சை நிறுத்தினார்.

''நீங்கள் பிரிட்டிஷ் கடல் பலத்தை அழிக்கப் பார்க்கிறீர்கள். ஆனால் மாக்ரேக்கு உதவ நினைக்கிறீர்கள். இரண்டும் முரண்பாடான விஷயங்கள் அல்லவா?'' என்று வினவினாள் ராணி.

''முரண்பாடு இல்லை. காஸண்ட்ராவைத் தாக்க மாக்ரேக்கு அனுமதி அளிப்போம். காஸண்ட்ரா வெற்றி கொண்டால் மாக்ரேயின் ஐந்து போர்க் கப்பல்கள் அழிந்துவிடும். அப்பொழுது மாக்ரே நமது கைவசப்படுவான். மாக்ரே வெற்றி கொண்டால் காஸண்ட்ரா நம் கைவசமாகிவிடும். எப்படியானாலும் பிரிட்டிஷ் கடற் படையின் முதுகெலும்பு முறிக்கப்படும். அதை அனந்தும் துலாஜியும் கவனித்துக் கொள்வார்கள்'' என்று பேஷ்வா பதில் கூறினார்.

கடல் ராணியின் விழிகளில் வியப்பு விரிந்தது. ''துலாஜி சிந்து துர்க்கத்திலிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினாள் கடல் ராணி.

''அனந்த் இருப்பது எப்படித் தெரியுமோ அப்படித்தான். அரபிக் கடலில் பிரிட்டிஷ் பலத்தை முறியடிக்க இந்த இரண்டு அயோக்கியர்களைத்தான் நான் நம்பியிருக்கிறேன்'' என்று பேஷ்வா மெள்ள நகைத்தார்.

ராணியும் சிந்தனையில் இறங்கினாள். எதிலும் பேஷ்வாவின் கரம் மறைவிலிருக்கிறது என்பது ஐயமறத் தெரிந்தது அவளுக்கு. ''அப்படியானால் இவர் சிந்து துர்க்கத்துக்கு ரகசியமாக வர வேண்டிய காரணமென்ன?'' என வினவினாள் சந்தேகக் குரலில்.

பேஷ்வா தமது முழங்கையை மேஜை மீது வைத்துக்கொண்டு கைகளின் விரல்களைப் பின்னிக் கொண்டார். ''அதைப் பற்றி அனந்தைத்தான் கேட்க வேண்டும். அவனை நான் சிந்து துர்க்கத்துக்கு அனுப்பவில்லை. கார்வாருக்குத்தான் முதலில் அனுப்பினேன் சந்தா ராஜாவுக்கு உதவ. அங்கு வந்த பிரிட்டிஷ் கடற்படையை முறியடித்தான் அனந்த். ராஜாவின் புரவிப் படைகளுக்குத் தலைமை வகித்து. பிறகு சிந்து துர்க்கம் வந்திருக்கிறான் ஒரு கொள்ளைக்காரனுடன். அவன் பெயர்....'' என்று சிறிது சிந்தித்தார் பேஷ்வா.

அதுவரை மௌனமாக இருந்த அனந்த் ''காப்டன் ஸில்வர்'' என்று கூறினான். அவன் மூலந்தான் காஸண்ட்ரா அரபிக் கடலில் சஞ்சரிப்பது எனக்குத் தெரிய வந்தது. அவனைக்கொண்டுதான் நான் பிரிட்டிஷ் கடற்கொள்ளைக்காரர்களை அழிக்க வந்திருப்பதாக வதந்தியைப்பரவ விட்டேன். அந்த வதந்தி காஸண்ட்ராவுக்கு நான் விரித்த வலை. அதில் இங்கிலண்டும் டெய்லரும் விழுந்தார்கள். சிந்து துர்க்கத்துக்கு நான் போகப் போவதையும் பகிரங்கப் படுத்தினேன். இங்கிலண்டின் நண்பர்கள் இல்லாத துறைமுகம் மேலைக் கடலோரத்தில் கிடையாது. நான் அவர்களை அழிக்கு முன்பு என்னை அவர்கள் அழித்துவிடத் திட்டமிட்டார்கள். நான் கடல் ராணியைச் சந்தித்து அவள் உதவியைப் பெற விரும்பினேன். எதிர்பாராத முறையில் அவளைச் சந்தித்தேன்...'' என்று கூறிச் சிறிது தயங்கினான்.

''கதாநாயகன் கடலரசியைச் சந்தித்தான், காப்பாற்றினான், காதல் கொண்டான், களியாட்டம் நடத்தினான்'' என்று கடகடப் பேசிய சாரு கடல் ராணியை நோக்கினாள்.



கடல் ராணியின் கண்களில் சினத்தின் சாயை படர்ந்தது. ''பிறகு அவளை விட்டு ஓடினான். மலை நாயகியிடம் உறவாட. மலைக் குடிசையில் சரசமாடினான். பிறகு மலை நாயகி கடல் நாயகியாக வேஷம் போட்டாள். அனந்தை காக்க வந்தாள் அந்தக் கள்ளனிடம் ஏமாந்த அபலை'' என்று சீறினாள் ராணி.

''பேசுவதை யோசித்துப் பேசு. என்னிடம் சரசமாட வரவில்லை அனந்த். சரசமாடினாலும் தவறில்லை. நான் கோர்படே வம்சம்'' என்று சாரு எழுந்து நின்றாள் நாற்காலியை விட்டு.

''எந்தப் படே வம்சமாயிருந்தாலும் நீ ஒரு பெண். உன்னைப் பற்றி விஜய துர்க்கத்தில் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்டேன். எனக்கு அந்த மாதிரி அவப் பெயர் கிடையாது. கொள்ளைக்காரி என்று பெயர் உண்டு. ஆனால் உன்னைப் போல்...'' முடிக்கவில்லை வாசகத்தைக் கடல் ராணி. அவளை நோக்கிப் பறந்து வந்தது ஒரு கண்ணாடி டம்ளர்.

கண்ணிமைக்கும் முன்பாகச் சாரு வீசிய அந்தக் கண்ணாடி டம்ளரைத் தனது இடது கையால் பிடித்தாள் ராணி. அடுத்து அவள் சினத்துடன் நகைத்தாள். அனந்தை நோக்கிக் கேட்டாள்: ''மேலைக் கடல் மன்மதனே! உங்கள் ஆசைநாயகியை என்ன செய்யட்டும்?'' என்று. அப்படிக் கூறியபோது அவள் கை தனது இடையில் செருகப்பட்டிருந்த கைத் துப்பாக்கியைத் தடவியது.

சாரு எதுவும் பேசவில்லை. அனந்தின் கச்சையிலிருந்த கைத் துப்பாக்கிகளில் ஒன்றை எடுத்துக்கொண்டாள். ''சுடு, சாமர்த்தியமிருந்தால்'' என்று கூறிக் கைத்துப்பாக்கியைக் கடல் ராணியை நோக்கிக் குறிவைத்தாள் நின்ற நிலையிலேயே.


இந்தப் பொறாமை நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பாஜிராவ் தமது ஆசனத்தை விட்டு எழுந்திருந்தார். ''நீங்கள் பெண்கள் என்று நினைத்தேன். பிசாசுகளென்று தெரியாது. சாரு! அனந்தின் கைத் துப்பாக்கியை அவன் கச்சையில் சொருகி விடு. ரத்னா! உன் கையைக் கச்சையிலிருந்து அகற்று. வாருங்கள் மலைக் குடிசைக்குப் போகலாம்'' என்று கூறிவிட்டு வாசற்படியை நோக்கி நடந்தார். அனந்தும் அவரைப் பின்பற்ற முயன்ற சமயத்தில் அவன் இருபுறத்திலும் இரு மங்கையரும் நின்று கொண்டார்கள். அவன் நடந்தபோது இருவரும் நடந்தார்கள். இரு காவலரால் சிறைப்படுத்தப்பட்ட கைதியைப் போல் அவர்கள் இருவரிடையேயும் சென்றான் அனந்த். அவர்களை வாயிற்படிக்கு அருகில் சந்தித்த கனோஜி அனந்தின் நிலைமையைக் கண்டு இடி இடியென நகைத்தார். ''நல்ல வேளை இந்தச் சதி எனக்கு வரவில்லை'' என்றும் கூறினார் நகைப்பின் ஊடே.

அவரைக் கண்டதும் பாஜி ராவ் சொன்னார்: ''ஒப்பந்த விதிகளை எழுதிவிடுங்கள். நாளைக் காலையில் ராணியும் மாக்ரேயும் கையெழுத்திடுவார்கள்'' என்று.

கனோஜி தலையசைத்தார் ஆமோதிப்பதற்கு அறிகுறியாக. அடுத்தபடி அனந்துக்கு அருகில் வந்து, ''நீ போகும்போது துளாஜிக்கு ஒரு கடிதம் தருகிறேன். அதை எடுத்துக்கொண்டு போ'' என்றும் சொன்னார்.

அனந்தின் மனம் இருந்த நிலையில் எதற்கும் தலையாட்டுவதைப் போல் அவர் கோரிக்கைக்கும் தலையாட்டினான்.

பேஷ்வா



பாஜிராவ் பழைய குறுக்கு வழியிலேயே அவர்களை அழைத்துச் சென்றார். விஜயதுர்க்கத்தை அடுத்த மலைக்காடு ஆங்காங்கு அடர்த்தியா யிருந்தாலும் பேஷ்வா நீண்ட நாள் அதிலேயே நடந்தவர் போல் முன்னால் நடந்தார். பின்னால் வந்த அனந்தும் அவனுக்கு இரு புறத்திலும் துவாரபாலகி களாக வந்த ராணியும் சாருவும் சிறிதும் சிரமமில்லாமலும் சர்வ சகஜமாகவும் மலை மீது ஏறினார்கள். அந்தப் பயணத்தின் போது மூவரும் பேசவில்லை. காட்டு மிருகங்கள், பட்சிகளின் சப்தங்களைத் தவிர வேறு எந்த சப்தமும் இல்லை. இப்படி மௌனமாக நடந்த அந்த நால்வரும் மலை உச்சிக்கு வந்ததும் சாருவே முதலில் குடிசைக்குள் நுழைந்து விளக்கை ஏற்றினாள். பாஜிராவ் குடிசையின் முகப்பில் பழையபடி உட்கார்ந்து கொண்டார். அனந்த் உட்காராமலே நின்றான். அவன் பக்கத்தில் நின்ற கடல் ராணி சற்று எட்டச் சென்று மலைச் சரிவில் ஓரிடத்தில் அமர்ந்து முழந்தாள்களைக் கட்டிக்கொண்டாள்.

''ராணி! உள்ளே போய்ப் படுத்துக் கொள்'' என்றார் பாஜிராவ்.

''வேண்டாம். இவரே போகட்டும்'' என்றாள் ராணி.

அந்தச் சமயத்தில் வெளியே வந்த சாரு அனந்தை நோக்கி ''நீங்களும் அவளும் படுத்துக் கொள்ளலாம். பாய் போட்டிருக்கிறேன். மதுவும் குப்பியில் இருக்கிறது'' என்று கூறி விட்டு ஒருபுறமாக உட்கார்ந்து கொண்டாள். அனந்தும் குடிசை வாசலில் பேஷ்வாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். ''பேஷ்வா! நீங்கள் உள்ளே படுத்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

''உன் கடல்நாயகியும் மலை நாயகியும் எங்கே படுப்பார்கள்?'' என்று வினவினார் பேஷ்வா புன்சிரிப்பு உதடுகளில் விரிய.

பால்ஸாக்கின் ''ஹ்யூமன் காமடி'' நாவலில் ஹொரேஸ் என்ற ஒரு டாக்டர் வருகிறார். அவருடைய திறமையையும் கூர்மையான அறிவையும் பற்றி பக்கம் பக்கமாக வர்ணித்து, அற்புதமாக உயிர்த்துடிப்புடன் சிருஷ்டித்திருந்தார் பால்ஸாக்.

தம்முடைய கதா பாத்திரத்துடன் பால்ஸாக் எவ்வளவு தூரம் ஈடுபட்டிருந்தார் என்பதற்கு ஓர் உதாரணம் அவர் தம் கடைசி நாளில் மரணப் படுக்கையில் கிடக்கும்போது, ''ஹொரேஸைக் கூப்பிடுங்கள்; அவர் ஒருவரால்தான் என்னைக் குணப்படுத்த முடியும்'' என்று கூறிக் கொண்டே யிருந்தாராம்!

—கோபியன்

''எங்கோ படுத்துத் தொலையட்டும்'' என்ற அனந்த் தரையிலேயே படுத்தான்.

பேஷ்வா குடிசைக்குள் போகவில்லை. குடிசையின் ஓலைத் தட்டியில் சாய்ந்து கொண்டே கண்ணை மூடி உறங்கினார். அவர் உறங்கியதால் ஒரே சீராக வந்த மூச்சை இரு மங்கையரும் கவனித்தனர். இரவு ஏறியும் இருவருக்கும் உறக்கம் வரவில்லை. எண்ணங்கள் எங்கெங்கோ ஓடின. கடல் ராணி மெல்லக் கண் விழித்துப் பார்த்தாள். சாரு நன்றாக உறங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்ததும் அனந்தை நெருங்கி அவன் நெற்றியில் கையை வைத்தாள். அப்பொழுது சாரு நகைத்தாள். அனந்த் கண்ணை மூடிக் கொண்டு படுத்திருந்தான். ''பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகம் அஸ்தமித்து விடாது'' என்று சாரு கூறினாள்.

''யார் பூனை?'' என்று சீறிக் கொண்டு அனந்த் எழுந்திருந்தான்.

அவன் எழுந்த வேகத்தில் கடல் ராணி மீது மோதிவிட்டதால் அவள் விழ இருந்தாள் மல்லாந்து. விழாமல் தாங்கிப் பிடித்தான் அனந்த். அதைப் பார்த்த சாரு வேறு பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

(தொடரும்)



இரும்பு மனிதர்கள்

இருமணச் சந்தையின்
வியாபார வேகத்தில்
பெண்ணின் நிறத்துக்குக்கூட
நகைபோடச் சொல்லும்
காலம் வந்து விடுமோ!
பாரதத்தாயே!
ஒவ்வொரு பெண்ணுக்கும்
இம்மண்ணில் உன்னைப்போல்
தனிக்'கோலார் வயலி'ருந்தால்தான்
குடும்பம் அமையுமோ?

இந்த ஆண்டிலும்
பெண்ணின் கர்ப்பச்
சுமையுரிமையை சோதித்துப்பார்க்க
வாங்கும் முன்பணமோ இந்த வரதட்சிணை!


தாம் கேட்கும் 'லட்சுமி'
கரத்தோடு வந்தால்தான்
லட்சுமிகரமான பெண் என்று
பெரியவர்களே இன்று
பேச்சை மாற்றிக் கொண்டனர்.
கன்னிமை - இந்த
சமுதாயக்கண்ணியில்
சிறைபட்டதை எண்ணியே
நரைத்துப் போவதைக்கண்டு

சிரிப்பு வருகிறதா!
எழுதி வையுங்கள்
வல்லபாய்பட்டேல் அல்ல
இன்று வாழும் மனிதர்கள்தான்
இரும்பு மனிதர்கள்!

- கே. வேங்கடேச ரவி

பொறியைத் தட்டியதுமே...





காம்ப்டாலக்ஸ் ஸ்பாட்லைட்
துணிகளின் டிஸைன்களைத் தனித்
தொளிரச் செய்கிறது—பார்ப்பவ-
ரைக் கவர்ந்திழுக்கும் வகையிலே.



உங்கள் வைரங்களிலே
மேலும் அதிக ஜொலிப்பு—
காம்ப்டாலக்ஸ்
ஸ்பாட்லைட் மூலம்.

PE-—4366

PHILIPS


காம்ப்டாலக்ஸ், எடுத்துப் பொருத்திடக் கூடிய, எத்தேவைக்கும் ஏற்ற ஸ்பாட்லைட். ஷேடுகளோ இணைப்புகளோ தேவையில்லை. பொருத்துங்களேன், பொறியைத் தட்டியதும், அதன் விற்கும் திறனை அறியலாமே!

PHILIPS 50

காம்ப்டாலக்ஸ்

எடுத்துப் பொருத்திடலாம், எத்தேவைக்கும் ஏற்ற ஸ்பாட்லைட்

பிலிப்ஸ்



✕ பெருவுடையார் கோபுர கும்பாபிஷேகம்



✕ பிரதம கலச ஊர்வலம்

தஞ்சைத் தரணியில் நெஞ்சை நிறைக்கும் விழா!

'அபர்ணா'

தஞ்சை மாவட்டக்காரர்கள் என்றாலே, அவர்களுக்கு ஒரு 'இது' — கொஞ்சம் தலையை நிமிர்த்திக் கொண்டு நடப்பார்கள்! என்ன பண்ணுவது சார் அவர்கள் எதைச் செய்தாலும் சிறப்பாகவே செய்து விடுகிறார்கள்!

கடந்த 3–4–80 வியாழக்கிழமையன்று தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் ''அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம். அப்படியென்றால், வேறு ஒரு கும்பாபிஷேகமும் இருக்கிறதா என்று கேட்பீர்கள். இருக்கிறது. அதற்குப் பெயர் ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம். கோவிலை நன்றாகச் செப்பனிட்டு, பின், தெய்வப் படிமங்களின் பீடங்களில் மருந்தும் சாத்திச் செய்யப்படும் கும்பாபிஷேகத்தின் பெயர் — ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்!

பெருவுடையார் கோவிலைச் செப்பனிடவில்லையா, என்ன? இருபது லட்சம் ரூபாயில் மராமத்து வேலைகள் செய்யப்பட்டதாகப் பத்திரிகைகளில் அறிக்கை விடப்பட்டதே! அப்படியானால், இப்போது நடந்த கும்பாபிஷேகத்தை ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் என்று சொல்லக் கூடாதா?

கூடாது சார், கூடாது.

அப்படிச் சொன்னால், தொல்லை பொருள் துறையினருக்கு — மன்னிக்கவும், தொல் பொருள் துறையினருக்கு — மூக்குக்கு மேல் கோபம் வந்துவிடும்! அவர்களைக் கேட்காமல், ஒரு பந்தற்கால் கூட, கோவிலுக்குள்ளே நடக் கூடாதாம். கோவிலின் பண்டைய அமைப்புக் கெட்டுப் போகாமல் அவ்வளவு கண்ணும்கருத்துமாகப் பாதுகாக்கிறார்களாம்!

●

இறைவன் திருநாமம் பெருவுடையார். கும்பாபிஷேகத்தில், எல்லாமே பெரியது தான். 1803-ம் ஆண்டில், இரண்டாம் சரபோஜி நிகழ்த்திய கும்பாபிஷேகத்துக்குப் பின்னர் — 176 ஆண்டுகள் கழித்து நடக்கிற விழா. பெரிய யாகசாலையில் அறுபத்தைந்து குண்டங்கள். ''உத்தமோத்தம பட்சம்.'' சுவாமிக்கு மட்டும், முப்பத்து மூன்று குண்டங்கள்; இறைவிக்கு, ஒன்பது. நூற்றிப் பத்தொன்பது சிவாசாரியார்கள். தேவார கோஷ்டியினர்.

கலசங்களில் நிறைப்பதற்குத் தீர்த்தம் அகில பாரதத்திலிருந்தும் வந்தது. 'காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ ஜயேந்திர ஸ்வாமிகள், கங்கை, கோதாவரி, கிருஷ்ணா நதிகளிலிருந்து, தனிப் பிரதிநிதிகள் மூலம், தீர்த்தம் அனுப்பி வைத்தார்கள். திருவாவடுதுறை ஆதீன கர்த்தர், தாம்ரபரணியிலிருந்து தீர்த்தம் தருவித்தார்கள். திருவையாற்றில், காவேரி பூஜை செய்து, காவேரி நீர் கொண்டு வந்தோம்' என்கிறார் திரு கே. ராம்நாராயண். விழா கமைக்குத் தோள் கொடுத்தவர் இவர்.


●

ஷோலாப்பூர் அருகே, காமகோடி பீடம் இரு பெரியவர்களும் முகாமிட்டிருந்த போது, பெரிய கோவிலின் பரம்பரை தர்மகர்த்தாவான, தஞ்சை மூத்த இளவரசரின் பிரத்தியேகப் பிரதிநிதி சந்தித்துக் கும்பாபிஷேகம் பற்றி ஆலோசனை கேட்டார்.

''கும்பாபிஷேக நன்னாளைத் நிர்மாணித்ததே, ஸ்ரீ சுவாமிகள்தான். அதுமட்டுமா? பம்பாயில் முகாமிட்டிருந்த போது எவ்வளவு தடவைகள், டெலிபோனில் விசாரித்துக் கொண்டேயிருந்தார்கள்'' என்று, நெகிழ்ச்சியோடு தெரிவிக்கிறார், சத்ரபதி ஸ்ரீராஜாராம் ராஜா சாஹேப்.

●

கும்பாபிஷேகத்துக்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவாயிற்று என்றால், கோவிலுக்கு நிரந்தரமான சில வசதிகளும் செய்யப்பட்டன. அம்மனுக்குப் பிரபாவளி, தோரண விளக்கு, பெருவுடையார் திருவுருவுக்குப்






✖ முன்னால் : பஞ்சாகச்சத்தில், தஞ்சை மூத்த இளவரசர்!
பின்னால் : அங்கவஸ்திரத்தில் மாவட்ட ஆட்சியர்!


பின்புறச் சுவரில் பித்தளை பிளேட்டு; துவஜ ஸ்தம்பம், விளக்குகளுக்கு மராமத்து என்று பல முன்னேற்றங்கள்.

●

1965-ல் திரு பி. என். வேதநாராயணன் மாவட்ட ஆட்சியராக இருந்த போது அமைக்கப்பட்ட திருப்பணிக்குழு, பல காரணங்களால் இடையில், செயல்பட முடியவில்லை. 1980-ல் திரு கங்கப்பா — அவர் ஒரு தங்கப்பா — மாவட்ட ஆட்சியராக இருக்கிற போது, கும்பாபிஷேகம் நிறைவேறியிருக்கிறது! இந்த இளம் வயது ஆட்சியருக்குத்தான், என்ன தீவிரம் இந்தக் கும்பாபிஷேகத்தில்! எவ்வளவு நுணுக்கமாய், எவ்வளவு விசாலமாய் இம்மாபெரும் நிகழ்ச்சியைத் திட்டமிட்டிருக்கிறார்? ஆனால், இவர் இதைச் செய்வார்; இன்னமும் செய்வார். மகாமகத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டியவராயிற்றே!

●





வலங்கைமான் கிருஷ்ண பிள்ளையைத் தெரியுமா, உங்களுக்கு? அவர்தான், 'யாகசாலை உக்கிராண ஜாம்பவான்! நூற்று அறுபத்து மூன்று கும்பாபிஷேகங்கள் பார்த்திருக்கிறார்! தஞ்சை கும்பாபிஷேகம், 164-வது. 'எப்படி, இந்தப் பெரிய விழா ''

''அற்புதம்! அபாரம்! இன்னும் ஒரு கும்பாபிஷேகம் செய்யலாம் — அவ்வளவு சாமான்கள்!''


இறைபணியாகவே, யாகசாலை உக்கிராணக் காரியங்களைத் திறம்படச் செய்துவரும் இவர், ஒரு வெள்ளை வேட்டித் துறவி.

●

பிற்பகல் மூன்று மணிக்கு,கோவில் சன்னதியில் ஒரே குப்பை. சடசடவென்று, நாகரீகமான உடையணிந்த சிலர் வந்தார்கள் — துடைப்பத்துடன். மளமளவென்று கூட்டினார்கள். வெளியே கொண்டு போய்க் கொட்டினார்கள். வியந்து போய் விசாரித்தேன். விகவஹிந்துபரிஷத் தொண்டர்களாம்!

''வெளிப்புறத்தில், புத்தகக் கடை கூட வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறதே ''

✖ யாகசாலை
✖ மேல் விமானத்தில் ஓர் அழகிய சிற்பம்
✖ சுற்றுப் பிராகாரத்தில்



ஏப்ரல் விழா

ஏப்ரல் மாதத்தில் ஜப்பானியர்கள் 'பிள்ளைகள் திருவிழா' கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்களோ, அத்தனை கொடிகளை வீட்டு வாசலில் பறக்க விடுகிறார்கள். — தேனப்பன்

''ஆமாம்; மகாமகத்தில் அபாரமான சேவை செய்தார்களே, அதே பரிஷத்துக் காரர்கள் தான்!''

அது மட்டுமல்ல. கோவில் துப்புறவை இவர்களிடம் ஒப்படைத்திருக்கிறார், மாவட்ட ஆட்சியர். சமயத் தொண்டுக்கு ஒரு நல்ல அங்கீகாரம்.

முற்றிலும் பொது மக்கள் நன்கொடை மூலமே நடந்தேறிய இம்மாபெரும் வைபவத்துக்கு, மாநில இந்து சமய ஆட்சித் துறையினின் சிறப்பான பணி என்ன தெரியுமா? இடைஞ்சல், தடங்கல், அனுமதி மறுப்புகள்.

ஏ, முட்டுக்கட்டையே — உன் மறு பெயர் இந்து சமய ஆட்சித் துறையா?

இந்து சமயத்தொண்டுக்கு ஒரு நயாபைசா செலவழிக்காத இந்தத் துறைக்குப் பெயர், இந்து சமய ஆட்சித்துறை! ப்ளீஸ், தயவு செய்து பெயரை மாற்றுங்கள்.

சுமார் இருநூற்றைம்பது கிலோ மருந்து — மதிப்பு சுமார் பதினையாயிரம் ரூபாய் — மெழுக்கிட்டிருக்கிறார்கள், கோவிலிலுள்ள அத்தனை தெய்வப் படிமங்களின் கீழ்ப் பீடங்களிலும். இன்னும் நூறு ஆண்டுகளுக்குத் தாங்குமாம். பாதகமில்லை. தெய்வங்கள் எல்லாம் உறுதியாக நிலைநிறுத்தப்பட்டு விட்டார்கள்! இனி, இந்து சமயத்துக்கு நலிவு ஏது?

கும்பாபிஷேகச் சிறப்பு நிகழ்ச்சிகள் எல்லாம் முடிந்து விட்டால், கோவிலில் இருள் சூழ்ந்து விடுமே என்று கவலைப்பட வேண்டாம். இரண்டரை லட்சம் ரூபாயில் மின் விளக்குகள் அமைக்கப்பட விருக்கின்றன. அதுவும், மண்டலாபிஷேகம் முடிவதற்குள். போர்டு அங்கத்தினர் திரு ராமசந்திரரே உறுதி அளித்திருக்கிற போது, பெரியநாயகி உடனுறை பெருவுடையார் கவலைப்படாமல் ஒளிவெள்ளத்தில் நீந்தி மகிழலாம்!

படங்கள்: ரயிலடி எஸ். பி. எஸ். தஞ்சை

காலிழந்தவர்கள், நடக்கச் சக்தியற்றவர்கள் பஸ்ஸில் ஏறி இறங்க மேற்கு ஜெர்மானிய ஹெய்டல் பர்க் நகரில் சிரமப்படுவதில்லை. ஆஸ்பத்திரி ரூட்டில் செல்கிற பஸ்களில் பிறர் உதவியின்றியே, சக்கர நாற்காலிகளில் அமர்ந்தபடியே அவர்கள் ஏறி இறங்கலாம். இந்த விஷேச பஸ்களில், படிகள் சக்கர நாற்காலியை ஏற்றுக் கொண்டதும் டிரைவர் ஒரு பித்தானை அழுத்துகிறார். படி மேலெழும்பி, சக்கர நாற்காலியையும் அதில் அமர்ந்துள்ளவரையும் உயர்த்தி, பஸ்ஸுக்குள் அனுப்பி விடுகிறது. பஸ் ஓடும்போது சக்கர நாற்காலிகள் அங்கு மிங்கும் நகராமல் இருக்க விசேஷ அமைப்புகள் பஸ்ஸில் பொருத்தப்பட்டுள்ளன.




மகோன்னத மகா கும்பாபிஷேகம்!
கோபுரத்துக்கு கலர் அடிக்கலையே?
கலர் டி.வி. வந்த பிறகு கலர் அடிப்பாங்க!
அடேங்கப்பா! என்ன ஒசரத்துக்கு கோபுரம் கட்டி இருக்காங்க!
அதென்ன பெரிய காரியம், விட்டுத் தள்ளுங்க! கோபுர ஒசரத்துக்கு சாரம் கட்டி இருக்காங்களே!
இல்லீங்க, சாமிக்கு சாத்த மருந்து இடிக்கறாங்க!
நந்திக்கு எண்ணெய் தடவுறதை
தள்ளாதீங்க!
மகா மண்டபத்திலிருந்து மகா அபிஷேகக் காட்சி!
தீபாராதனைக்கு
தீபாராதனை இல்லீங்க... டி.வி. லைட் அது!



புஷ்பா தங்கதுரை

கடலுக்குள் ஜூலி

பகல் தன் வழியே வருகிறது. எழுந்து நில். நிமிர்ந்து நில்; நீ நேராகச் செல்வதற்காக.

ஒரு ஸ்பானிஷ் கவிதை

16

அலை வழிந்து போவதற்கும், பால்மர்ஸன் நிமிர்வதற்கும், அதிசயமாக ஒரு சிறு படகு கப்பலிலிருந்து விடுபட்டு அவரை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது.

கைப்பெட்டியையும், சவப்பெட்டியையும் அதனுள் தூக்கிப்போட்டு எம்பி உள்ளே குதித்தார் அவர்.

அப்போது எலிஸா கைப்பிடியை வழுவவிட்டு, தண்ணீரில் மிதந்த நேரம். துடுப்பை இழுத்து, அவளை நோக்கி விரைந்து, ஒரு கையைப் பிடித்து மேலே தூக்கினார்.

சிலநேரத் தத்தளிப்புக்குப் பிறகு, மேலே எலிஸாவை இழுத்து விட்டார்.

அடுத்து அந்த இடத்தைவிட்டு உடனே ஓடவேண்டும்.

ஜூலி மூழ்கினால், அது தண்ணீரில் ஏற்படுத்துகிற உறிஞ்சும் சக்தி, எதையும் உள்ளே இழுத்துவிடும்.

இந்த ஆபத்தைத் தவிர்க்க அவர் உடனே ஓட வேண்டும்.

தம் திறன்களைச் சேகரித்துத் துடுப்பை வேகமாகப் போட்டு அலைகளில் தத்தளித்து அடிஅடியாக வெளியேறினார். எங்கே போகிறோம்? என்ன செய்யப் போகிறோம்? என்பதைப்பற்றி யோசிக்கவில்லை.

வெறியுடன் துடுப்பை வேகத்தில் சுழற்றி, அலைப் போக்கை அறிந்து அதனுடன் கலந்து 15 நிமிடத்தில் ஒரு பர்லாங் போய்விட்டார்.

இனி ஆபத்து அதிகமில்லை என்று திரும்பியபோது, ஜூலி உள்ளே மூழ்க, பெரிய துவாரத்திரள் எழும்பிக் கடல் வெள்ளை வெளேர் என்று ஆவதைக் கண்ணுற்றார்.

அதேநேரம் வானத்தில் மேகம் விலகி சூரியன் தெரிய, அவசரமாகப் பெட்டியைத் திறந்து அஸ்ட்ரோலாபை எடுத்து சூரியனைக் குறிவைத்து, கோணத்தைக் குறித்துக் கொண்டார்.

பின்னர் எதிர்ப்புறம் திரும்ப, தூரத்தில் கரையில் சின்னமாக ஒரு கோபுரத்தின் விமானம் சிறு புள்ளியாகத் தெரிவதைக் கவனித்துக் கொண்டார்.

சிலநொடிகளில் களைத்துப் போய்ப் படகில் அப்படியே சாய்ந்தார் அவர்.

அஸ்ட்ரோலாப் உதவியால் வரைந்திருக்க படம் அது.

ஜூலி மூழ்கிய இடத்தை அட்ச, தீர்க்க ரேகை சுத்தமாக வரைந்திருந்தார்கள்.

பரவசத்தில் மல்லிக்கிற்கு வார்த்தை வரவில்லை. உணர்ச்சி கொள்ளாமல் பிய்ந்த வார்த்தைகளைச் சிதறினான். மீண்டும் ரீடாவின் கையைப் பிடித்து, —ரீடா, உன்னை மறக்க மாட்டேன். இன்னும் ஒரு உதவி. இதை இன்று ராத்திரி என் அறைக்கு எடுத்துப் போக அனுமதி கொடு: நாளை கொண்டு வந்து சேர்க்கிறேன்.

யோசித்தாள். ஹூம் என்று தலை அசைத்தாள்.

சுருக்கென்று அவன் கையை எடுத்துக் கூர்மைப்படுத்திய உதட்டால் கொத்தினாள். —குட் லக்! என்றாள்.

கையில் அவள் கொடுத்த மின்சாரம் இரவு முழுதும் வாட்டியது. மேஜைவிளக்கு முன்னுள்ள ரீடாவின் முகம் ஒரு கோணத்தில் அவனை மிகவும் வசீகரித்திருந்தது.

—உதவி வேண்டுமானால் வரச் சொல்லுங்கள்! என்ன உதவி? என்று முணு முணுத்தான் அவன்.

அரசாங்க சிறு தொழில் கடன் உதவியில் அதிசயமாகப் பெரியவன் ஆனவன் ராம்சந்த். பூர்வீகத்தில் ராமச்சந்திரன். இந்தத் தலையும் மீசையும் வடக்கத்திப் பெயர்க் குறுக்கலும் உலக ரீதிக்காக. பதினெட்டு டிராலர்களும், நாலு பாங்குகளில் ஏழு எண் தொகைகளும் வைத்திருப்பவன். சும்மா இருக்க முடியாது அவனால். புதிது, புதிது, புதிது என்று ஏதாவது செய்து கொண்டிருக்கவேண்டும்.

சொந்த வாழ்க்கை ஒரு பெரிய விபத்து. ரொம்பப் பிரியம் வைத்த மனைவி இறந்து விட்டாள். எட்டு வயதுப் பையனை ஊட்டியில் படிக்க வைத்துவிட்டு, தனியாக வாழ்வைக் கழிக்கிறான்.

மனைவிக்கு இணையாகச் சுகம் கிடைக்காத தாபத்தினாலோ என்னவோ புதுமையிலும் புதிது கண்டு பிடிப்பதிலும் புதியதைத் தேடுவதிலும் ஓர் ஆராய்ச்சி அறிவு விபரீத அளவுக்கு ஓடியிருந்தது.

அவனது சாட்சாத் சன்னிதானத்தில் நின்று கொண்டிருந்தாள் மல்லிக்.

ராம்சந்தின் விலாசத்தை ஒரு எக்ஸ்போர்ட் ஜர்னலில் பார்த்திருந்தான் அவன்.

திருவான்மியூர்ப் பகுதியில் கடலை நோக்கி சின்ன பங்களா! வாசலில் ஒரு லீனி பெயருடன் இத்தாலியக்கார்.

அங்கேதான் மல்லிக் புது மாணவன் போல் நிற்க, -வெல், என் நேரத்தை வீணடிக்காதீங்க! என்று ஆரம்பித்த ராம்சந்த் நான்கே நிமிடங்களில் எல்லாவற்றையும் விவரமாகக் கேட்டு விட்டு—இண்ட்ரஸ்டிங்! என்றான்.

மல்லிக்கின் தானம் போடும் கை, அந்த போட்டோஸ்டட் வரைபடத்தை ரூபாய் மீது பரத்தியது.

ஒரு ப்ரேம் கண்ணாடியை நெற்றியில் அழுத்திக் கனமான வெள்ளி நீல ஜீன்ஸுடன் ராம்சந்த் சற்றே குனிந்தான்.

—உங்க மேலே நம்பிக்கை வைச்சு இதைக் காட்டறேன். வேறே யாருக்கும் செய்திருக்க மாட்டேன், என்றான் மல்லிக்.

முகவாயில் இப்படியும் அப்படியுமாகக் கை வைத்து யோசித்து. —அப்புறம் சந்திக்கலாம்; என்று சொல்லி வழியனுப்பினான் ராம்சந்த்.

சாயந்திரம் வரை மல்லிக்கின் மனம் கொந்தளித்தது. படத்தை வேறு காட்டி விட்டோமே என்று நினைத்தபோது, வாசலில் புதிய ஹாரன் சத்தம் அவனை இழுக்க, லீனி அங்கே நின்று கொண்டிருந்தது.

நேர்த்தியான செக் ஷர்ட்டில் ராம்சந்த் இறங்கி, மேலே வந்து மல்லிக்கை அழைத்துப் போனான்.

-மிஸ்டர் மல்லிக்! பெரிய ஆராய்ச்சி பண்ணி இருக்கீங்க! நம்ப நாட்டிலே இதப்போல மூலிகைகளைத்தான் தேடறேன். சுபிட்சம் குயுக்தி மூலிகைகளாலேதான் உற்பத்தியாகும். கன்வென்ஷனல் மூலிகளில் அல்ல. நாம்ப ரெண்டு பேரும் இதிலே பார்ட்னர்ஸ்! செலவு பூராவையும் நான் ஏத்துக்கறேன். புதையல் கிடைச்சா அம்பது அம்பது பங்கு போட்டுக்கறோம். ஓகே! என்றான்.

10.00 வடக்கு அட்சம். 79.51 கிழக்கு தீர்க்கத்தில் வந்ததும் ரூடாரின் துடிப்புகளை அணைத்து, மல்லிக்கைப் பார்த்துப் புன்சிரிப்புப் பெய்தார் ராம்சந்த்.

காபின் வலது ஓரம் கண்ணாடிச் சட்டத்தின் சன்னல் முன்னே திக்பிரமையுடன் நின்று கொண்டிருந்தாள் சம்பகா.

வெளியே ஓவியம் போல் கடல். இருள் பச்சையில் வெகு தொலைவுகளுக்கு ஓடி, ஆகாயத்தை ஒட்டிக்கொண்டிருந்தது. வானம்



குழலல் மேகங்களுடன் கண்ணாடி நீலத்தில்!

—என் போட்டான் என் மனைவி. சொல்லப்போனா ரூபா என் மனைவி பேரு. அவ பேரையே படகுக்கும் வச்சுட்டேன்.

மீன் பிடிப்புப் படகு ஒன்றை ஒரு நவீன யாட் அந்தஸ்துக்கு அவர் மாற்றியிருந்தார்.

உள்ளே நாகரிகமும் உல்லாசமும் விஞ்ஞானமும் போட்டிபோட்டு நிரம்பியிருந்தன.

ராம்சந்தின் விஸ்தாரமான நவீன மோஸ்தர்படகின் காபினில் அவர்கள் இருந்தார்கள்.

முன் பகுதியில் ஒரு பிளேனின் காக்பிட் போல் நிறைய டயல்கள் பரிமளிக்கும் டாஷ் போர்ட். அவைகளுக்கு அடுத்து பைலட்டின் ஸீட். பின் பகுதியில் லவுஞ்ச் போன்ற விஸ்தாரப் பகுதி. சோபா மேஜை இத்யாதிகளுடன்.

சம்பகாவுக்கு எல்லாம் விநோதங்களாக இருந்தன. கனிநாகலாபுரம் கடற்கரைக்கு வந்தது; கணுக்கால் நனைய நடந்து போய் லாஞ்சில் ஏறியது. லாஞ்ச் சக்கரவட்டம் அடித்து டுபுடுபு என்று ஓடியது. அலை அடிக்கடி தூறல் அடித்தது. எட்டத்தில் அந்தப் பெரிய கப்பல் (அவளுக்கு எல்லாமே கப்பல்கள்தான்) ஒரு வெள்ளைக்காரக் குட்டி போல் சொகுசாக ஆடியது. அதன் அடிவாரத்தில் அந்த லாஞ்ச் ஒரு கன்னுக்குட்டி போல் ஒதுங்கியது. அந்த ஆடும் ஏணியில் ஆடிக்கொண்டே ஏறியது. அந்த ராம்சந்த் விஞ்சின் விசையைத் தட்டி லாஞ்சை அலக்காக மேலே தூக்கியது. பிறகு 'கப்பலி'ல் ஒரு மணி நேரம் பிரயாணம் செய்தது. கடைசியில் இங்கே ஆற அமர நின்று, ஜகம் முழுவதையும் அச்சச்சோவாகப் பார்த்துக் கொண்டிருப்பது.

இதெல்லாம் என்ன அதிசயம்!
—மிஸ் சம்பகா இங்கே வாங்க!
அழைத்தது ராம்சந்த்.

காபினை அடுத்த சின்ன அறை. அங்கே கடச் கட நெஸ்கஃபே தயார் செய்திருந்தார். சமையல் கூடம் அதுதான்.

"ராஜ்ஜஜ்ஜி" வாழ்கிறார்!

"முதலில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். டிசம்பர் மாதமே நான் வந்திருக்க வேண்டும். அப்போது எனக்கு ஆயுள் முடிந்து விட்டது என்று எல்லோரும் நினைத்தார்கள். படுத்த படுக்கையாகக் கிடந்த என்னைப் பார்க்க, பேரக் குழந்தைகளும் அவர்களின் குழந்தைகளும் கூடிவிட்டார்கள். சென்ற நவம்பர் மாதம். நானோ, 'முடியாது. இப்போது சாக முடியாது' என்றேன். ''எனக்கு இந்தியாவில் ஒரு வேலை இருக்கிறது. ராஜாஜி நினைவு அறக் கட்டளையின் முதல் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும். அதற்குப் பிறகு வேண்டுமானால் இறந்து போகிறேன் என்றேன்.''

இப்படிக் கலகலப்பாகத் தொடங்கினார் லார்ட் பென்னர் பிராக்வெல், இரண்டு நாள் சொற்பொழிவை. பாரதத் தலைநகரில். முதல் நாள் குடியரசுத் தலைவரும் இரண்டாம் நாள் துணைத் தலைவரும் தலைமை வகிக்க, ஆளும் கட்சி அமைச்சர்களும், எதிர்க் கட்சியினரும் ஒரே மேடையில் கூடியிருக்க, தில்லி நகரின் அறிவார்ந்த புள்ளிகள் நிரம்பிய கமானி அரங்கில் நடந்தது. 92 வயது உற்சாகி பிராக்வெல் தமது வெண்கலக் குரலில் சுருக்கமான உரையில் ஆழமான கருத்துக்களை நகைச்சுவை மிக்க உதாரணங்களுடன் கூறியபோது ராஜாஜி அறக் கட்டளை உரையாற்ற ஏற்றவர்தான் என்பது தெரிந்தது.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு தமது தள்ளாத வயதில் ராஜாஜி இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் போனாரே. அணு ஆயுதப் பரிசோதனை முயற்சிகளைக் கைவிடும்படி வேண்டிக்கொள்ள — அப்போது இங்கிலாந்தில் இதே முயற்சியில் ஈடுபட்டிருந்தார் பிராக்வெல், நோபல் பரிசு விஞ்ஞானி நோயல்—பேக்கர் போன்றவர்களுடன். அப்போது ராஜாஜியைச் சந்தித்ததை உணர்ச்சியுடன் நினைவு கூர்ந்தார் பிராக்வெல்.

எப்போதும் இந்தியாவின் நண்பரான இவர் ஐம்பது ஆண்டுகளாக பிரிட்டிஷ் பார்லிமெண்ட் உறுப்பினர். தொழிற் கட்சியைச் சேர்ந்தவர். காந்தி குல்லாய் வைத்திருந்த ஒரே காரணத்துக்காக ஆயிரம் ஆயிரம் பேரை இந்தியாவில் கைது செய்தபோது இவர் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு காந்தி குல்லாயைக் கொண்டு வந்து பிரித்துக் காட்டி, ''இந்தத் துணிக்கு நமது அரசாங்கம் ஏன் இப்படிப் பயப்படுகிறது? இதோ நானும் இதை அணிகிறேன். என்னைக் கைது செய்யுங்கள்'' என்றாராம்!

இந்த நிகழ்ச்சியைத் தமது வரவேற்பின் போது நிதி அமைச்சர் வெங்கடராமன் கூறியதும், பிராக்வெல் தமது கோட்டுப் பையிலிருந்து ஒரு காந்தி குல்லாயை எடுத்து, அணிந்து கொண்டார்! உடனே பலத்த கரவொலி. தமது உரையை குல்லாயைக் கழற்றாமலே நிகழ்த்தினார். அப்படியே ரோஜா மாலையையும் கழற்றாமல் நிகழ்ச்சி முடியும்வரை மாலையை ரசித்தபடி மணக்க மணக்க நின்றார்!

காரியம் சாதிக்க முடிந்தவர்களைக் குறிப்பிட 'அவருக்கு நல்ல வாய்ஸ்' என்பார்கள்.

—இந்த அடுப்பு பார்த்தியா! ஜிம்பால் அடுப்பு! போட் ஆடினு அதுவும் தானே ஆடி அட்ஜஸ்ட் ஆகிக்கும், என்றார்.

கோப்பைகளை அவளிடம் கொடுக்க, மூவரும் காபினின் சோபாக்களில் தொய்வாக அமர்ந்தார்கள்.

மல்லிக்குக்கும் கூட அந்தக் காட்சி ஒரு மாயமாக இருந்தது. கடல் நடுவில் தாலாடிக் கொண்டு ஒரு நவீன அறையில் சூடாகக் காப்பி குடிப்பது.

சம்பகாவை அடிக்கடி திரும்பிப் பார்த்தான்.

—இந்த போட்லே நாம்ப மூணு பேருதான் இருக்கோம்.

டம்ளரைச் சூப்பிவிட்டு ராம்சந்த் சொன்னான்.

—ஏன், யார் உதவியேனும் வேண்டாமா? என்று கேட்டான் மல்லிக்.

—ஒருத்தனை வைச்சுக்கிட்டாக்கூட அவனுக்கு விஷயம் தெரிஞ்சிரும். அவசியம் இருந்தால் ஒழிய நான் யாரையும் கூட்டுச் சேர்ப்பது கிடையாது.

இரண்டாம் முறை சூப்பினான். —தன் கையே தனக்குதவி, மல்லிக்! வெள்ளைக்காரன் என்னடான்னு ஒருத்தனுகவே அட்லான்டிக்கைக் கடக்கறான். இமய மலை மேலே ஏறுறான். நாம்பதான் பயந்து பயந்து சாகறோம். தன்னம்பிக்கை இல்லாம அடிச்சுட்டாங்க நம்பளை! ஆரம்பத்திலே நான் ஒரு லிமிடெட் கம்பெனியிலே குமாஸ்தாவாத்தான் இருந்தேன். அமெரிக்கங்க அங்கே வருவாங்க! ஒவ்வொருத்தனையும் பார்த்து ஏங்குவேன். ராட்சதன் மாதிரி, உயரம், பருமன், கண்ணிலே நம்பிக்கை, எதையும் சாதிப்போம்னு உறுதி, பேசினுன்னு வியாபாரம், நம்பிக்கை சாகசம் எல்லாம் சிதறும். பிரமை பிடிச்சுப் போயிடுவேன். அப்போ எழுந்த வைராக்கியம்தான் என்னை மேலே போக வச்சது. இப்போ, இஷ்டப்பட்டா எதையும்

பிராக்வெல்லுக்கு இரண்டு அர்த்தத்திலும் நல்ல வாய்ஸ்தான். அவர் தமது ஒவ்வொரு வாக்கியத்தையும் அனுபவித்து உரையாற்றினார். ஒவ்வொரு சொல்லுக்கும் அழுத்தம் கொடுத்தார். "ராஜ்ஜஜ்ஜீ" என்று இரண்டு நாள் சொற்பொழிவில் பலநூறு முறை கூறியது இன்னும் காதில் ஒலிக்கிறது. ஒரே ஒரு முறை "சக்—கர்—வர்ட்டி-ராஜ்—கோப்—லாச்-சாரி" என்று தட்டுத் தடுமாறி உச்சரித்து, கை தட்டல் வாங்கிக் கொண்டார்!

முதல் நாள் ராஜாஜியின் வாழ்க்கையையும் இரண்டாம் நாள் அவரது கொள்கைகளையும் விவரித்த பிராக்வெல் மொத்தத்தில் ராஜாஜி ஒரு நிறைவு பெற்ற மகான், நற்பண்புகள் நிறைந்த மனிதர், உலக மகாபுருஷர் என்பதை ஆதாரபூர்வமாக விவரித்தார். "அவரது நிறைவு எங்கே, என்து இயலாமை எங்கே!" என்று உண்மையான அடக்கத்தோடும் சொல்லிக் கொண்டார்.

ராஜாஜி தமது மனைவியின் இறுதி நாட்களைப் பற்றி நாற்பது ஆண்டுகளுக்குப் பின்பும் நெகிழ்ச்சியோடு கூறியதை வெளியிட்ட போது பிராக்வெல்லே நெகிழ்ந்து விட்டார். அறிவுக் கடலான ஒரு மேதை அன்பு வெள்ளமாகவும் இருந்ததை விளக்கினார். காந்திஜியிடம் அவர் மரியாதையும் காட்டினார், அவரது பெரு மதிப்புக்கும் உரியவராக நடந்து கொண்டார். அரசியல் வாழ்வில் தார்மீக உணர்வு நிலவ வேண்டும் என்று ராஜாஜி பாடுபட்டதை நினைவு கூர்ந்தார் பிராக்வெல்.

இடையிடையே, கடந்த காலப்பெருமக்களின் உண்மையான உணர்வைக் காட்டுவதற்கே போல இன்றைய கட்சி மாறிகளைப் பற்றிக் குறித்த போது சபை ஏளனமாகச் சிரித்தது. "இப்படிப்பட்ட சில கட்சி மாறிகளை எங்கள் நாட்டிலும் பார்த்ததுண்டு. இப்போது உங்கள் நாட்டிலும் காண்கிறோம். மக்களின் நம்பிக்கைக்கு உரிய ஜனநாயக அரசு நிலைக்க வேண்டுமானால் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள் நாணயமானவர்களாயும் கொள்கைப் பிடிப்பு உள்ளவர்களாயும் இருக்க வேண்டும்" என்றபோது சபையினர் கொடுத்த வரவேற்பு, அப்பப்பா! ராஜாஜி தமது கருத்துக்களால் இன்றும் நம்முடன் வாழ்கிறார் என்பதைக் காட்டிய குறிப்பு அது.

இந்தச் சொற்பொழிவுக்கு பிரதமர் இந்திரா காந்தி வரக்கூடும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவரிடமிருந்து ஒரு வாழ்த்துச் செய்திதான் வந்தது. அதில் ஒரு "ஷொட்டு". 'ராஜாஜி நமது அறிவியலாளரில் ஒரு பெருந்தகைதான், வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்குவதில் அவருக்கு நம்பிக்கை இல்லாதபோதும்' என்று ஒரு வாசகம் அந்த வாழ்த்துரையில் இருந்தது.

பிரதமரின் இந்த நெருடலை எடுத்துக் காட்டினார் திரு சி. சுப்பிரமணியம், தமது நன்றியுரையில். ராஜாஜியைப் பற்றி இவ்வாறு கூறுவது விஷமமான அவதூறாகும் என்றார். உண்மைக்குப் புறம்பானது. அவர் எதிர்த்தது, இன்றைய தேர்தலின் தன்மையை — பண பலம் உள்ளவர்களுக்கே வாய்ப்பாக இருக்கும் தன்மையைத் தானே தவிர, தேர்தல்களையே அல்ல என்று விளக்கினார். ராஜாஜி நூற்றாண்டு விழாக் கமிட்டித் தலைவர்களில் ஒருவரான திரு சி. எஸ்.

—அ. ஆ.



✖ பிராக்வெல்

சாதிப்பேன்னு நம்பிக்கை எனக்கு வந்துடுத்து! எனக்கு ஒருத்தனுக்கு மட்டும் வந்து பிரயோசனமில்லே, நாடு முழுக்க வரல்லியே...

பீப் பீப் பீப் என்று டாஷ் போர்டில ஒரு சின்ன யந்திரம் கத்தியது. ராம்சந்த் எழுந்தான். இரண்டு பட்டன்களை அழுத்த ராடார் ஸ்க்ரீனில் சங்கேதக் கோடுகள் வந்தன. அதை அணைத்து ஒரு சின்ன உருளையைத் திருகி, ஒரு ஐ-பீஸில் கண்களை வைத்துப் பார்த்தான். —ரெண்டு மைல் தூரத்தில் ஒரு கட்டு மரம் போகுது. நம்ப ராடார் நமக்கு எச்சரிக்கை கொடுக்கிறது என்றான்.

—அப்படியே ஜூலி இருக்கும் இடத்தைக் குறிச்க எச்சரிக்கை கொடுத்தா ரொம்ப உதவியா யிருக்கும். என்றான் மல்லிக் வேடிக்கையாக.

ராம்சந்த் காலை அழுத்தமாக வைத்து வந்தான்.

-ஜூலி பக்கம்தான் நாம்ப இருக்கோம், என்றான் அவன்.

மல்லிக் இடுக்கிட்டு எழுந்தான்.

—ஒருவேளை ஜூலிக்கு மேலாகக் கூட நாம்ப இப்போ மிதந்துக்கிட்டு இருப்போம்.

வொயிட், வாரென்ஸ், டார்வின், ஜாபி ஆகியோர் மேலே காத்திருக்க, டைவர்கள் நீருக்குள் அமிழ்ந்தார்கள். 45 நிமிடத்திற்குப்பிறகு சமிக்ஞைகள் செய்து மேலே வந்தார்கள்.

டைனமைட்களைப் பொருத்தி விட்டதாகத் தெரிவித்தார்கள்.

ஜாபி கணக்குகள் போட்டார். டைனமைட்டின் வெடிக்கும் பலன் எதுவரை பரவும் என்று வரைபடத்தில் பார்த்தார். பிறகு நெப்ட்யூனை நகர்த்தி நூறு கஜ தூரம் அப்பால் போகச் சொன்னார்.

அவர் சைகை கொடுக்க விசை அழுத்தப் பட்டது.

எல்லோரும் ஆவல் துளும்பக் கடல் வெளியைப் பார்த்தார்கள். சில விநாடிகளில் நெப்டியூனில் உள்ள எக்கோ ஸவுண்டர் துள்ளிக் குதித்தது. அடுத்து திமு திமு என்று ஊமை நடுக்கம் நீர்ப் பரப்புக்குள் ஓடியது. கண் கொள்ளாக் காட்சியாக நூறு கஜத்துக்குத் தள்ளி ஒரு பெரிய பூ வாணம் போல் தண்ணீர் மேலே வெகு உயரம் எழும்பி, கீழே அருவி போல் விழுந்தது! பிரளயம் ஒழுகியது போல் காட்சி! அதன் பிரதிபலனில் கடல் திடுக்கிட்டு ஆட, நெப்டியூன் பலமாகத் தத்தளித்தது.

எல்லோரும் காட்சியில் அதிசயித்த பிறகு சகஜ நிலை ஏற்படுவதற்காகக் காத்திருந்தார்கள்.

பின்னர் இரு டைவர்களும் நீருள் எச்சரிக்கையுடன் மூழ்கி வெகு நேரம் சென்ற பின்னர் முதல் கண்டுபிடிப்பை மேலே அனுப்பினார்கள்.

அவர்கள் அனுப்பிய பின்னல் வலையை மேலே தளத்தில் பிரித்துக் கொட்டியதும் எல்லோருமே ஆகா என்றார்கள்.

(தொடரும்)

"என்னம்மா சொல்றே ரஞ்சனி? கோபால்ங்கற பையனை நீ கோவில்லே கல்யாணம் செய்துக்கிட்டியா?'' — இரண்டாந்தாரத்திடம் சரண் அடைந்துவிட்ட வயதான தந்தை கேட்டார்.

''ஆமாம்பா! ஒரு சின்னக் கோயில்லே நானும் அவரும் மாலை மாத்திக்கிட்டோம்!'' உணர்ச்சியற்ற குரலில் பதிலளித்தாள் ரஞ்சனி.

''ஏம்மா! பெத்தவங்க நாங்க இருக்கும்போது எங்களை ஒரு வார்த்தை கேட்காமல் அப்பிடிச் செய்யலாமா?'' மூத்த மனைவியின் மகளான ரஞ்சனியைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல் பின்

நான் யாரோ, அவர் யாரோ!



னால் பிறந்த தன் மகள் கலாவுக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்ட சின்னம்மாள் கேட்டாள்.

''நாலு பேர் கேட்டா சிரிக்க மாட்டாங்களா ரஞ்சனி?'' உலகத்தைப் பற்றிக் கவலையே படாமல் தன் கணவனை அவன் தாயிடமிருந்து பிரித்துத் தங்கள் வீட்டோடு வைத்துக் கொண்ட கலாவின் சோகம் நிறைந்த அங்கலாய்ப்பு.

''திடீர்னு நீ வீட்டை விட்டுப் போயிட்டா எங்களாலே அதைத் தாங்கிக்க முடியுமா அக்கா?'' — படிக்காமல் வேலை எதுவும் செய்யாமல் 'கை நீளும்' குற்றத்துக்காக அவ்வப்போது இரண்டு மூன்று நாட்கள் அரசாங்க விருந்தினராக இருந்துவிட்டு வரும் தம்பி வாசுவின் ஆதங்கம்.

இரண்டு பதினாறு வயதுகளைத் தாண்டி விட்ட ரஞ்சனி இப்போது உலகத்தை ஓரளவு புரிந்து கொண்டிருந்தாள்.

பிறந்த உடனேயே அம்மாவை விழுங்கி விட்ட ரஞ்சனி இப்போது யாருக்குமே தேவையில்லாத ஓர் ஆத்மா. அப்பாவின் இதயத்தில் ஒரு மூலையில் லேசாகக் கொஞ்சம் பாசம் இருக்கலாம்; ஆனால் சித்தன்னை, தம்பி, தங்கைகளுக்கு அவள் உதவி போய் விடுமே! அறுநூறு ரூபாய் மாதாந்தர வருமானம் போய்விடுமே! அதை நம்பித்தானே குடும்பமே நடந்து வந்தது.

''அவரும் என்னைப் போல அனாதைதாம்பா!'' என்று கோபாலைப் பற்றி ரஞ்சனி வர்ணித்தபோது எல்லோருக்கும் கோபம் வந்தது. ஆனால் 'பொன் முட்டை' இடும் வாத்தை இழக்கக் கூடாது என்ற விவேகம் அவர்களுக்குப் பொறுமையைத் தந்தது.

ரஞ்சனியும் கோபாலும் அடுத்தடுத்த கட்டிடங்களில் வேலை செய்து வந்தார்கள். அவனும் சுமார் அழகுதான். வயதும் நாற்பது இருக்கும். பஸ்ஸில் அழகிய பெண் நிற்பதைப் பார்த்தால் யாருமே எழுந்து இடம் கொடுப்பார்கள். கோபால் ரஞ்சனிக்கே இடம் கொடுத்தான்.

மூச்சு முட்டும் நெருக்கடிக்கு நடுவில் தனிமையின் வேதனையை அனுபவித்தாள் ரஞ்சனி. உற்றார் உறவினர் எவருமே இல்லாத தனிமை கோபாலை வாட்டியது. இரு தரப்பட்ட தனிமைகள் காதலென்ற அசட்டுப் பட்டம் சூட்டப்படாமல், புதிய ஒரு பிணைப்பை ஏற்படுத்தியது.

சீக்கிரமே ஒரு சின்ன வீடாகப் பார்த்து விட்டுத் திருமணம் செய்து கொள்ளலாம் என்றாள் ரஞ்சனி. ஆனால் ஏனோ தெரியவில்லை! முதலில் திருமணம் செய்துகொண்டு விட்டுப் பிறகு குடித்தனம் போகலாம் என்று யோசனை சொன்னான் கோபால்.

ரகசியத் திருமணத்தின் சுவாரசியம் வேண்டும் என்ற எண்ணமோ பகிரங்கத் திருமணம் செய்து கொண்டால் தங்கள் ஜோடியைப் பார்த்து உலகம் சிரிக்கும் என்ற பயமோ—

காரணம் எதுவானுல் என்ன? தங்கள் திருமண வாழ்க்கைக்குப் பலமான அஸ்திவாரம் அமைக்கும் வகையில் மாலை மாற்றி, தாலி கட்டி, ரிஜிஸ்டிரார் ஆபீஸில் பதிவுத் திருமணமும் செய்து கொண்டார்கள்.

''அதுவரைக்கும் நீ மாலை மாத்திக்கிட்டதோட நிறுத்திக்கிட்டது நல்லதாப்போச்சு! அந்தக் கோபாலோ போபாலோ — அவன் உன்னை வைச்சுக் காப்பாத்துவான்னு எனக்குத் தோணலே!'' அப்பா மெதுவாக ஆரம்பித்தார்.

சின்னம்மாவுக்கு அவல் கிடைத்துவிட்டது. ''யாராவது கேட்டாங்கன்னு, கோபால் யாரோ நான் யாரோ எனக்கும் அவனுக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது அப்படீன்னு சொல்லிடு!'' — பாசம் கலந்த அறிவுரை வழங்கினுள் அவள்.

இது பற்றித் தொடர்ந்து பேசுவதில் பலனில்லை என்று முடிவு செய்த ரஞ்சனி உள்ளே சென்றுவிட்டாள்.




நாட்கள் உருண்டன. ஆயிரம் ரூபாய் தீபாவளி போனஸ்பணத்தைச் சின்னம்மா கையில் வைத்தாள் ரஞ்சனி. சம்பளத்திலேயே பஸ் பாஸுக்கும் காப்பி செலவுக்குமாக நாற்பது ரூபாய்க்கு மேல் எடுத்துக்கொள்ள மாட்டாளே! போனஸ் பணத்தில் ஒரு பைசா தொடவில்லை.

''நீ நல்லா இருக்கணும்மா ரஞ்சனி!'' என்று சின்னம்மாவின் உதடு மட்டும் வாழ்த்தியது. தீர்க்க சுமங்கலியா இரும்மா என்ற வார்த்தைகளே வரவில்லை. தீபாவளிக்கு 'மருமகப் பிள்ளை கோபாலை' வீட்டுக்கு அழைத்து வரச் சொல்வாளோ சின்னம்மா என்று ரஞ்சனிக்கு ஒரு நப்பாசை.

ஆனால் சின்னம்மா தொடர்ந்து ''மறந்துடாதேம்மா! எங்கேயாவது அந்தக் கோபாலைப் பார்த்துப் பல்லைக் இல்லை இளிச்சுடாதே: யாராவது கேட்டா 'அந்தக் கோபாலுக்கும் எனக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. அவன்

மெலட்டூர் விசுவநாதன்



யாரோ நான் யாரோ' அப்படீன்னு அடிச்சுச் சொல் லிடு!'' — சின்னம்மா நினைவு படுத்தினுள்.

தீபாவளி புஸ்வாணம் போல் ஆயிற்று.

ஒரு நாள் இரண்டு நல்ல செய்திகள் கொண்டு வந்திருப்பதாகக் கூறினுன், கோபால். ஒரு மாதத்தில் நல்ல போர்ஷன் ஒன்று கிடைக்கப் போறது. வாடகை நூறு ரூபாய்தான்! ''இன்னொரு நல்ல செய்தி?'' என்று கேட்டாள் ரஞ்சனி. மறு நாள் அவன் பம்பாய்க்குப் போகிறுன். அதுவும் எப்படி? ஆகாய விமானத்தில்! ஆமாம்! சில முக்கியமான தஸ்தாவேஜுகள் மறுநாள் பம்பாய் சேர்ந்து இரவு விமானத்தில் வெளி நாட்டுக்கு அனுப்பப்பட வேண்டும். 'கோபால் நீ பிளேனிலேயே போய் நம்ப ஹெட் ஆபீசில் ஃபைலைக் கொடுத்துவிட்டு ரயிலிலே திரும்பி வந்துடு' என்று சொல்லியிருந்தார் சென்னைக் கிளை மானேஜர்.

மறு நாள் அலுவலகத்துக்குச் சென்றபோது அவளுக்காகத் திடுக்கிடும் செய்தி ஒன்று காத்திருந்தது. வீட்டில் தினசரி எதுவும் வாங்காததால் ஆபீசில்தான் செய்தி தெரிந்தது அவளுக்கு. முதல் நாள் பம்பாய்க்குச் சென்ற விமானம் வழியிலேயே நொறுங்கி, பயணிகள், விமானச் சிப்பந்திகள் அனைவருமே இறந்துவிட்டார்கள்! பரபரப்புடன் பேப்பரை வாங்கிப் புரட்டினுள் ரஞ்சனி. இறந்தவர்கள் பட்டியலில் 'கோபால்— வயது நாற்பது — திரிமூர்த்தி டிரேடிங் கம்பெனி' என்ற வாசகத்தைப் படித்ததும் ஒரு கணம் அவள் தலை சுழன்றது. அடுத்த கணமே தனக்கும் கோபாலுக்கும் ஏற்பட்ட நட்பைப் பற்றியோ, அதைத் தொடர்ந்து தாங்கள் செய்துகொண்ட ரகசியத் திருமணம் பற்றியோ யாருக்கும் எதுவும் தெரியாது என்ற விஷயம் நினைவுக்கு வரவே தன்னைச் சுதாரித்துக்கொண்டாள் ரஞ்சனி.



''ஸ்கூல்ல, டமால்னு கீழே விழுந்திட்டேன்''

''ரொம்ப அழுதியோ?''

''இல்லே, அதுக்குள்ள வீட்டு பெல் அடிச்சிட்டாங்க. அழறதுக்கு நேரம் இல்லே!'' —சாமி

அன்று அலுவலகத்திலும் சரி, மாலை வீடு திரும்பிய பிறகும் சரி, உணர்ச்சியற்ற மரமாக, இயந்திரம் போல் செயல்பட்டாள் அவள்.

மறு நாள் காலை. குளியலறையில் குளித்து கொண்டிருந்தாள் ரஞ்சனி தடதடவென்று யாரோ கதவைத் தட்டும் ஒலி கேட்டது. தொடர்ந்து வந்தது சின்னம்மாவின் குரல். ''ரஞ்சனி! ரஞ்சனி! சீக்கிரம் குளிச்சிட்டு வாம்மா! உன்னைத் தேடிட்டு யாரோ வந்திருக்காங்க!''

குளியலறையிலிருந்து வெளியே வந்த ரஞ்சனியை எல்லோரும் சூழ்ந்து கொண்டார்கள். மெல்லிய குரலில் ஆரம்பித்தாள் சின்னம்மா! ''பாவம் ரஞ்சனி! நீ சொல்லுவியே, அந்தக் கோபால் நேத்து விமான விபத்துலே செத்துப் போயிட்டானும்! அவன் பர்ஸிலே உன் விலாசம் இருந்ததாம். அது தான் உன்னை விசாரிக்க வந்திருக்கார் ஒரு அதிகாரி. இத பாரும்மா ரஞ்சனி! அவர் கிட்டே கன்னு பின்னுன்னு ஏதாவது உளறி வைக்காதே. நீதான் அந்தக் கோபாலுடைய பெண்டாட்டின்னு உண்மையைச் சொல்லிடு—''

தாயை முடிக்க விடாமல் முந்திக் கொண்டாள் மகள் கலா. ''அப்பத்தான் நமக்கு நஷ்ட ஈட்டுத் தொகை ஒரு லட்சமோ ரெண்டு லட்சமோ கிடைக்கும்! கோபால் அனாதைன்னு நீதான் சொல்லி இருக்கியே! இப்ப நீதான் அவன் மனைவின்னு சொல்லிட்டா எல்லாப் பணமும் நமக்குத்தான் வந்து சேரும்!''

கூடத்தில் உட்கார்ந்திருந்த பெரிய மனிதர் ரஞ்சனியைக் கண்டதும் எழுந்து நின்றார். அப்பா, சின்னம்மா, கலா எல்லோரும் பின்னால் நின்றார்கள்.

வந்தவர் பேசினார். ''வணக்கம்மா! இந்த மாதிரிச் சூழ்நிலையிலே உங்களைச் சந்திக்கிறதுக்காக ரொம்ப வருத்தப்படறேன்! நான் கோபால் வேலை செய்யற — ஐ ஆம் ஸாரி — வேலை செய்த ஆபீஸிலே மானேஜர்! ஆபீஸ் வேலையா அவனை பம்பாய்க்கு அனுப்பினேன். பாவம்! வழியிலே ஏற்பட்ட விமான விபத்துலே அவன் செத்துப் போயிட்டான். தகவல் கிடைச்ச உடனே நான் விமான நிலையத்துக்குப் போய் விசாரிச்சேன். கோபால் தன் பையிலே வைச்சிருந்த பர்ஸிலே உங்க விலாசம் எழுதிய பேப்பர் ஒண்ணு இருந்துதாம். எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் கோபால் சொந்த பந்தம் எதுவும் இல்லாத அனாதைன்னு சொன்னாங்க. ஆனா உங்க விலாசம் அவன் பையிலே கிடைச்சிருக்கு! அம்மா! கோபால் உங்களுக்கு எந்த விதத்திலேயாவது உறவா? அப்படி உறவுன்னா என்ன உறவு? — இதையெல்லாம் மனக் கஷ்டத்தைப் பார்க்காமல் கொஞ்சம் விவரமாச் சொன்னீங்கன்னா ஏர் லைன்ஸ் அதிகாரிங்க கிட்டச் சொல்லி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க உதவியா இருக்கும்!''

சிறிது நேரம் மௌனம் நிலவியது.

சின்னம்மா, அப்பா, கலா, வாசு எல்லோரும் திறந்த வாய் மூடாது ரஞ்சனியையே பார்த்தார்கள்.

ரஞ்சனி சொன்னாள்: ''நான் யாரோ, கோபால் யாரோ! அவருக்கும் எனக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது!''

மன்மதன் தந்திரம்



மலையில் பிறந்த நதிமகள்
மயங்கி, தன்னிலை இறங்கியே
அலையும் மாகடல் மேனியை
அணைக்கும் அழகே காதலாம்.


உலவும் அழகொளி முகிலினம்
ஒருபடி கீழே இறங்கியே
தழுவும் மாமலை மேனியை.
தவறிலை, அதுதான் காதலாம்.

பனிங்கென, மழலை மணமென,
பைந்தமிழ் வழிவழி கனியென,
துளிரிலைத் தழுவும் வெண்பனி.
தூய்மையில் வளரும் காதலாம்.

அழகென, முழுமதி ஒளியென
அமுதென, வற்றா ஊற்றென,
தழுவிடும் தென்றல் காற்றென,
தாரகை போலொரு நங்கையின்

காதலில் சிக்கிய(து) என்மனம்.
காவியம் ஆனது, புத்தினம்
மாதவள் ஓதிய மந்திரம் - (அது)
மன்மதன் ஏவிய தந்திரம்!

—பா. கட்டபொம்மன்



புகை பிடித்தல்

நுரையீரலில் புற்று நோய் வர வழி செய்யக் கூடும்

★ இதய நோய்
★ குடல் புண்
★ வாயில் புற்று நோய்
ஆகியவற்றுடன், வேறு பல உடல் உபாதைகளும் ஏற்படலாம்.

இவை மருத்துவ அடிப்படையில் ஊர்ஜிதம் செய்யப்பட்ட உண்மைகள்

புகை பிடிப்பது, பற்பல விதங்களில் ஆரோக்கியத்துக்கு ஆபத்து ஏற்படுத்துகிறது :

நுரையீரல் மற்றும் வேறு உறுப்புக்களில் புற்று நோய் காணுவதன்னியில், வேறு பல கொடிய நோய்களும் ஏற்படக்கூடும்.

நிரந்தரமான மார்ச்சளி, சுவாச சம்பந்தமான வேறு நோய்கள் ; கரோனரி இதய நோய்கள் இதர இரத்த ஓட்டம் சம்பந்தப்பட்ட நோய்கள். புகை பிடிப்பவர்கள், இப்பழக்கம் இல்லாதவர்களைக் காட்டிலும் மிக அதிக எண்ணிக்கையில் இந்நோய்களுக்கு ஆளாகின்றனர்.

புகை பிடித்தல், அகால மரணத்திற்கு-நாற்பது—ஐம்பது வயதில்—காரணமாகக் கூடும்.

மிகச் சிறு வயதிலேயே புகை பிடிக்கத் துவங்குபவர்களின் இறப்பு விகிதம் மிக அதிகமானது.

பெண்கள் புகை பிடித்தல், கருவிலிருக்கும் குழந்தைக்கு ஆபத்து.

புகை பிடித்தலா, ஆரோக்கியமா? தேர்ந்தெடுப்பது உங்கள் பொறுப்பு

வெளியிட்டவர் : தி சென்ட்ரல் ஹெல்த் எஜுகேஷன் ப்யூரோ,
டைரக்டர் ஜெனரல் ஆஃப் ஹெல்த் சர்வீஸஸ், நியூ டில்லி

davp 80/1

ஆகாகான்

ஆகாகான் ஷியா முஸ்லிம்களில் ஒரு பிரிவின் இமாம் (தலைவர்) ஆவார். இவர் தலைமையில் இயங்குகிற முஸ்லிம்களுக்கு இஸ்மாயிலிகள் என்று பெயர். இவர்கள் இந்தியாவில் மட்டுமல்லாது உலகெங்கும் பரவி உள்ளார்கள். முக்கியமாக ஆப்பிரிக்கா கண்டத்தில். இவர்கள் தங்களை ஃபாத்திமத்துகள் என்றும் கூறிக்கொள்வர். ஃபாதிமா என்பது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பு மகள். எகிப்தில் ஃபாத்திமத்துக்களின் ஆட்சி முடிவுற்றபின்னர் ஆகாகான் பரம்பரையினர் ஈரானில் குடியேறினர். இவர்களில் ஆகா ஹாஸன் அலிஷா என்பவர் ஈரான் நாட்டு மன்னர் மகளை மணந்து அந்நாட்டில் ஆளுனர் ஆனார். பின்னர் அரசியல் குழப்பத்தால் இந்தியா வந்து மராத்திய மாநிலத்தில் வாழலானார். இவருக்குப் பிரிட்டிஷ் அரசு அரசர் அந்தஸ்து அளித்துக் கௌரவித்தது. ''ஹிஸ்ஹைனஸ்'' ஆனார். மாதந்தோறும் பத்தாயிரம் ரூபாய் பிரிட்டிஷ் அரசு இவருக்கு உபகாரச் சம்பளமாகக் கொடுத்தது. இவர் பேரன் தான் உலகறிந்த மிகப்புகழ் வாய்ந்த ஆகாகான். இவர் பேரன் தான் இன்றைய ஆகாகான். இவர் பெயர் கரீம்கான்.

இன்றைய ஆகாகானின் முன்னோர்கள் இந்தியாவில் காலரா நோய் ஒழிப்பிலும் அலிகார் இஸ்லாமிய பல்கலைக் கழக அமைப்பிலும் பெரும் பங்கு கொண்டு ஏராளமான பொருளுதவி செய்துள்ளனர்.

இஸ்மாயிலிகள் அன்றைய ஆகாகானுக்கு வைர துலாபாரமே நடத்தினர். அந்த வைரங்களின் அன்றைய மதிப்பு ஏழரைக் கோடி ரூபாயாகும்.

பூனாவில் உள்ள ஆகாகான் மாளிகையில் தான் 1942ல் 'வெள்ளையனே வெளியேறு' என்று குரல் கொடுத்த தலைவர்களான காந்திஜி, நேருஜி, அபுல் கலாம் ஆஸாத் போன்றவர்களை ஆங்கில அரசு சிறை வைத்தது. எவ்விதப் பணமும் பெற்றுக் கொள்ளாமல் தமது அரண்மனையை அன்றைய ஆகாகான் இந்திய அரசாங்கத்துக்கு இனமாக வழங்கினார்.

சமீபத்தில் இந்தியா வந்து பிரதமரால் விமான நிலையத்தில் பிரமாத வரவேற்பு அளிக்கப்பட்ட ஆகாகானின் (கரீம் கான்) பாட்டனார் மறைந்தபோது அவருக்கிருந்த சொத்துக்களின் மதிப்பு ரூ. 216 கோடி!

⌘ ஆகாகான்



FOCUS



⌘ பிரகாஷ் படுகோன்

இன்றைய ஆகாகான் தமது பாட்டனாரைப்போல இந்திய மக்களின் கல்வி, கலை, சமூக நல்வாழ்வு ஆகியவற்றில் ஆர்வத்துடன் ஈடுபடவேண்டும் என முஸ்லிம்கள் எதிர்பார்க்கின்றனர். அதற்குரிய நல்ல அறிகுறிகளும் காணப்படுகின்றன. அதற்கேற்ப பெரிய நன்கொடை ஒன்றைத் தாராளமாக அளித்திருக்கிறார் ஆகாகான்.

தகவல்: கவி காமு ஷெரீப்
பேட்டி: சிக்கி

பிரகாஷ் படுகோன்

சென்ற ஆண்டு பாட்மிண்டனில் உலக சாம்பியன் விருதை இங்கிலாந்தில் பெற்ற பிரகாஷ் படுகோனுக்குக் கிடைத்த பணம் 54,000. முழுதும் இந்தியப் பாட்மிண்டன் கழகத்துக்குச் சேர்ந்து பாட்மிண்டன் ஆட்டக்காரர்களின் திறமையைப் பரிமளிக்க வைக்கப் போய் விட்டது!

இந்த வருஷமும் பிரகாஷ் படுகோன் உலக பாட்மிண்டன் சாம்பியன் ஆகி ஆல் இங்கிலாந்து கோப்பையைப் பெற்றுவிட்டார்!

உலக சாம்பியன் விருதோடு தாயகம் திரும்பிய பிரகாஷ் படுகோனை பம்பாய் விமான நிலையத்தில் வரவேற்கக் காத்திருந்த பலருள் ஒருவர் அவருடைய அருமைக் காதலி மிஸ் உஜ்ஜ்லா கார்கால். விமானத்தை விட்டு இறங்கியதும் தம் அருமைக் காதலிக்கு முத்தப் பரிசை ஈந்து, போட்டோகிராபர்களை மகிழ்வித்தார் பிரகாஷ் படுகோன். உஜ்ஜ்லா கார்கால் சமீபத்தில் ஒரு கார் விபத்தில் இடது கண்ணுக்கு மேலே ஒரு வெட்டுக் காயமும் முகத்திலும் கைகளிலும் சிறு காயங்களும் பெற்றிருந்தார். ஒரு வருஷமாகவே பிரகாஷ் படுகோனுக்கும் உஜ்ஜ்லா கார்காலுக்கும் காதல். அது ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது.

இந்தோனிசிய சாம்பியன் லியம் ஸ்வீகிங், இறுதி ஆட்டத்தில் படுகோன் தம்மை 'மந்திர வசியப்படுத்தியது போல் திக்குமுக்காடச் செய்துவிட்டார்' என்றார்.

பிரகாஷ் படுகோன் ஒன்பது வருஷமாகத் தேசிய சாம்பியன். 'ப்ளூ' ஜுரம் தாக்கியிருந்தும் பூரணகுணம் அடையாத நிலையிலும் இந்த உலக விருதை அவர் பெற்றது தனி விசேஷம்.

பி. எஸ். எம்.

டாக்டர் பேசுகிறார்!

குத்திக் காட்டாதீர்கள்!

சமூகம் பல சமயங்களில் தனி மனிதன் வாழ்க்கையில் சிக்கல்களை ஏற்படுத்தி விடுகிறது.

பின்தங்கிய வகுப்புப் பெண் ஒருத்திக்குப் படிக்க நல்ல வாய்ப்பு. அவளுடைய தந்தை ஆர்வத்தோடு பல வசதிகள் செய்து கொடுத்தார். அவளும் நன்றாகப் படித்துப் பட்டம் பெற்று ஒரு நிறுவனத்தில் நல்ல வேலையும் பெற்றாள். இதுவரை எல்லாம் சீராகப் போய்விட்டது. அடுத்துத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கட்டம் வந்த போதுதான் பிரச்னை எழும்பியது. அவளுடைய ஜாதியில் இவள் அளவுக்குப் படித்த, நாகரிகமான, நாசூக்கான வாலிபன் கிடைக்கவில்லை. அதெல்லாம் பார்க்கக் கூடாது. சொத்துள்ள முறைப் பையனை மணக்க வேண்டும் என்றார் தந்தை. தன்னுடைய அறிவு வளர்ச்சிக்கேற்ற துணைவராக அவர் இருக்க முடியாது என அந்தப் பெண் கருதினாள். இது பெரும் சிக்கலாகிக் கஷ்டம் கொடுத்தது. இதிலிருந்து விடுபட மேஜராகிவிட்ட அவள் துணிந்து தன்னுடன் வேலை செய்பவரை மணந்து கொண்டு விட்டாள். அவர் ஏற்கனவே திருமணமாகி மனைவியுடனும் இரண்டு குழந்தைகளுடனும் இருப்பவர். முதல் மனைவியும் நன்கு படித்தவள். அவளுக்கு இந்தப் பெண்ணின் சங்கடமான நிலை புரிந்தது. பரிதாபம் கொண்ட அவள் 'நிகழ்ந்துவிட்டது இனி என்ன செய்வது?' என நினைத்து மூவரும் இணைந்து போய்விடலாம் என முடிவுக்கு வந்தாள். வீட்டை முதல் மனைவி நிர்வகிக்கிறாள். இரண்டாவது மனைவி கணவருக்கு இணையாகப் பொருளீட்டுகிறாள். இவ்வளவு அமைதியாக எவ்வளவு பேர் செயல்பட முடியும்? மன அமைதி இழந்து தவிப்பவர்கள்தாம் அதிகம். நாளடைவில் மன நோய்க்கே ஆளாகிறவரும் உண்டு.

திருமணத்துக்குத் தேவைப்படும் பணம் மிக மிக அதிகமாக இருக்கிறது. நியாயமாக உழைப்பவன் வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட்டுச் சேமித்தால்கூட ஒரு திருமணத்தைப் பின்னை வீட்டார் எதிர்பார்ப்பது போல், நடத்த முடிவதில்லை. திருமணம் தள்ளிப் போவதாலும், நடக்குமா நடக்காதா என்ற பிரச்னை முளைத்து விடுவதாலும் பெண்களும் ஆண்களும் சற்று இப்படி அப்படி நடக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதற்காக அவர்களைக் குறை கூறுவது நியாயமா? சமூகம் அல்லவா அந்த நிலையில் அவர்களை நிறுத்தி விட்டது!

இன்னொன்று. பெற்றோரின் வற்புறுத்தல், பணத்தாசை போன்றவற்றால் நன்றாகப் படித்த, கெட்டிக்காரப் பெண், அதிக கல்வி அறிவு இல்லாத முட்டாளுக்கு வாழ்க்கைப்பட நேர்ந்து விடுகிறது. இல்லறத்தில் மாட்டிக் கொண்டாலும் தனக்கேற்ற அறிவு வளர்ச்சியுடையவனைப் பார்க்கும்போது அவனிடம் நட்பு வளர்த்துக்கொள்ள அவளுக்குள் ஓர் ஆர்வம் ஓங்குகிறது. இந்த நட்பினால் தவறு ஏற்படாது. ஆனால் சமூகம் இதைப் பெரிது படுத்தி, விகாரப்படுத்திப் பேசும்போது ஏற்கனவே நொந்து போனவள் இந்தத் தாக்குதலால் சித்தப் பிரமை கூட அடைந்துவிடுகிறாள்.

இதேபோல்தான் சில ஆண்கள் நிலையும். பணத்துக்காகவும், வாழ்க்கை முன்னேற்றத்துக்காகவும் ஒரு பெண்ணை மணந்திருப்பார். அவள் இவருடன் இலக்கிய சர்ச்சையோ, பெரிய விஷயங்களை விவாதிக்கவோ லாயக்கு இல்லாதவளாக இருப்பாள். இத்தகைய கருத்துப் பரிமாறலுக்கு அவ




ருடன் பணி புரிபவளோ, காரியதரிசியோ அவருக்கு உதவியாக இருக்கக் கூடும். இந்தப் பற்றுதலைத் தவறாக எடை போட்டு வதந்திகளைக் கிளப்பி ஆபாசமாகப் பேசுவது நாகரிகக் குறைவான செய்கை. இப்படிச் சுற்றியுள்ளவர்கள் பேசும்போது, சம்பந்தப்பட்டவர்களுக்கு இதனால் மனம் பெரிதும் பாதிக்கப்படலாம். கடைசியில் மன நோய் மருத்துவ மனைக்கே செல்ல நேரலாம்.

சமூகம் பிறர் வாழ்க்கையில் அனாவசியமாகத் தலையிட்டுக் குத்திப் பேசக் கூடாது.

டாக்டர்: **சௌரிராஜன்**

பேட்டி: **குயிலி ராஜேஸ்வரி**



கடுகு பதில்கள்

⌘ சுதா மணிமேகலை, வேலூர்

க. அமரர் கல்கியின் வந்தியத் தேவன் தான் இப்போது கபில்தேவாக அவதரித்திருக்கிறார் என்று நினைக்கிறேன். நீங்கள்?

ப: கபில்தேவ் என்ன அவதார புருஷரா? ஆனால் ஒரு விஷயம். சுதா, எனக்கும் கபில் தேவைப் பார்க்கும்போதெல்லாம் வந்தியத் தேவன் நினைவு வருகிறது. அவர் தேவன். இவர் தேவ்!

⌘ கே. எம். இளங்கோ, குப்புச்சிபாளையம்

கே. எவ்வளவு நல்ல கேள்வி கேட்டாலும் வருவதில்லை. அதே சமயம் 'கடுகு' என்ன உளறினாலும் பிரசுரிக்கிறார்களே?

ப: உங்களை உளற வேண்டாம் என்று யாராவது சொன்னார்களா? அல்லது உங்களுக்குத்தான் உளறத் தெரியாதா! ஏன் இந்தத் தன்னடக்கம்?

⌘ குமரேசன், திருவாரூர்

கே. வேதனை தீர்க்கும் மாமருந்து என்று எதைச் சொல்லலாம்.

ப: நித்திரையைச் சொல்லலாம்.

⌘ நரேந்திரகுமார், பாரக்பூர்

கே. தானத்தில் சிறந்தது எது?

ப: ஜோக்காகச் சொன்னால் நிதானம். சீரியஸாகச் சொன்னால் ரத்த தானம். ஓர் உயிரைப் பிழைக்க வைக்க உங்கள் ரத்தம் உதவப் போகிறது என்கிற உண்மையைப் போல் உற்சாகம் தரும் விஷயம் எதுவும் இல்லை என்பதைச் சில மாதங்களுக்கு முன்பு முதல் முதல் ரத்த தானம் கொடுத்தபோது உணர்ந்தேன். கையிலிருந்து ரத்தம் எடுக்கப்படும்போது உடலில் லேசாக மின்சாரம் செல்வது போல் இனிமையான உணர்வு. ரத்தம் கொடுப்பதற்கு முன்புதான் சற்று யோசனையாக இருக்கும். ஒரு தரம் கொடுத்துவிட்டால் தயக்கம் நீங்கி அடிக்கடி ரத்தம் கொடுக்கும் ஆர்வம் வரும். என்னுடைய ஆசையெல்லாம் நம் இளைஞர்கள் ரத்தம் கொடுப்பதை ஒரு முக்கிய பணியாக வைத்துக்கொள்ள வேண்டும். ஏன், ஒரு ஃபாஷனுக்குக் கூட வைத்துக் கொள்ளலாம்.

⌘ இரா. பார்த்திபன், வயலூர்

கே. வறுமை, அறியாமை, இல்லாமை, பற்றாமை, தீண்டாமை, - இவைகளை என்ன செய்ய வேண்டும்?

ப: இவை யாவும் 'ஆமை'கள்! சமுதாயம் என்னும் வீட்டில் இவைகளைப் புக விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நாடு முன்னேற இந்த 'ஆமை'கள் ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

⌘ டி. ஐ. தாகூர், கன்னியாகுமரி

கே. பதினொன்று கட்சி கூட்டணியின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ப: இப்படி எல்லாம் ஆருடம் சொல்ல எனக்குத் தெரியாது. ''கை''யைப் பார்த்துத்தான் சொல்ல முடியும்!

⌘ எல். கப்பலட்சுமி, புதுடில்லி-3

கே. கடுகாரே, உங்கள் தலையில் வெண்ணெய் வைத்தால்...

ப: மகிழ்ந்து போக மாட்டேன். கையில் கொடுத்தால் சந்தோஷப்படுவேன். மாதா மாதம் இரண்டு கிலோ கொடுத்தால் போதும். நல்ல வெண்ணெயாக இருக்கட்டும்!

⌘ எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

கே. நெருப்பில்லாமல் புகைவது வதந்தி. புகையில்லாமல் எரிவது என்ன?

ப: பொறாமைக்காரர்களின் வயிறு.

⌘ பரணி, பெங்களூர்-21

கே. சினிமா உலகில் உங்களுக்குப் பிடித்தமான நடிகை யார்?

ப: மனோரமாதான். திறமை வாய்ந்த ஆர்ட்டிஸ்ட் அவர்.

⌘ மதனகோபாலன், புதுகாலனி-600032

கே. தில்லானா மோகனாம்பாளைப் பெருந்தலைவர் மகேந்திரனே டைரக்ட் செய்திருந்தால் எப்படி இருந்திருக்கும்?

ப: நன்றாக இருந்திருக்காது. காரணம், எழுத்தாளர் மகேந்திரன் எங்கெங்கோ

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

''என் வீட்டுக்காரி 'டிட்டர்ஜெண்ட்' சோப்பு போட்டுத் தினம் என்னையே துவைக்கச் சொல்றாள்!''

''ஏன்?''

''கணவனைத் தவிர மற்ற 'ஜெண்ட்' களைத் தொடமாட்டாளாம்!''

அ. இராமதாஸ்





பயணம் செய்வார். ஆனால் டைரக்டர் மகேந்திரன் சில பிரதேசங்களில்தான் போவார். (அல்லது சில பகுதிகளுக்குப் போகவே மாட்டார்.) ரிஷி மூலம் டைரக்டரின் ஆரோக்கியத்துக்கு உகந்த ஸ்தலம் அல்ல.

⌘ எஸ். முத்துகுமாரசுவாமி, பவானிசாகர்
கே. தமிழ்ப் பத்திரிகைகள் எழுத்தாளர்களை நம்பியிருக்கிறதா? ஓவியர்களையா?
ப: பெரும்பாலானவை சினிமாவை!

⌘ ஜி. குப்புசாமி, காட்பாடி
கே. 'ஆண்மைச் சிறப்பிதழ்'த் தங்கள் பொறுப்பில் கல்கி வெளியிடுமா?
ப: அவர்கள் வெளியிடத் தயாராக இருந்தாலும் நான் பொறுப்பேற்க ஒத்துக் கொள்ள வேண்டாமா?என் மனைவி என்ன சொல்வாளோ?

⌘ காடன் குளம் கோபி, மதுரை-16
கே. கவிதை வடிக்கக் கையில் பேனாவை நான் எடுத்தால் கண்ணீர் தான் வருகிறது. விழிநீர் வற்றிட நான் என்ன செய்ய வேண்டும்?
ப: பரவாயில்லையே. வேறு சிலர் கவிதை எழுதினால் வாசகர்கள் கண்ணில்தான் நீர் வருகிறது.
உங்களுக்கு விழிநீர் வராது தடுக்க ஒரு வழி: பேனாவைக் கையில் எடுக்காதீர்கள்!

⌘ ஜி. ரகுபதி, மணலூர் பேட்டை
கே. என்னைப்பற்றிக் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா?
ப: என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? நோபல் பரிசோ ஞான பீட விருதோ பாரத ரத்னா பட்டமோ ஏதோ ஒன்று பெற்றவராகிய உங்களைப் பற்றிக் கேள்விப்படாமல் இருக்க முடியுமா?

⌘ என். சேதுராமன், கொடுமுடி
கே. வரவர ரேடியோப் பாடல்கள், சினிமா, கதைப் புத்தகங்கள் எல்லாம் போர் அடிக்கின்றனவே. என்றும் வாழ்க்கையில் சுவாரஸ்யம் தரக் கூடியது எது?
ப: ''கடுகு பதில்கள்''. இது என் அனுபவத்தில் அறிந்த உண்மை!

⌘ எம். சாம்பமூர்த்தி, ஆரணி
கே. வெளியே காட்டிக் கொள்ள முடியாமல் சந்தோஷப்பட்டது உண்டா?
ப: உண்டு. எஸ். எஸ்.எல்.சி. பரீட்சைத் தாள்கள் ரகசியமாக எனக்கு முன்னதாகக் கிடைத்த போது. (துரதிர்ஷ்டம், இப்படி வெளியே காட்டிக்கொள்ளாமல் சந்தோஷப்பட்டவர்கள் ஆயிரக் கணக்கில் இருந்ததால் மறு பரீட்சை எழுத வேண்டி வந்தது!

⌘ கே. முருகேசன், மதுரை-625001
கே. கட்சிக்குச் சோதனை வரும்போது 'வெட்டிக்' கொள்வதும், சாதனை வரும்போது 'ஒட்டி'க் கொள்வதும் நல்ல ஆரோக்கியமான அரசியலா?
ப: அரசியல்வாதிகளின் ஆரோக்கியத்துக்கு இது நல்லது என்று கூறலாம்.


⌘ சுதாமணிமேகலை, வேலூர்
கே. வள்ளிமலையில் சத்திரம் கட்ட நன்கொடைக்கு வரலாம் என்று இருக்கிறேன். எப்போது வந்தால் தங்கள் தரிசனம் கிட்டும்?
ப: சத்திரம் கட்டி முடிந்த பிறகு. நிதி தேவையில்லை என்ற நிலை ஏற்பட்ட பிறகு!

⌘ பி. கே. விஜயகுமார், ஈரோடு
கே. விமானத்தில் பயணம் செய்திருக்கிறீர்களா?
ப: ஓ! முதல் முதல் பயணம் செய்தபோது நான் டில்லியிலிருந்து கல்கத்தாவுக்குப் போக என் பெட்டி சென்னைக்குப் போய் விட்டது. இரண்டாவது தடவை டில்லியிலிருந்து சென்னைக்குக் கிளம்பினேன். நாக்பூருக்கு மேல் பிளேன் போகவில்லை. திரும்ப டில்லிக்குப் போகிறதாக இருந்தால் போகலாம் என்றார்கள். நான் மட்டும் டில்லிக்குத் திரும்பினேன் அதே பிளேனில். அது இரவு நேர சர்வீஸ். நிம்மதியாக நாலைந்து கம்பளிகளை நடை வழியில் போட்டுத் தூங்கினேன். முதன் முதலில் விமானத்தில் இப்படிப் படுத்துச் சென்ற தமிழன் நானாகத்தான் இருக்கும்.

⌘ ஆர். முரளி, கும்பகோணம்
கே. மகாமகத்திற்கு எங்கள் ஊருக்கு வந்தீர்களா?
ப: வந்திருப்பேன். குளிக்க வேண்டுமாமே. அதனால் பயந்து வரவில்லை.

ரூ. 5 பரிசு பெறுபவர்:

எம். சாம்பமூர்த்தி
49, பாரதியார் தெரு,
ஆரணி-632301.



...கண்ணதாசன்... கடைசிபக்கம்....

எல்லோருக்கும் சுய சரிதம் இருக்கிறது. பலரால் அதை எழுத முடிவதில்லை; அவ்வளவுதான்.

அன்றாடம் வீடு தேடும் பிச்சைக்காரனுக்குக்கூடப் பல வீடுகள், மனிதர்களைப் பற்றிய அனுபவம் இருக்கிறது.

நாய்க்குப் பேசத் தெரிந்தால் நாலாயிரம் கதைகள் சொல்லும். சுமைதாங்கிக் கல்லைத் தொட்டுக் கேட்டால் தன்மீது இறக்கப்பட்ட சுமைகளின் தாராதரத்தை விமர்சிக்கும். போயர் யுத்தத்தின்போது சர்ச்சில் ஏறிச் சென்ற குதிரைக்குக் கூட இப்போது பேரன் பேத்திகள் இருக்கலாம். உலக யுத்தத்தில் கையிழந்த ஒரு ஜெர்மானியர் அன்று என்னோடு விமானத்தில் வந்தார். அவரது சுயசரிதத்தில் எத்தனை காட்சி மாற்றங்களோ?

காந்திக்குத்தானா 'சத்திய சோதனை' எழுதத் தெரியும்? காரமங்கலம் சுப்பையா ஒரு சத்திய சோதனை எழுத மாட்டாரா? ஒரு மார்வாரியின் சுய சரிதம், அவரது பேரேட்டில் இருக்கிறது. ஒரு நல்ல மனைவியின் சுய சரிதம் அவளது கணவனின் பிரகாசமான முகத்தில் இருக்கிறது.

ஒரு கெட்ட மனைவியின் சுய சரிதம், இருள் சூழ்ந்த அவளது வீட்டின் சுவர்களில் எழுதப்பட்டிருக்கிறது. ஒரு விலைமகளின் சுயசரிதம் அவள் உடம்பில் வரையப்பட்டிருக்கிறது.

அரசியல்வாதியின் சொற்பொழிவைத் தலைகீழாக மாற்றி எழுதினால், அது அவனது உண்மையான சுய சரிதமாக இருக்கும்.

ஈ, எறும்புக்குக் கூட சுய சரிதம் இருக்கிறது.

நடக்கத் தெரிந்தவனும், ஊமை இல்லாதவனுமான ஒரு மனிதனுக்குச் சுய சரிதம் இல்லை என்றால், அவன் படுத்த படுக்கையிலேயே கிடக்கிறான் என்று பொருள்.

திரௌபதி, கர்ணனை நேசித்ததை வெளிப்படையாகச் சொல்லி விட்டாள். எல்லாப் பெண்களின் அந்தராத்மாவும் பேசத் தொடங்கினால் கண்ணகிகள் குறைவாகவே இருப்பார்கள்.

ரகசியங்களைப் பதுக்கி வைக்கத்தானே இருதயம் உள்ளேயே வைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் நான் ஒரு மாதிரி. எல்லா விஷயங்களையும் கொட்டிவிடுவதே என் ஆசை.

நானே இன்னும் சிலவற்றை மறைத்து வைக்க வேண்டியிருக்கிறது. என்றால் மற்றவர்கள் நிலை என்ன?

குப்பைத் தொட்டி வீட்டுக்கு வெளியே இருந்தாலும், மோசமான மனைவியையோ, குழந்தையையோ, நண்பனையோ அதில் தூக்கிப் போட்டுவிட முடிவதில்லை.

அந்தரங்கத்தில் புனிதமானவை, மோசமானவை என்று இரண்டு உண்டு. அந்தத் தத்துவங்களை அள்ளித் தெளிக்கவே மீண்டும் இந்தக் கடைசிப் பக்கத்தில் வந்து நிற்கிறேன்.

வைத்தியன் மாத்திரையைக் கொடுத்து என்னைத்தான் சோதிக்கிறானே தவிர, தன்னை அல்ல. நானும் உங்களையே சோதிக்கப் போகிறேன்.

உங்களிலே எவ்வளவு பேருக்கு அழத் தெரியுமோ? அழுங்கள். எவ்வளவு பேருக்குச் சிரிக்கத் தெரியுமோ சிரியுங்கள்.

நான் போடுவன கோலங்கள்; அவற்றை நிர்ணயிக்க வேண்டுவன காலங்கள்.

பரமாத்மா போருக்குப் புறப்படும்போது, பாமா, ருக்மிணி, ராதாவிடம் கேட்டுக்கொண்டு புறப்படவில்லை.

பார்த்தன் தேரில் உட்கார்ந்து அழுதது, பாண்டவர்கள் தூண்டிவிட்டதால் அல்ல.

சீதையைக் காதலிக்கும்படி ராமனுக்கு முனிவர் ஏதும் கூறவில்லை.

அகலிகையைக் கெடுத்துவிட்டு வரும்படி, இந்திரனுக்கு யாரும் புத்தி சொல்லி அனுப்பவில்லை.

தேசிங்கு ராஜன் மனைவி தீக்குளித்தது, கணவன் விரும்பியதாலல்ல.


அம்பிகாபதி — அமராவதி காதலுக்குக் கம்பனும் காரணமல்ல; சோழனும் காரணமல்ல.

அவரவர் மனோதர்மம் செயல்பட்டபோது, அது வரலாறாகவும், தத்துவமாகவும் வந்து விழுந்திருக்கிறது.

என் மனோதர்மம் செய்யப் போகும் வேலையும் அதுதான்.



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. Editor: K. Rajendran



ஓ லைலா... லைலா...
எங்கேயிருக்கிறாய்
எனதருமை லைலா...
அடுத்த அறையில்தான்
அன்பே, கொசுக்களின்
முத்த மழைக்கிடையே
இருக்கிறேன்.
உங்கள் வாழ்வில் காதல் மலரட்டும்,
கொசுக்கள் மறையட்டும்.
டார்டாய்ஸ் கொசு
வர்த்திச் சுருள்
எல்லாப் "பொருள்" விலைகளும்
உயர்வு?! நல்லவேளை
சுருள் விலைங்கிற மாதிரி
கேட்டுச்சு!
எல்லாப்
பொருள்
விலைகளும்
உயர்வு
கொசுக்களை விரட்ட சிக்கனமான வழி
டார்டாய்ஸ் கொசு
வர்த்திச் சுருள்
காணவில்லை
அன்பு மகனே,
வீட்டிற்கு திரும்பிவா கண்ணே!
வீட்டிலிருந்த
கொசுக்களையெல்லாம் இப்போது
விரட்டியடித்துவிட்டோம்.
உன் அன்புத்தாய்
டார்ட்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்
கொசுக்களை விரட்டுகிறது, மனிதர்களை அல்ல.
டார்டாய்ஸ் கொசு
வர்த்திச் சுருள்
டார்டாய்ஸ் கொசு
வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
..போர்ட், பம்பாய்-400 023. ..போன்: 273831

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேசியக் காசு